ரகுவம்சம்

காஞ்சீபுரம் ஸம்ஸ்கிருத பாடசாலை தலைமை உபாத்தியாயராகிய

ச. ஸ்ரீசைல தாதாசாரியார்

எழுதியது

MACMILLAN & CO., LIMITED
MADRAS, BOMBAY, CALCUTTA AND LONDON
1919

Price, 5 Annas] [விலை, அணா ௫

இது மஹா காவ்யங்களுள் ஒன்று. இதை இயற்றியவர் காளிதாஸ மஹாகவி. இவரது வரலாற்றைப் பற்றி நிச்சயமாய் யாதொன்றும் ஏற்படவில்லை. இவர் ஸாங்கியமதப் பற்றுள்ளவரென்று சிலரும் அத்வைதமதக்கொள்கை யுடையவரென்று சிலரும் சைவரென்று சிலரும் நினைக்கிறார்கள். இவரது நூல்களின் போக்கினால் இவர் ஸமரஸபாவம் உள்ளவரென்று நினைக்க இடமிருக்கிறது.

இவர் விக்ரமார்க்கனது ஸபையில் இருந்ததாகப் ப்ரஸித்தியுண்டு. விக்ரமார்க்கனது சகாப்தம் வடதேசத்தில் வழங்கி வருவதால் கி. மு. 57–க்கு காளிதாஸன் காலம் கொள்ளவேண்டும். இவர்செய்த சாகுந்தளத்திலுள்ள ஒரு ச்லோகத்தின் பாதியை குமாரிலபட்டர் எடுத்துக் காட்டியிருப்பதாலும் குமாரிலபட்டர் காலம் ஆதிசங்கராசாரியர் காலத்திற்குச் சமமாகையாலும் ஸுதந்வா என்னும் அரசனால் ஆதிசங்கராசாரியருக்குக் கொடுக்கப்பட்ட தாம்ரசாஸநத்தில் யுதிஷ்டிரசகம் 2663 என்று குறிக்கப்பட்டிருப்பதாலும் இப்போது யுதிஷ்டிரசகம் 5019 ஆகையாலும் கி. மு. ஐந்தாவது நூற்றாண்டில் ஸ்ரீ ஆதிசங்கராசாரியர் அவதாரமென்று கொள்ளவேண்டுகையாலும் அதற்கு முன்பே காளிதாஸன் இருந்திருக்கவேண்டும் மாளவிகாக்நிமித்ரீயமென்னும் நாடகத்தின் முடிவுரையின் போக்கைப் பார்க்கும்போது அக்நிமித்ரனென்னும் அரசன் காலத்தில் காளிதாஸன் இருந்ததாக ஏற்படுவதாலும் விஷ்ணுபுராணப்படி அக்நிமித்ரன் காலம் கி. மு. பதினைந்தாவது நூற்றாண்டாகிறபடியாலும் காளிதாஸன் காலமும் அதுவேயென்று சொல்லும்படிக்கும் இருக்கிறது.

இவர் மிகப் ப்ரஸித்திபெற்ற கவி. இங்கிலீஷில் மிகப் ப்ரக்யாதி பெற்ற ஷேக்ஸ்பியரை இவர் பெயரால் ஒப்பிடுவது வழக்கம். இவரது கிரந்தங்களின் நடை வெகு லலிதம். அலங்காரங்களில் உவமை வெகு அழகாகச் சொல்லப்படும். அபிப்ராயம் மிகவும் கம்பீரமானது.

மூலத்திலுள்ள குணங்கள் மொழிபெயர்ப்பில் காண்பது கடினம். பாஷைப்போக்கால் பல மாறுதலையடையும். ஆயினும் சாத்தியமான வரையில் அபிப்ராயங்களை வெளியிட்டு முக்கியமான இடங்களில் உவமைகளைக் காட்டி இம்மொழிபெயர்ப்பு எழுதப்பட்டிருக்கிறது.

ரகுவம்சம்.

நியாயமுறைப்படி ஜனங்களைப் பரிபாலித்து வருவதற்காகக் கடவுளால் க்ஷத்திரியஜாதி யேற்படுத்தப்பட்டது. ஸூர்ய வம்சத்தோரென்றும் சந்திரவம்சத்தோரென்றும் அவர்கள் இரண்டு பிரிவாக ஏற்பட்டார்கள்.

ஸூர்யனுடைய குமாரர் மனுசக்கிரவர்த்தி. அவருக்கு வைவஸ்வதமனுவென்று பெயர். இவர்தான் முதலாவது அரசர். இவரது ஸ்மிருதி இன்னும் பேர்பெற்ற சட்டமாக விளங்குகிறது. இது முக்கியமான தர்மசாஸ்திரமாக மதிக்கப்படுகிறது.

இவரது வம்சத்தில் திலீபனென்னும் ஒரு அரசன் இருந்தார். குலத்துக்கேற்ற பெருமையும் புகழும் உண்மையும் ஜனங்களிடத்தில் அபிமானமும் முதலிய எல்லா நற்குணங்களும் அவரிடம் குடிகொண்டிருந்தன.

விசால்மான மார்பும் உன்னதமான தோள்களும் முழங்கால்வரை நீண்ட கைகளும் காதுகள் வரையில் அகன்ற கண்களுமாய் அவர் காணப்படுவது அரசர்களுக்குரிய தர்மமே தனக்கேற்ற ஒரு தேஹத்தை யெடுத்துக்கொண்டுவந் துலாவுகிறதென்று நினைக்கும்படி யிருக்கும்.

சரீரத்திற்குத்தக்க புத்தியும் புத்திக்குத்தக்க படிப்பும் படிப்புக்குத்தக்க முயற்சியும் முயற்சிக்குத்தக்க பலமு (காரிய சித்தியு)மாய் அவர் வாழ்ந்து வந்தார்.

பெருங்கடலில் விலையுயர்ந்த ரத்னங்க ளிருப்பதினாலே கிட்டி நெருங்க வேண்டியும் முதலை முதலிய கொடிய ஜந்துக்கள் இருப்பதினாலே ஸமீபம்போகப் பயப்பட வேண்டியும் இருப்பதுபோல், இரக்கம் அன்பு முதலிய குணங்களால் ஸுகமாய் நெருங்கும்படியாயும் வீர்யம் ப்ரதாபம் முதலிய குணங்களால் கிட்டப் பயப்படும்படியாயும் அவர் இருந்தார்.

கைதேர்ந்த ஸாரதியால் செலுத்தப்படும் தேரின் சக்கிரங்கள் பழைய பாதையை விட்டு அணுவளவும் மாறுபடாது

நடப்பதுபோல இவர் அரசாட்சிக்குட்பட்ட ஜனங்கள் மனு சக்கிரவர்த்தி முதலாக ஏற்பட்ட ஆசாரத்தில் அணுவளவும் மாருது நடந்து வந்தார்கள்.

ஆயிரம்பங்கு அதிகமாக மழை வர்ஷிப்பதற்காக ஸூர்யன் ஜலத்தை வாங்கிக்கொள்வதுபோல இவரும் ஜனங்களிடத்தில் தீர்வையை வாங்கிக்கொண்டார்.

சாஸ்திரங்களில் தேர்ச்சியும் வில்லில் பூட்டிய நாணும் இவ்விரண்டுமே இவருக்குத் தனத்தை சேகரித்துக்கொள்ள ஸாதனமாயிருந்தது. சேனைகள் அரசாங்க முறைமைக்குரிய ஒரு ஆடம்பரம் மாத்திரமாய்த் தீர்ந்தது.

ராஜநீதிப்படி மந்திராலோசனையை வெகு ரஹஸ்யமாக வைத்துக்கொள்வது ஆகாரங்களை மறைத்துக்கொள்வது இவைகளில் வல்லமை பெற்றிருந்ததுபற்றி இந்த ஜன்மத்தில் அநுபவிக்கும் ஸுகதுக்கங்களைக் கொண்டே முன்ஜன்மத்தில் அவரவர் செய்த புண்ய பாபங்களை ஊஹித்துக் கொள்ள வேண்டியிருப்பதுபோல அவரது முயற்சிகள் எல்லாம் காரிய சித்தியைக்கொண்டே ஊஹிக்கக் கூடியவைகளாயிருந்தன.

சத்துருபயமென்பது கொஞ்சமுமில்லையா யிருந்தும் வெகு ஸாவதானமாய் அவர் தன் தேஹத்தைப் பாதுகாத்து வந்தார். (தர்மம் செய்வதற்கு முதல் உறுப்பு தேஹமே யல்லவா?) ரோகமில்லா திருந்தும் தர்மங்களைச் செய்துகொண்டிருந்தார். (தர்மத்தை யெப்போதும் செய்வதே புத்திமான்களின் கடமை.) அபிநிவேசமில்லாமலே நியாயமான வரையில் தனத்தைச் சேகரித்து வந்தார், பற்றில்லாமலே கிரமமான ஸுகங்களை யநுபவித்தார்.

எல்லாரையும்விட மேலான ஞானமிருந்தும் ஒன்று மறியாதவர்போல் மௌனமாயிருப்பதும், பெரிய சக்தியிருந்தும் பொறுமையாயிருப்பதும், வேண்டியவரையில் கொடுக்கும் தானமிருந்தும் தற்புகழ்ச்சி யில்லாமலிருப்பதும் அவரிடத்திலிருந்தது பெரிய கௌரவத்துக் காரணமாயிருந்தது.

படித்தறியவேண்டிய எல்லா வித்தைகளிலும் தேறி விஷயங்களில் ஆஸக்தி யில்லாமலே தர்மமே கண்ணாக நடந்து வந்தப்படியால் இளம் வயதிலேயே இவர் ஞான வ்ருத்தரென்று பெயர்பெற்று விளங்கலானார். நல்வழி நடத்துவது ரக்ஷிப்பது

போஷிப்பது முதலியவைகளை எல்லா ஜனங்களுக்கும் இவரே நடத்தி வந்த படியால் இவரே பிதாவாக மதிக்கப்பட்டார். அவரவர் பிதாக்களோ பிள்ளைகளைப்பெற்ற மாத்திரமே

நீதிமுறை வழுவாது தீர்வை வசூல்செய்து யாகம் செய்வது இவரது காரியமாயும் காலத்தில் மழை பெய்யச்செய்து பயிர் விளையச்செய்வது தேவேந்திரனது காரியமாயும் இப்படியிருவரு மொருவர்க்கொருவர் உபகாரம் செய்துகொள்வதால் இரண்டு லோகமும் ஸந்தோஷத்தோ டிருக்கும்படி செய்து வந்தார்கள்.

தனக்குச் சத்துருவே யானாலும் யோக்கியனானால் அவன் நோயாளிக்கு மருந்துபோலே ஆதரவோடு ஏற்றுக்கொள்ளத் தக்கவனாகவும், எவ்வளவு வேண்டியவனா யிருந்தாலும் அயோக்கியதை யேற்பட்டால் பாம்புகடித்த விரல்போல உடனே தெறித்தெறியத் தக்கவனாகவும் அவ்வரசன் கொண்டான்.

இப்படி மஹாகுணசாலியா யிருந்தமையால் இந்நாலு ஸமுத்திரமும் அகழியாகவும் சக்கிரவாளமலையே மதிள் சுவராகவும் அமையப்பெற்ற இப்பூமி முழுவதையும் ஒரு சிறு ஊரை யரசுபுரிவதுபோல வெகு எளிதில் அரசாட்சி செய்து வந்தான்.

இத்திலீபனுக் குண்டாகிய யசஸ்ஸை முன்னால் அரசாண்டவர்கள் யாரும் அடையவில்லையென்று நிச்சயமாய்ச் சொல்லலாம். ஏனென்றால் அவர்கள் அரசாட்சி காலத்தில் திருடு இருந்து தண்டிக்கவேண்டியிருந்தது, இவரது அரசாட்சியிலோ * திருடு என்பது சொத்தினிடத்தி லில்லாமல் பேரிலேயே யிருந்துவிட்டதல்லவா?

அரசர்களின் வழக்கப்படி இவர் பல பாரியைகளை விவாஹம் செய்துகொண்டிருந்தார். மகததேசத்தரசன் மகளாகிய ஸுதக்ஷிணை யென்பவள் பட்டமஹிஷியா யிருந்தாள். இவள் எல்லா வகையிலும் இவ்வரசனுக் கேற்றவள்.

இப்பட்டமஹிஷியிடத்தில் தனக்கொரு புத்திரபாக்கியம் உண்டாகுமோ வென்று அவ்வரசன் வெகுநாள் எதிர்

* திருடு என்பது எங்கே யிருக்குமோ அது காணப்படாதுபோம். தன்பேரி லிருப்பதனால் திருடு என்னும் சொல்லே எங்குமில்லாமல் இருந்ததென்று கருத்து.

பார்த்துக்கொண்டிருந்தும் அப்பாக்கியம் கிடையாமலே தாமதித்து வந்தது. அதனால் அரசன் மனநொந்து ஸந்தானம் பெறவேண்டியதற் குரியவைகளைச் செய்யவேண்டியதற்காக இதுவரையில் தன் புஜத்திலேந்திச் சுமந்துவந்த அரசாட்சிச் சுமையை மந்திரிமார் வசம் ஒப்புவித்துவிட்டு சாஸ்திரம் கூறிய முறைப்படி ப்ருஹ்ம தேவனைப் பூஜித்துப் பத்நியோடு கூடிக் குலகுருவாகிய வஸிஷ்ட மஹாருஷியின் ஆச்சிரமத்திற்குப் புறப்பட்டார்.

மிருதுவாயும் கம்பீரமாயும் சப்திப்பதும் மேடு பள்ளங்களில் ஸுகமாயிருப்பதுமாகிய ஒரு தேரில் இருவரும் ஏறிக்கொண்டு நடந்தார்கள். ஆச்சிரமத்திற்குப் பீடை நேரிடாதிருக்கவேண்டி அதிக சேனையைக் கூட்டிப்போகாமல் அதிக அல்பமான (எண்ணிக்கை) ஸங்கியையில் ஆவசியகமான ஆள்களை மாத்திரமே கூடக் கூட்டிக்கொண்டு போனார்களென்றாலும் பார்க்கும்போது பெரிய சேனையோடு போவதுபோலவே அவர்களது தேஜஸ்ஸினால் தோன்றியது.

சுபசகுனமாக இளங்காற்று மிருதுவாய் வீசியது. புஷ்பங்களின் வாஸனையும் இலைமரங்களின் பிசினீரமுமாய் அநுகூலமாய் வீசும் அக்காற்றினால் வழியில் சிரமந்தெரியாமலே தேர்மேலேறிச் சென்றார்கள்.

தேர் சக்கிரத் தோசையை மேகங்களின் சப்தமாக நினைத்து மயில்கள் கேகா என்று கூவியாடத் தொடங்குவதையும், தாங்கள் தானம்செய்த கிராமத்திலுள்ள பிராமணர்கள் யாகசாலையிலிருந்து அர்க்கிய ஜலத்தை யெடுத்துக்கொண்டு ஆசீர்வாதம் செய்ய வருவதையும், தேரைப்பார்த்து வெருண்டு வழியை விட்டு விலகி மான்கள் ஆணும் பெண்ணுமாய்த் தங்கள் கண்களுக் கொப்பாகிய கண்பார்வையோடு நிற்பதையும் பார்த்துக்கொண்டும், தாமரைத் தடாகங்களில் அலர்ந்த மலர்களின் வாஸனையோடு வீசும் காற்றினை மோந்துகொண்டும், எதிராக வீசாமல் மிருதுவாகப் பின்புறமாய்க் காற்று வீசுவதில் குதிரைக்குளம்பினால் உண்டாகும் தூள்கள் நெற்றியில் படாதபடி தேரிலே சென்றார்கள்.

சில இடங்களில் ஆகாயத்தில் ஸாரஸபக்ஷிகள் வரிசையாய்ப் பறந்து போகும்போது கால் நாட்டாத தோரணம்

கட்டியது போலிருக்கும் அழகைத் தலைநிமிர்ந்து பார்த்துக் கொண்டும் அன்றுருக்கிய நெய்யை உபஹாரமாக எடுத்துக் கொண்டு தங்களைப்பார்க்கவேண்டி வந்திருக்கும் இடைக் கிழவர்களை வழியை யடுத்திருக்கும் காட்டுமரங்களின் பேர் களைக் கேட்டுத் தெரிந்து கொண்டும் சென்றார்கள்.

இவ்விராஜ தம்பதிகள் இருவரும் செல்லும்போது சித்தி ரை மாதத்துப் பௌர்ணமியன்று ஆகாய மார்க்கத்தில் சித்தி ரை நக்ஷத்ரத்தோ டிலவும் பூரண சந்திரன்போல் விளங்கினார் கள். வழிமுழுதும் அங்கங்கு காணப்படும் அதிசயங்களைப் பத்நிக்குக் காட்டிக்கொண்டே சென்றமையால் இவ்வளவு தூரம் வந்தோமென்று தெரிந்துகொள்ளாமலே அன்று மாலை குருவின் ஆச்சிரமம் போய்ச் சேர்ந்தார்கள்.

பகலில் ருஷிகள் காட்டிற்குப்போய் ஸமித்து தர்ப்பம் பழங்கள் சேகரித்துக்கொண்டு மாலை திரும்பும்போது அவ ரவாது த்ரேதாக்நிகள் அயலோர்கள் கண்களில் படாமல் அவர்களை யெதிர்கொள்வதும், அங்குள்ள பர்ணசாலைகளி லெல்லாம் ருஷிபத்நிகளால் பிள்ளைகள்போல் வளர்க்கப் பட்ட மான்குட்டிகள் நிரம்பியிருப்பதும், அங்கே செடி களுக்குத் தண்ணீர் கொட்டும் ருஷிகன்னிகைகள் பாத்தியில் தண்ணீர் தேங்கிய உடனே அதைப் பக்ஷிகள் வந்து வெருளா மல் குடிப்பதற்காகத் தூர விலகிப்போய் நிற்பதும், வெயிலில் உலர்த்தி மாலைப்பொழுதில் குவித்துச் சேர்க்கப்பட்ட செந் நெல் தானியங்களின் ஸமீபத்தில் படுத்துக்கொண்டு மான்கள் அசைபோட்டுக் கொண்டிருப்பதுமாய் இருந்த அந்த ஆச்சிர மத்தில் அதிதிகள் மனம் உல்லாஸ மடையும்படி அந்த மாலைப் பொழுதில் நெய்யில் பாகஞ்செய்யும் பண்டங்களின் பரிமளம் வெகு தூரம்வரையில் வீசிக்கொண்டிருந்தது. ஆச்சிரம சமீ பம்போனதும் திலீபராஜன் குதிரைகளை யிளைப்பாறச்செய் யும்படி ஸாரதிக்குத் திட்டம்செய்து பத்நியை முதலில் தேரி லிருந்து இறக்கிப் பிறகு தானும் இறங்கி ஆச்சிரமத்தை நோக் கிச்சென்றார்.

பத்நியுடன் கூடவந்த அரசனுக்கு அவ்வாச்சிரமத்தி லுள்ள ருஷிகள் முறைப்படி உபசாரம் செய்தார்கள்.

அப்போது ஸாயங்கால ஸமயமாயிருந்தபடியால் குருவா கிய வஸிஷ்டபகவான் ஜபம் ஹோமம் முதலிய அநுஷ்டா



குருதம்பதிகள் ராஜ தம்பதிகளை வரவேற்றல்.

னத்திலிருந்தார். அநுஷ்டானம் முடிந்ததும் பதிவ்ரதா சிரோமணியாகிய அருந்ததி தேவியோடு வீற்றிருந்த குருவை ராஜதம்பதிகள் சந்தித்து வந்தனம் செய்தார்கள். குருதம்பதிகள் அதிதிகளாய் வந்த ராஜதம்பதிகளை வெகு அன்புடன் வரவேற்று ஆசீர்வாதம் செய்தார்கள்.

வழியில் தேர் குலுங்குவதால் நேர்ந்த ஆயாஸமெல்லாம் குருவின் உபசரணையால் நீங்கப்பெற்று ஸுகமாய் வீற்றிருந்த ராஜாவைப் பார்த்து வஸிஷ்ட மஹர்ஷி முதலில் ஆரோக்கியமா என்று கேட்டுவிட்டு ராஜ்யத்தில் எல்லாம் க்ஷேமமா என்று விசாரித்தார்.

வேதமந்திரங்களில் வல்லமைப்பெற்ற மஹர்ஷியின் முன்னே சத்துருக்களை வென்று அடக்கும ஸாமர்த்தியமுடையவரும் பேசுந்திறம் படைத்தவர்களில் முதன்மையான வருமாகிய திலீபமஹாராஜன் இவ்வாறு பணிவாய்ப் பதில் கூறுவாரானார்.

"குருநாதா! தெய்வ மூலமாகவும் மனுஷ்ய மூலமாகவும் நேரிடக்கூடிய ஆபத்துக்களை யெல்லாம் போக்கியருளத் தாம் சித்தமாயிருக்கும்போது எனது ராஜ்யாங்கங்களில் க்ஷேமத்துக்குக் குறைநேரக் காரணமென்ன? எனது பாணங்கள் எதிரே காணப்படுமவரை மாத்திரமே வெல்வதா யிருப்பதால் தூரஇருந்தே எதிரிகளை பழிக்கும் தமது மந்த்ரசக்திக்குச் சரியாகாதன்றோ? சாஸ்திரமுறைப்படி தாங்கள் எனக்குப் புரோஹிதராய் குருவாய், காலத்தில் யாகங்கள் செய்விப்பதால் எனது ராஜ்யத்தில் க்ஷாமமே யில்லாமல் எப்போதும் குறையாமல் மழை பெய்துகொண்டே யிருக்கிறது. எனது அரசாட்சிக்குட்பட்ட எல்லா ஜனங்களும் தீர்க்காயுஸ்ஸுக்களாய் எவ்வித பயமும் பீடையு மில்லாமல் ஸுகமாய் வாழ்வது தங்கள் பிரம்மதேஜஸ்ஸின் பலமே யன்றோ? ப்ருஹ்ம தேவனுடைய புத்திரராகிய தாம் இப்படி அநுக்கிரஹம் செய்யும்படியான பாக்கியம் எனக்குக் கிடைத்திருப்பதால் எப்போதும் ஒரு ஆபத்தும் இல்லாமல் மேல்மேல் ஸம்பத்தே வளர்ந்து வருகிறதற்குத் தடை யாது?

"ஆனாலும் தமது அடிமையாகிய இவள் வயிற்றில் ஒரு புத்திரன்கூடப் பிறவாதிருப்பதைப்பற்றி எந்த ஸுகமும்

ஸுகமாகத் தோன்றவில்லை. எனக்கு மேலே அங்குரமில்லாதபடியால் இனி பிண்டம் போடுகிறவர்கள் இல்லையன்றோவென்று துக்கித்துக்கொண்டே எனது பிதுருதேவதைகள் சிராத்த போஜனத்தை யேற்றுக்கொள்ளுகிறார்கள். இனி நமக்குத் தர்ப்பணம் செய்வோர் இல்லையல்லவா வென்னும் துக்கத்தாலே கண்ணீர் சொரிந்துகொண்டே என் பிதுருதேவதைகள் நான் செய்யும் தர்ப்பண ஜலத்தை யேற்றுக்கொள்ளுகிறார்கள். சாஸ்திர முறைப்படி யாகங்கள் செய்வதினால் தேவர்களின் கடன் தீர்க்கப்பட்டிருந்தாலும் ஸந்ததி யுண்டாகாதபடியால் பிதுரு ருணம் தீர்க்கப்பெறாத நான் லோகாலோகமென்கிற மலைபோலக் காணக்கூடியவனும் காணக்கூடாதவனுமாய் இருக்கிறேன். தவம் தானம் முதலியவைகளால் ஸம்பாதிக்கப்படும் புண்ணியம் பரலோக ஸுகத்திற்கு மாத்திரமே. பரிசுத்தமான ஸந்தானமோ இந்த லோகம் பரலோகம் இரண்டிலும் ஸுகத்திற்குக் காரணமான தல்லவா? தாம் ப்ரீதியோடு விடாது தண்ணீர் கொட்டி வளர்த்த ஆச்சிரம விருக்ஷமொன்று பூவாமலே நின்றுவிடக் கண்டால் தமக்குத் துயரமுண்டாக வேண்டாமா? எனக்குச் சந்தான மில்லாதமைக்காகத் தாங்கள் வருத்தமடைய வேண்டாமோ?

"மதம்மாறாத யானைக்கு முள்விலங்கு போட்டதுபோல பிதுருக்களின் கடன் தீரப்பெறாததினால் எனக்குண்டாயிருக்கும் துயரம் பொறுக்கமுடியா திருக்கிறது. மூலபுருஷராகிய இக்ஷ்வாகு முதலாக என் வம்சத்தோ ரனைவருக்கும் கிடைப்பதற்கரிய எல்லாச் சித்திகளையும் சாதித்து அருள்புரிபவர் தாமாகையால் இந்த பிதுரு ருணம் எனக்குத் தீரும் விதம் அநுக்கிரஹம் செய்யவேண்டியது தமது பாரமேயாம்".

இவ்விதம் அரசன் வேண்டிக்கொண்டதும் வஸிஷ்ட மஹாருஷி க்ஷணகாலம் கண்ணை மூடிக்கொண்டு தியானம் செய்தார். அதனால் அவர் திலீபனுக்கு ஸந்தானமுண்டாகாது தடைபட்டிருப்பதன் காரணத்தைத் தெரிந்துகொண்டார். அதை அரசனுக்குத் தெரிவிக்கலானார்.

"அரசே! முன் ஒரு ஸமயம் நீ தேவலோகம் சென்று தேவேந்திரனைப் பார்த்துவிட்டுப் பூலோகம்வரத் திரும்பினாய், வழியில் கல்பவிருக்ஷத்தின் நிழலில் காமதேனு படுத்திருந்தது.

முக்கியமான ஒரு தர்மகாரியத்தை நீ மனதில் வைத்திருந்தாய். தாமதமின்றி யூர்சேர வேண்டுமென்றும் தவறினால் அதர்மம் நேருமென்றும் நினைத்து நீ வேகமாய் வந்தபடியால் பிரதக்ஷிணம்செய்யவேண்டிய அந்தக் காமதேனுவைப் பிரதக்ஷிணம் செய்யாமல் வந்துவிட்டாய். அதனால் அதன் மனதில் கோபம் உண்டாயிற்று, 'என்னை நீ அவமதித்தபடியால் எனது ஸந்ததியைப் பூஜிக்கும்வரையில் உனக்கு ஸந்தானம் உண்டாகாது.' என்று அக்காமதேனு உன்னைச் சபித்தது. ஆகாசகங்கையின் ஜலத்தில் திக்கஜங்கள் கூச்சலிட்டுக் கொண்டு விளையாடிக்கொண் டிருந்தபடியால் அந்த ஓசையோடு ஜலத்தினோசையும் அதிகமா யிருந்தமையால் அந்த சாபம் உனக்காவது உன் சாரதிக்காவது கேட்கவில்லை.

"பூஜிக்கவேண்டியவர்களைப் பூஜியாமல் போனால் அது தீங்கையுண்டாக்கா திருக்குமோ? உனக்கு ஸந்தான மில்லாமைக்குக்காரணம் நீ காமதேனுவை அவமதித்ததேயாம்.

"வெகுநாள் செய்துமுடிக்க வேண்டிய யாகமொன்று பாதாள லோகத்தில் வருணனால் செய்யப்படுகிறது. அதற்கு ஹவிஸ்ஸுக்காகக் காமதேனு இப்போது பாதாளலோகத்தில் வாஸம்செய்கிறது. பாதாளலோகம் போகும்வழியில் ஸர்ப்பங்கள் காவல் வைக்கப்பட்டிருக்கின்றன. அதனால் அங்குப் போகவாவது அதன் வரவை யெதிர்பார்த்திருக்கவாவது ஸாத்தியமில்லை.

"இதன் கன்று ஒன்று இவ்விடத்தில் இருக்கிறது. அதற்கு நந்தினியென்று பெயர். அதைக் காமதேனுவுக்குப் பிரதிநிதியாகக் கொண்டு நீங்கள் இருவரும் பூஜைசெய்து வாருங்கள். அது திருப்தியடைந்தால் உங்களுக்கு வேண்டியவரங்களைக் கொடுக்கும்."

என்றிவ்வண்ணம் வஸிஷ்டமுனிவர் சொல்லிக்கொண்டிருக்கும்போதே அப்பசு புல்மேயக் காடுபோயிருந்தது திரும்பி வந்து ஆச்சிரமத்தில் பிரவேசித்தது. புதுத்துளிர்போல் சிவந்த உடலும் நெற்றியில் செவ்வானத்தில் காணும் மூன்றாம் பிறைபோன்ற வெள்ளைமயிர் பரப்புமாய், கன்றை நினைத்துக்கொண்டு வருவதால் பால் பெருகித் தரையெல்லாம் நனைத்துக்கொண்டும் தன் குளம்பிலிருந் துண்டாகும் தூள்கள் அர

சன்மேல்படிந்து அவனுக்கு புண்ணியநதி ஸ்நானங்களால் கிடைக்கும் சுத்தியுண்டாகும்படி அவனுக் கருகாமையில் நடந்துகொண்டும் வந்தது.

இது ஒரு பெரிய நல்ல சகுனமாகையால் முனிவர் ஸந்தோஷத்தோடு மறுபடி—

"அரசனே! உனது இஷ்டம் வெகு துரையில் நிறைவேறும், நிச்சயம். பெயரை பெடுத்தபோதே இப்பசு வந்தது பார்த்தாயா? அப்பியாஸத்தாலே வித்தையை ஸாதிப்பது போல நீ இதை உபசரணையால் ஸாதிக்கவேண்டும். அதாவது காட்டில் கிடைக்கும் உணவுகளேயே உட்கொண்டு இதை விடாமல் பின்தொடர்ந்துகொண்டேயிருந்து இதன் அநுக்கிரஹத்தைப் பெறவேண்டும். இப்பசு நடக்கும்போது நடப்பதும் நிற்கும்போது நிற்பதும் படுக்கும்போது உட்கார்வதும் தண்ணீர் குடிக்கும்போது தண்ணீர் குடிப்பதுமாய் நீ இருந்து வரவேண்டும். உன் பத்நியோ காலையில் இதைப் பூஜைசெய்து தபோவன எல்லைவரையில் பின்தொடரவும் மாலை அவ்வெல்லை வரையில் எதிர்கொள்ளவும் வேண்டும். இவ்விதம் ஒன்றும் கொஞ்சமும் வழுவாமல் இது அநுக்கிரஹம் செய்யும் வரையில் நீங்கள் நடந்துகொள்வீர்களாக. உனது இஷ்டம் விக்னமின்றி நிறைவேறுக. உன்பிதா உன்னைப் பெற்றதுபோல நீயும் ஒரு பிள்ளையைப் பெறுவாய்." என்று சொன்னார்.

இதைக்கேட்ட அரசன் பயபக்தி விசுவாசங்களோடு அப்படியேயென்று வணக்கமாய் ஏற்றுக்கொண்டான். பிறகு முனிவர் அரசதம்பதிகளுக்குத் தங்குவதற்காக ஒரு பர்ணசாலையை நியமித்தார். தபோபலத்தால் வேண்டியவிதமெல்லாம் போஜனம் ஸித்தம் செய்யக்கூடிய ஸாமர்த்தியமிருந்தும் அரசவரசியர்களின் வ்ரதத் தொடக்கத்துக்காக அவர்களுக்குக் குருகாட்டுக்கிழங்கு கனிகளேயே உணவாக அருள் புரிந்தார். தம்பதிகள் அவற்றை யருந்தி தர்ப்பப்படுக்கையில் நியமத்தோடிருந்துநித்திரை செய்தார்கள். பின்மாலைப்பொழுதில் முனிவரின் சிஷ்யர்கள் அத்தியயனம் செய்யுமோசையால் எழுந்து நித்தியகர்மாநுஷ்டானத்தை முடித்துக்கொண்டார்கள்.

அன்று முதலாகவே வ்ரதம் தொடங்கப்பட்டது. குருவின் கட்டளைப்படி ராஜபத்நி அப்பசுவை சந்தனம் மாலை

களால் அலங்கரித்து அர்ச்சித்து நமஸ்கரித்தாள். பால்கறந்து கன்று ஊட்டியபதும் அரசன் அதை மேய்வதற்காக காட்டிற்குப்போக அவிழ்த்துவிட்டான். ராஜபத்நி அதைப் பின்தொடர்ந்து கொஞ்சம் தூரம் சென்றாள். அரசன் அவளைத் திருப்பி யனுப்பிவிட்டுத் தானொருவனே அப்பசுவைப் பின்தொடர்ந்து காட்டிற்குச் சென்றான். வ்ரதமாகப் பசுவைத் தொடர்வதனால் தன்னுடன் வேலையாள் ஒருவனையும் அவன் அழைத்துப்போகவில்லை. அவனுக்குத் துணையாக வேறே யாரும் கூடப்போகவில்லை. மனுவின் குலத்தில் பிறந்தவர்களுக்குத் தங்கள் வீர்யமல்லாது வேறுதுணை வேண்டியதில்லையன்றோ?

உருசியாகிய பசுமையும் இளமையும் நிறைந்த புற்களைப் பிடிபிடியாகப் பிடுங்கிக்கொடுப்பதும் தினவு சொரிவதும் ஈ கொசு மொய்ப்பதை போட்டுவதும் எவ்விதத்திலும் தடை செய்யாமல் அது போனவழியே விடுவதுமாகிய இவைகள் அரசன் அப்பசுவை ஸந்தோஷிக்கச் செய்த முக்கிய காரியங்களாம்.

நின்றால் நிற்பதும் நடந்தால் நடப்பதும் படுத்தால் உட்கார்வதும் நீர்குடித்தால் குடிப்பதுமாக அவ்வரசன் அப்பசுவைப்போலேயே நடந்துகொண்டதனால் அதன் நிழல்போலேயிருந்தான். அரசர்க்குரிய வெண்குடை சாமரம் முதலிய விருதுகள் யாதுமில்லாதிருந்தும் தேஜஸ்ஸு விசேஷித்திருப்பதால் எல்லோரும் அரசனென்று ஊஹித்தறிந்து கொள்ளும்படி அவ்வரசன் விளங்கியது மதஜலம் பெருகாமல் மதம் உள்ளே அடங்கியிருக்கும் மத்தகஜம் விளங்குவதுபோலிருந்தது. காட்டுச் சிறுகொடிகளால் தலைமயிரை யிறுகக்கட்டிக்கொண்டு நாணேறிட்ட வில்லும் கையுமாய் அத்திலீபராஜன் காட்டில் உலாவுவது அம்முனிவரின் ஹோமதேனுவின் காப்பு வியாஜமாகக் காட்டில் உள்ள துஷ்ட ஜந்துக்களை அடக்குவதற்காகவே யென்று நினைக்கக்கூடியதா யிருந்தது.

வழியில் இருபுறமும் வளர்ந்த மரங்களில் வாஸம் செய்யும் பக்ஷிகள் சத்தம் செய்வது வேலையாட்கள் யாருமில்லாது தனியே ஸஞ்சாரம் செய்யும் அவ்வரசர் சிகாமணிக்கு "ஜய விஜயீ பவ" என்று மரியாதைச்சொல் சொல்வதுபோ லிருந்

தது. இளங்கொடிகள் காற்ருலசைந்து அதனுல் புஷ்பங்கள் சொரிவது பட்டணத்தில் பெண்மணிகள் மரியாதைக்காகப் பொரிசொரிவது போலிருந்தது. கையில் வில்லிருந்தும் அவர் மனதின் இரக்கம் தன்னடையே தெளிவாய்த் தெரியவே பெண்மான்கள் பயமின்றி அவரது சரீரத்தை நன்ருகப் பார்த்துத் தாங்கள் பெரிய கண் படைத்ததின் பலனை யடைந்தவையாயின.

வண்டுகளால் துளைக்கப்பட்ட மூங்கில்களில் காற்று புகுவதால் புல்லாங்குழல் ஊதுவதுபோல் ஒலிக்க அதற்கேற்றவாறு வனதேவதைகள் புதர்களில் தனது யசஸ்ஸை விநோதமாய்ப் பாடிக்கொண்டிருப்பது இவனுக்குக் கேட்டது. மலையருவிகளில் நனைந்து பூமரங்களில் உராய்ந்து வாசனையோடு மிருதுவாய் காற்று வீசுவதனுல் வ்ரதத்திற்காக வெயிலில் குடையிராது நடந்து வருந்தும் அவனுக்குக் கொஞ்சம் ஆசுவாசம் ச்ரமபரிகாரம் உண்டாயிற்று.

அவ்வரசர்சிகாமணி காட்டில் ஸஞ்சாரம் செய்யத் தொடங்கியது முதலாகக் காட்டுத்தீ மழையில்லாமலே யணைந்துவிட்டது. புஷ்பங்களும் பழங்களும் மிக அதிகமாயின. சிறியதைப் பெரியது ஹிம்ஸிப்பதென்னும் கெட்ட வழக்கம் நின்றுவிட்டது.

நந்தினியானது தன் மனப்படி பல திக்கிலும் ஸஞ்சரித்தபின் ஸூர்யனது காந்தி சிவந்து அஸ்தமிக்கப் போகும் சமயமாகிய ஸாயங்காலம் வீட்டிற்குத் திரும்பியது. தேவதைகள் பிதுருக்கள் அதிதிகள் இவர்களுக்காகவே யிருக்கும் அப்பசுவின் பின்னுல் இவ்வரசன் போவது சிரத்தையோடு கூடிக் கர்மாநுஷ்டானம் நடைபெறுவதுபோல் விளங்கியது. பகற்பொழுது முழுதும் குட்டைகளில் புரண்டுகொண்டிருந்த பெரும் பன்றிக் கூட்டங்கள் கரையேறி நடப்பதும், மயில்கள் இரவு தங்கவேண்டிய மரங்களை நோக்கிச் செல்வதும் மான்கள் பசும்புற்றரையில் படுத்து அசைபோடுவதுமாய்க் காடெங்கும் கறுத்துக் காணப்பட்டது.

குருவின் பசுவைத் தொடர்ந்து காட்டிலிருந்து திரும்பி வரும் தனது நாதனை ராஜமஹிஷி பட்டினி யிருந்ததுபோலிருக்கும் கண்களால் இமைக்காமல் பருகினுள். அவள்



ராஜமஹரிஷி நந்தினியைப் பூஜித்தல்.

எதிர்கொள்ளவும் அரசன் பின்தொடர்ந்து வரவும் இருவர் மத்தியில் அப்பசு காணப்படுவது பகற்பொழுதுக்கும் இராப் பொழுதுக்கும் மத்தியில் காணப்படும் அந்திப் பொழுதின் காட்சிபோலிருந்தது. அக்ஷதை நிறைந்த பாத்திரமும் கையுமாக வந்த அவ்வரசி அப்பசுவைப் பிரதக்ஷிணம் செய்து அதன் சிரஸ்ஸில் (கொம்புகளின் நடுவில்) பூஜை செய்தாள் அது தனது மனோரதம் நிறைவேற வாசற்படிபோல் அவளுக்குத் தோன்றியது. கன்றை நினைந்து வேகமாய் வரும் ஸமயத்திலும் அப்பசு இவள் செய்த பூஜையை நின்றுகொண்டேற்றுக்கொண்டதைப் பற்றி அத்தம்பதிகள் அடங்கா மகிழ்ச்சி கொண்டார்கள். பக்தியோடு செய்யப்படும் உபசாரங்களை யன்போடு ஏற்பது விரைவில் அநுக்ரஹம் நேரிடுமென்பதைக் காட்டும் முற்குறி யன்றோ?

ஆச்சிரமம் சேர்ந்ததும் அவ்விருவரும் குரு தம்பதிகளை நமஸ்கரித்து மாலைக்கடன் முடித்துப் பசு கறந்து படுத்தவுடன் அதன் பக்கத்திலே வந்து ஸமீபத்தில் பூஜாதீபம் வைத்து தர்ப்பம் பரப்பி யுட்கார்ந்திருந்து பசு தூங்கியதும் தூங்கினார்கள். அது எழுந்தவுடனே இவர்களும் எழுந்தார்கள்.

தீன ரக்ஷகனாகிய திலீபராஜன் தன் பட்டமஹிஷியாகிய ஸுதக்ஷிணையோடு நியமங்கள் ஒன்றும் குறையாமல் இவ்விதமாகவே வ்ரதமாக அப்பசுவை இருபத்தொருநாள் உபாசனை செய்தான்.

இவ்வாறு தன்னைத் தொடர்ந்து உபசரித்துவரும் அரசனது மனதைச் சோதிக்க வேண்டுமென்று எண்ணங்கொண்டு அப்பசு மறுநாள் வழக்கம்போல் காட்டிற்கு மேயப் போகும்போது கங்கைநதிவிழும் தரையினோரமாய்ப் பசும்புல் அடர்ந்து வளர்ந்திருப்பதாகிய இமயமலையின் குகைக்குள் நுழைந்தது. உடனே எங்கிருந்தோ ஒரு சிம்மம் எழும்பிக் குதித்து அப்பசுவைப் பிடித்துக்கொண்டது. கொடிய மிருகங்கள் அப்பசுவைப் பிடிக்க மனதிலும் நினைக்க முடியாதென்னும் மனவுறுதி யிருந்தபடியால் அரசன் க்ஷணம் அப்பசுவைக் கவனியாது மலையின் அழகை யுற்று நோக்கிக்கொண்டிருந்தான். அதனால் அவன் சிம்மம் பசுவைப் பிடித்துக்கொண்டதைப் பார்க்கவில்லை.

உடனே பசு கதறி வீறிட்டது. மலையில் பிரதித்தொனி பிறந்தது. மலையில் பதிந்திருந்த அரசனது பார்வை கடிவாளம் போட்டிழுக்கப்பட்டதுபோல உடனே திரும்பியது. சிவந்த நிறமாகிய அப்பசுவைக் கீழேதள்ளி யமுக்கி அதன் மேல் வெளுப்பாகிய சிங்கம் பிடரிமயிர் சிலிர்க்க உட்கார்ந்திருப்பதை அரசன் கண்டான். செங்காவிக்கல் தரையில் வெள்ளலத்திமரம் நிரம்பப் பூத்திருப்பதுபோல விருந்தது. அரசன் கொஞ்சமும் தாமதியாமல் அச்சிங்கத்தைக் கொலை செய்ய வேண்டியதற்காகத் தன் அம்பறாத்தூணியிலிருந்து பாணத்தையெடுக்கப்போனான். அந்த வலதுகை பாணத்தில் பட்டதும் அதனோடு ஒட்டிக்கொண்டதுபோலாகி அசைவற்று சித்திரத்தி லெழுதியதுபோல நின்றுவிட்டது.

இவ்வாறு தன் கை தடைபட்டுப் போனதினால் அரசனுக்குக் கோபம் அதிகரித்த தென்றாலும் அபராதி அடுத்திருந்தும் அவனை யொன்றும் செய்ய முடியாமல் போனதைப்பற்றி தடைகட்டப்பட்ட ஸர்ப்பம்போல தனக்குள்தானே வெந்துகொள்ள வேண்டியதாயிற்று. இவ்வாறு தனது நிலை நேர்ந்ததைப்பற்றி ஆச்சரியப்பட்டுக் கொண்டிருந்த அரசனுக்குப் பின்னும் ஆச்சரியமாகும்படியாக அச்சிங்கம் மனுஷ்யரைப் போலே அவனைக் குறித்துப் பேசத் தொடங்கியது.

"அரசே! வீண் சிரமம் வேண்டாம். நீ பாணத்தை பிரயோகித்தாலும் அது என்னை ஒன்றும் செய்யமாட்டாது. பெருங்காற்றாயினும் அது மரங்களைப் பிடுங்குமே யல்லது மலையினிடத்தில் எதுவாவது செய்யுமோ? நான் பரமசிவனது வேலையாட்களில் ஒருவன். பரமேசுவரன் தன் வாஹனமாகிய விருஷபத்தின்மேல் ஏறும்போது என் முதுகில் திருவடியை வைத்தே ஏறியருள்வது. என் பெயர் கும்போதரன்.

"அதோ முன்னே வளர்ந்திருக்கிற தேவதாரு மரத்தைப் பார். அதைப் பரமசிவன் பிள்ளையைப்போலே பாவித்திருக்கிறார். பார்வதிதேவி பொற்குடத்தால் தானே ஜலங்கொட்டி வளர்த்தது. அவளுக்கு ஸுப்ரஹ்மண்யனிடத்தில் எவ்வளவு வாத்ஸல்யமோ, இதனிடத்திலும் அவ்வளவு வாத்ஸல்யம்.

"ஒருநாள் காட்டுயானை ஒன்று இதில் உராய்ந்து கண்டஸ்தலத்தைச் சொரிந்துகொண்டது. அதனால் இதன் பட்டை

சிதைந்து போயிற்று. அதைப் பார்த்ததும் பார்வதிதேவிக்கு ஆச்சரியம் உண்டாயிற்று. யுத்தத்தில் அஸுரர்களின் பாணம் பொத்திக் காயமடைந்த ஸுப்ரஹ்மண்யனைக் கண்ட போது மனம் வருந்தியதுபோல இதற்கு அவள் மனம் வருந்தியது.

"அது முதலாக இங்கே காட்டுயானைகள் வராதிருப்பதற்காக என்னைச் சிம்மமாக்கி இங்கேயிருக்கும்படி நியமித்தார்கள். கிட்டிவரும் பிராணிகளைத் தின்று பசியாறும்படி யெனக்குக் கட்டளையிடப்பட்டிருக்கிறது. தெய்வச் செயலால் இப்பசு இன்றைய தினத்தில் ஆஹாரமாகக் கிடைத்தது. என் பசியாறுவதற்கு இது போதும். மேலும் ராஹுவுக்குச் சந்திரனது பிம்பம்போல இது எனக்குப் பெரிய ஸந்தோஷத்தைக் கொடுக்கும் ஆஹாரமேயாம்.

"இனி நீ செய்யக்கூடியது ஒன்றுமில்லை. வெட்கப்பட வேண்டாம். திரும்பிப்போ. பாணத்தால் பாதுகாக்க முடியாதவற்றைப் பாதுகாக்காமல்போவது விற்காரனுக்கு அபகீர்த்தியைத் தராதல்லவா?"

இப்படி கம்பீரமாகப்பேசிய அதன் வார்த்தையைக் கேட்ட பிறகு அரசன் மனம் கொஞ்சம் தேறுதல் அடைந்தது. அது வரையில் அவன் மனதிலிருந்த அவமானம் நீங்கியது. தேவேந்திரன் பரமசிவன்மேல் வஜ்ரம்போடத் தொடங்கிய போது அவர் கோபித்துப் பார்த்ததினால் ஸ்தப்தனாய்விட்டது போல அவரது சேவகனால் தான் தடைப்பட்டதை நினைத்துத் தேறுதல் அடைந்தான்! பிறகு சிங்கத்தை நோக்கி "மிருகராஜனே! நான் நினைத்தபடி செய்யக் கூடாதவனாய்விட்டபடியால் நான் சொல்லும் வார்த்தை பரிஹாஸத்திற்கிடமேயாம். ஆனாலும் மனிதர்களின் மனதிலுள்ளது முழுதும் முற்கெனவே உனக்குத் தெரிந்திருப்பதினால் நான் ஸங்கோசமில்லாமல் பேசுகிறேன். ஜங்கமமென்றும் ஸ்தாவரமென்றும் வகுக்கப்பட்ட பிரபஞ்சம் முழுவதிற்கும் உத்பத்தி ரக்ஷணம் நாசம் மூன்றிற்கும் காரணபூதராகிய பரமேசுவரனுடைய திருவுள்ளப்படி நடந்துகொள்ள வேண்டியது எனது கடமையேயாம். யாகம் செய்வதே முக்கியமாகக்கொண்ட எனது குருவின் பிரதான சொத்தாகிய இப்பசு நாசமடையாமல் செய்ய

வேண்டியதும் முக்கியமான கடமையே யல்லவா? அதனால் எனது சரீரத்தைக்கொண்டு நீ பசிபாறவேண்டுமென்று வேண்டிக்கொள்ளுகிறேன். இவ்வளவு தயை செய்வாயாக. மாலைப் பொழுதில் தாயின் வரவை பாவலோ டெதிர்பார்த்திருக்கும் இளங்கன்று ஸந்தோஷிக்கும்படி இப்பசுவை நீ விட்டுவிட வேண்டுகிறேன்." என்று வணக்கமாய்க் கூறினான்.

அதற்கு அச்சிங்கம் மலைக்குகையின் இருளெல்லாம் விலகி வெளிச்சமாகும்படி கோரைப்பல்லை யிளித்துச் சிரித்துக்கொண்டே அரசனைநோக்கி:—

"அரசனே! இவ்வுலக முழுதும் ஒருகுடைக்கீழ் ஆளும் அரசையும் இளம் வயதையும் அழகிய உடலையும் இப்படி உயர்ந்தபலவற்றை ஓர் அற்பப்பசுவின் பொருட்டுத் தொலைப்பதாகத் தீர்மானித்த உன்னை யோசிக்கும் திறமையற்ற மூடனென்று நான் நினைக்கிறேன். பூததயை யென்பது உனக்குக் குணமென்பதை நானும் ஒப்புக்கொள்ளுகிறேன். நீ இப்போது பிராணனை விடுவதானால் அதனால் இப்பசு வொன்று மாத்திரமே யல்லவோ பாதுகாக்கப்பட்டதாகிறது? நீ பிழைத்திருந்தால் இன்னும் அநேககாலம் அநேகம் ஜனங்களைத் தகப்பன்போல பாதுகாப்பா யல்லவா? இனி குருவுக்கு இப்பசு வொன்றே யாதல்பற்றியும் அவர் அபராதம் செய்தோரிடத்தில் தீபோல் சீறும் ஸ்வபாவ முள்ளவரானது பற்றியும் நீ பயப்படவேண்டியது ஸஹஜமே யென்றாலும் இப்பசுவை விட அதிகமாய் பால் கறக்கக்கூடிய பசுக்கள்பல நீ அவருக்குக் கொடுக்கக்கூடு மாகையால் அம்முகமாய் அவரது கோபத்தைச் சுகமாய்த் தணிவிக்கலாம் இந்திரபட்டத்திற்கும் உன் ராஜ்யத்திற்கும் பூமியில் கால் படாததும் படுவதும் மாத்திரமே பேதம் என்பதைக் கவனத்தில் வைத்து மேல்மேலும் மங்களங்களையும் ஸுகங்களையும் அநுபவிக்கவேண்டிய திடமுள்ள இத்தேஹத்தைப் பாதுகாத்துக் கொள்வாயாக."

என்று சொல்லிற்று. அந்த சப்தம் மலையில் பிரதித்தொனியிட்டது, அதையே மலையும் அரசனிடத்தில் அன்பினால் திரும்பியும் சொல்லியதுபோ லிருந்தது.

இதைக்கேட்டதும் பயத்தால் நடுங்கிக்கொண் டரசனைப் பார்த்துக்கொண்டிருக்கும் அப்பசுவின்மீது பேரிரக்கமும் பக்தியுமாய் திலீபராஜன் சிம்மத்தைநோக்கி:—

“தெய்வத்தன்மை விளங்கும் மிருகாதிபனே! க்ஷத்ர என்னும் பதத்தின் பொருளாவது காயத்தினின்றும் காப்பவன் என்பதல்லவோ? அந்தப்பெயரை வைத்துக்கொண்டு அதன் அர்த்தத்திற்கு விரோதமாக நடப்பவனுக்கு ராஜ்யமெதற்கு? பலர்பழிக்க இடமாகிய பிராணன்தா னெதற்கு? மேலும் இப்பசுவானது காமதேனுவுக்குச் சமானமான தென்பதைக் கவனத்தில் வைப்பாயாக. இதை நீ பிடித்தடிக்கும்படியானது பரமசிவனுடைய பெருமையேயாம். ஆதலாலிதற்குப் பதிலாக நான் எத்தனை பசு கொடுத்தால்தான் குருவிற்குத் திருப்தியாகும்? இவற்றை யோசித்ததில் எனது தேஹத்தை விலையாக உனக்குக்கொடுத்து இப்பசுவை மீட்பதே நியாயமென்று நிச்சயித்தேன். இப்படி செய்வதால் உனதுபாரணையும் நிறைவேறும். எனது குருவின் யாககாரியமும் தடையின்றி நடைபெற்றுவரும். மேலும் ஒருவன்கீழ்ப் பணிந்து நடந்துகொள்ள வேண்டியவன் இருக்கவேண்டிய மாதிரியைப்பற்றி உனக்கே தெரியுமே, இத்தேவதாரு மரத்தைப்பற்றி நீ எவ்வளவு சிரத்தையோ டிருக்கிறாயோ அப்படியே நானும் இருக்கவேண்டியவனே யல்லவோ? காவலாக அனுப்பப்பட்டவன் காக்கப்படவேண்டிய வஸ்துவை நாசமாக்கித் தன் தேஹத்தில் காயமில்லாமல் யஜமானன் முன்னே போய் நிற்கலாமோ? என் சரீரத்தில் உனக்கு தயை யிருக்குமானால் நசிக்குந்தன்மைப்பெற்ற இப்பிராகிருத சரீரத்தைவிடப் பலமடங்கு மேலான கீர்த்தி யென்னும் சரீரத்தில் அந்த தயையை வைக்க வேண்டுகிறேன் எனக்கு அதே முக்கியமான சரீரம். அய்யா! நீ பரமேசுவரனது அடிமையல்லவோ? தெய்வச்செயலால் உனக்கும் எனக்கும் ஸம்பாஷணை நேர்ந்தது. ஸம்பாஷணையே ஸ்நேஹத்திற்கு மூலமென்று பெரியோர்கள் கூறுகிறார்கள். அதனால் நானும் நீயுட் ஸ்நேஹிதர்களாய் விட்டோமல்லவா? ஸ்நேஹிதனாகிய என் வேண்டுகோளை மறுதளிப்பது யுக்தமல்ல. எனதிஷ்டத்தைப் பூர்த்திசெய்வது உன் கடமை” என்று பணிவாகக் கேட்டுக்கொண்டான்.

ஸிம்மம் அதை அப்படியே யொப்பிக்கொண்டு பசுவை விட்டுவிட்டது. அரசனது கை தடைபட்டிருந்ததும் விடுதலை யடைந்தது. அரசன் ஆயுதங்களைத் தூர வைத்துவிட்டுத் தன் சரீரத்தை மாம்ஸத் துண்டுபோலே அச்சிங்கத்திற்கு ஒப்ப வைத்தான். ஸிம்மம் மேலே பாய்வதை யெதிர்பார்த்துக் கொண்டு தலைகுனிந்து உட்கார்ந்த அரசன்மீது ஆகாயத்தி லிருந்து வித்தியாதரர்கள் பொழிந்த பூமழை வெகுவாகப் பெய்தது.

"எழுந்திரு குழந்தாய்" என்று அங்கே ஸந்தோஷகர மான ஒரு சப்தம் கேட்டது. அதைக் கேட்டதும் அரச னெழுந்து பார்க்கையில் பெற்றதாயாரைப்போல் முலைப்பால் வடித்துக்கொண்டு நிற்கும் பசு தென்பட்டது. சிங்கம் காணப் படவில்லை. அதனால் அரசன் ஆச்சரியப் பட்டுக்கொண்டு திகைத்து நின்றான். அவனை நோக்கி அப்பசு "அப்பா! இவ்வாறு நானே மாயை செய்து உன்னைப் பரீக்ஷித்தேனாகும். மஹாருஷியின் ப்ரபாவத்தினால் யமன்கூட என்னைத்தொட முடியாது. சிறு மிருகங்கள் என்ன செய்ய முடியும்? உனக்கு என்மீதுண்டாகிய அன்பையும் குருவினிடத்திலுள்ள பக்தி யையும் கண்டு மகிழ்ச்சி யடைந்தேன். நான் மற்ற பசுக் களைப்போல பால்மாத்திரம் கொடுப்பவளல்ல. பிரீதியடைந் தேனாகில் அவரவர் வேண்டும் வரமெல்லாம் தருவேன். குழந்தாய்! நீ உனக்கு வேண்டியவரனை வேண்டிக்கொள் வாயாக" என்று அன்பாய் அருளிச்செய்தது.

அரசன் இருகைகளையும் கூப்பிக்கொண்டு தன் பட்ட மஹிஷியாகிய ஸுதக்ஷிணையின் வயிற்றில் குறையாத கீர்த்தி யோடு வம்சம் வளரும் பாக்கியம் பெற்ற ஒரு புத்திரன் பிறக்கு மாறு வரம் தந்தருள வேண்டுமென்று ப்ரார்த்தித்தான்.

அப்படியே யாகுக வென்று வரம்தந்து அப்பசு தொன்னை யில் தனது பாலைக்கறந்து உபயோகித்துக் கொள்ளச் சொல் லிற்று. ஆச்சிரமத்திற்குச் சென்றதும் கன்று ஊட்டியபின் கறந்து ஹோமத்திற்கு உபயோகித்த பிறகு மிகுதிப்பட்டபாலை குருவின் அநுமதிபெற்றுப் பானம்செய்ய உத்தரவு தரும்படி அரசன் வேண்டிக்கொண்டான்.

இதைக்கேட்டதும் அப்பசு நிரம்பவும் ஸந்தோஷித்தது. பிறகு அரசனும் பசுவுமாகத் திரும்பி ஆச்சிரமம் வந்து சேர்ந்

தார்கள். நந்தினி தனக்கு அருள் செய்ததை அரசன் குருவிற்கு விண்ணப்டம் செய்துகொண்டான். முகக்குறியினாலேயே தேவி யூஹித்தறிந்துகொண் டிருந்தாலும் அரசன் அவளுக்கும் விரிவாக எடுத்துரைத்து மகிழச்செய்தான். பிறகு கன்று ஊட்டியபதும் முறைப்படி கறந்து ஹோமத்திற்கு உபயோகித்து மீதிப்பட்ட அந்நந்தினியின் முலைப்பாலை வஸிஷ்ட மஹாமுனிவர் அநுமதியால் திலீபராஜன் உட்கொண்டான்.

முறைப்படி வ்ரதம் நிறைவேறப்பெற்று காலை பாரணை முடிந்ததும் அவர்களுக்குரிய ப்ரயாண மங்களங்களைச் செய்து குருதம்பதிகள் அவ்விராஜ தம்பதிகளை ஊருக்குப் ப்ரயாணப்படுத்தி யனுப்பினார்கள். அவர்கள் அக்நிகளையும் ஆசார்ய தம்பதிகளையும் கன்று பசுக்களையும் ப்ரதக்ஷிணம் செய்து தமது நகரம் வந்து சேர்ந்தார்கள்.

தமது மனோரதம் ஸித்தியடையப்பெற்று ஸந்தோஷமாய்த் திரும்பி வருவதுபற்றியும் வழி மேடுபள்ள மில்லாம லிருந்தது பற்றியும் அப்பிரயாணம் அவர்களுக்கு மிகச் சுகமாய் இருந்தது.

ஸந்தானத்தை வேண்டி வ்ரதமிருந்து உடம்பு இளைத்து வந்த அவ்வரசனை அத்தனைநாள் பாராதிருந்த குறைதீர, எல்லா ஜனங்களும் மூன்றும் பிறையைப் பார்ப்பதுபோல் எவ்வளவு நாழிகை பார்த்தாலும் திருப்தியடையாதவர்களாய் வெகு ஆவலோடு பார்த்தார்கள்.

தன் நகரம் சேர்ந்ததும் ஜனங்களெல்லாரும் ஸந்தோஷிக்க அரசன் மறுபடி ராஜ்ய விசாரணையை யேற்றுக்கொண்டான்.

அத்ரிருஷியால் உண்டாக்கப்பட்ட சந்திரனை ஆகாயம் தரிப்பதுபோலவும் அக்நியால் விடப்பட்ட பரமேசுவரனது வீர்யத்தைக் கங்கை தாங்கியதுபோலவும் அஷ்டதிக்பாலகர்களின் அம்சமாய் விளங்கும் குமாரனை லோகங்களின் க்ஷேமத்திற்காக ஸுதக்ஷிணை கர்ப்பத்தில் தரிக்கலானாள்.

வெகுநாளாக ஆசைப்பட்டுக் கொண்டிருந்த விஷயம் கைகூடுவதாகவே அரசனுக்கும் அவன் குடிகளுக்கும் அதனால் பெரிய ஸந்தோஷம். தோழிகளனைவரும் முகமலர்ச்சியோடு இமைக்காமல் அவளைப் பெரிய ப்ரீதியோடு

பார்க்கலானார்கள். இக்ஷ்வாகு மஹாராஜாவின் குலந்தழைத் தோங்கும்படி ஆகிற தல்லவோ? கர்ப்பிணிகளின் இயற்கைப் படி அவளுடம்பிளைத்து முகம் வெளுத்து அதிக ஆபரணம் பூண்டுகொள்ளாம லிருந்தது ஒளிமழுங்கிய சந்திரனும் நக்ஷத் திரங்கள் சில மாத்திரமும் காணும்படியா யிருக்கும் முன் இரவுப் பொழுதுபோலிருந்தது.

கர்ப்பத்திலிருக்கும் குமாரன் தேவலோகத்தை இந்திரன் ஆள்வதுபோல பூலோகம் முழுவதையும் ஒரே அரசனாக ஆட்சிசெய்யப் போகிறானென்பதன் முற்குறியாக மற்ற எல்லாவற்றையும்விட மண்ணை யுண்பதிலே யிவளுக்கு முதல் முத லாசையுண்டாயிற்று.

கர்ப்பிணிகளுக்கு எதில் ஆசையுண்டானாலும் அதைப் பூர்த்தி செய்யவேண்டும். இல்லாவிட்டால் கர்ப்பத்திலுள்ள பிராணிக்குப் பல குறைகள் நேரும். இவ்விஷயத்தை யறிந்தவ ராதலால் திலீப அரசன் தன்னோடு வெட்கத்தால் சொல்லா மல் போனாலும், அவள் ஸகிகளைக்கேட்டுத் தெரிந்துகொண்டு உடனுக்குடனே அதை நிறைவேற்றி வந்தார். இவர் பெரும் வீரனாகையால் எந்த லோகத்தி லிருப்பதுவும் இவ ருக்கு ஸுலபமாய்க் கிடைக்கக்கூடியதா யிருந்ததைப்பற்றி அவள் ஆசைப்பட்டது எதுவும் கிடையாது போகவில்லை.

தன் தாராளத்தன்மைக்கும் ஸம்பத்திற்கும் ஸந்தோஷத் திற்கும் பாரியை யிடத்துள்ள பிரீதிக்கும் தக்கபடியாக சாஸ் திரமுறைப்படி அந்தந்த காலங்களில் பும்ஸவனம் முதலிய வைகளை அரசன் முறைப்படி செய்தான். ப்ரஸவகாலம் ஸமீபித்ததும் கிரமப்படி ரக்ஷை செய்யப்பெற்ற இடத்தில் ஸுதக்ஷிணை ஒரு ஆண்பிள்ளையைச் சுகமாகப் பெற்றாள்.

அந்தக்காலம் உயர்ந்த லக்கினமாகவும் ஐந்து கிருஹங் கள் உச்சமாகப் பெற்றதாகவும் அவைகளில் ஒன்றும் அஸ்த மித்திராததாகவும் மற்றும் யாதொரு தோஷமும் இல்லாத தாகவுமிருந்தது. அக்குழந்தையைப்போன்ற பாக்கியசாலி கள் இப்பூமியில் வந்து பிறப்பது லோகம் க்ஷேமமடையும் பொருட்டாகவே யாகையால் அக்குழந்தை ஜனித்தகாலத்தில் ஆகாயமெங்கும் மாசுமறுவின்றிப் பிரகாசித்தது. குளிர்ந்த சிறுகாற்று வீசியது. அக்நி பிரதக்ஷிணமாக ஜ்வலித்து

ஹவிஸ்ஸை யேற்றுக்கொண்டது. இப்படி யெல்லாம் மங்கள சின்னமாகவே யமைந்தது.

அச்சிறு குழந்தையின் காந்திக்கு எதிரே அங்கு வைக்கப் பட்டிருந்த தீபங்கள் ஒளிமழுங்கிச் சித்திரத்தி லெழுதியவை போல் காணப்பட்டன. பிள்ளை பிறந்ததென்னும் ஸந்தோஷ ஸமாசாரத்தைத் தெரிவிக்கவந்த அந்தப்புரத்தாள்களுக்கு வெண்குடையும் சாமரங்களும் மாத்திரமே அரசனால் கொடுக் கப்படக் கூடாதவையாயிருந்தன. சாஸ்திரமுறைப்படி நல் முஹூர்த்தத்தில் அக்குழந்தையின் முகத்தைக் கண்கொட்டா மல் பிரீதியோடு பார்த்தபோது அரசனுக்கு உண்டான ஸந் தோஷம் உள்ளடங்காமல் சந்திரனுதயமாம்போது ஸமுத் திரத்தின் ஜலம்போல் மேலே பொங்குவதா யிருந்தது.

குருவாகிய வஸிஷ்டர் ஆச்சிரமத்திலிருந்து வந்து முறைப் படி ஜாதகர்மம் முதலியவைகளைச் செய்துவைத்தார். அத னால் உயர்ந்த ரத்னம் சாணைபிடிக்கப்பட்டதுபோல அக் குழந்தை அதிக தேஜஸ்ஸு பெற்றது. பிள்ளை பிறந்தற்காக ஆட்டம் பாட்டு முதலிய ஆரவாரங்கள் இவ்வரசன் அரண் மனையில் மாத்திரமேயல்ல, ஆகாயத்திலும் நடைபெற்றன.

இவ்வகையான ஸந்தோஷ காலங்களில் சிறையிலிருப்பவர் களை விடுவது வழக்கம். இவரது அரசாட்சியில் தப்பு செய் வோரே யில்லை அதனால் சிறையில் யாருமில்லை. இவர் யாரை விடுவது? ஆனால் தான் பிதரு ருணமென்னும் சிறையி னின்று விடுதலையடைந்தார். (பிள்ளை பிறக்காவிடில் இவன் பிதுருக்களுக்குக் கடன்காரனென்பது தர்மசாஸ்திரங்களின் கொள்கை.)

எல்லாச் சாஸ்திரங்களினுடையவும் அப்படியே யுத்தத் தில் எல்லாச் சத்துருக்க ளுடையவும் இறுதியைக் காணக் கூடிய சாமர்த்திய முடையவனென்று அர்த்தமாகும்படியாக அக்குழந்தைக்கு "ரகு" என்று பெயரிடப்பட்டது

தகப்பனாது பாக்கியத்திற்கும் பெருமைக்கும் பிரீதிக் கும் தக்கபடி நாளொருமேனியும் பொழுதொருவண்ண முமாக அக்குழந்தை வளர்ந்தது ஸூர்யனது ஸம்பந்தத் தால் சந்திரன் வளருவதுபோ லிருந்தது.

ஸுப்ரஹ்மண்யனால் பார்வதி பரமேசுவரர்களும் ஜயந்த னால் இந்திரனும் இந்திராணியும் ஸந்தோஷிப்பதுபோல இவ்

வரச தம்பதிகளும் அப்பிள்ளையால் ஸந்தோஷ மடைந்தார்கள். அவர்களுக் கொருவர்க்கொருவர் உண்டாயிருந்த பிரீதியானது இவ்வொரே குமாரன் காரணமாக மேன்மேலும் வளர்ந்தோங்கியது. அக்குழந்தை செவிலித்தாய் சொல்லிக் கொடுத்த வார்த்தையைப் பின்னோடே சொல்வதும் அவள் விரலைப் பிடித்துக்கொண்டு நடப்பதும் அவள் வணங்கச சொல்லும் போது வணங்குவதும் தகப்பனுருக்குப் பெரிய ஸந்தோஷத்தை யுண்டாக்கியது.

வயது வந்ததும் சௌளம் செய்யப்பெற்றுத் தனக்கொத்த வயதுடைய மந்திரி குமாரர்களுடன் பள்ளிக்குப்போய் எழுத்து தொடங்கி வெகு வேகமாகவே சப்தங்களெல்லாவற்றையும் கற்றுக்கொண்டான். உபநயனம் செய்த பின்பு கல்வியறிவில் முதிர்ந்த உபாத்தியாயர்கள் இவனுக்குக் கல்விப் பயிற்சி செய்து வைத்தார்கள். இவன் தான் ராஜகுமார னென்பதை நினையாது கலங்காத பக்தியோடு அவர்களிடத்தில் கல்வி பயின்றுறுதலால் உபாத்தியாயர்களின் பிரயத்னம் வீண்போகவில்லை. இடமறிந்து செய்யும் காரியம் தவறுவதில்லை யல்லவோ?

கேட்க வேண்டுமென்னும் ஆசையும் கேட்டலும் சொல்வதை யறிதலும் அறிந்ததை மனதில் நிலைநிறுத்தலும் ஊஹமும் குற்றமுள்ளதை நீக்கலும் பொருளறிதலும் உண்மையறிதலுமாகிய புத்திக்குரிய எட்டு குணங்களும் குறைவற்றிருந்தபடியால் அவ்வரச குமாரன் நாலு ஸமுத்ரங்கள்போல விரிந்த நாலு வித்தைகளையும் சீக்கிரமாகவே நன்றாகக் கற்றுத் தேர்ந்தான்.

மனுநூல் முறைப்படி பிரம்மசர்யா சிரமத்திற்குரிய மானுரி போர்த்து அக்குமாரன் பிதாவினிடத்திலேயே அரசர்க்கு வேண்டிய பாணவித்தைகளைக் கற்றுக்கொண்டான். திலீபன் சக்கிரவர்த்தியென்பது மாத்திரமே யல்லாமல் வில்லாளிகளில் முதல்வராயு மிருந்தார்.

இவ்வாறு வித்தைகளெல்லாம் கற்றுத்தேர்ந்த ராஜகுமாரனுக்குப் பாலியம் கழிந்து யௌவனம் வந்தது. திலீபராஜன் தக்க குலத்தில் படிப்பும் பெருமையும் பொறுமையும் பெற்றுள்ள கன்னிகையை முறைப்படி தன் குமாரனுக்கு விவாஹம் செய்வித்து யுவராஜாவாகப் பட்டாபிஷேகம் செய்

தார். நெருப்புக்குக் காற்றும் ஸூர்யனுக்கு சரத்காலமும் யானைக்கு மதப்பெருக்கும் போல இவ்வபிஷேகம் அந்த ரகு விற்கு ஸ்வபாவமாகவேயிருந்த தேஜஸ்ஸைப் பெருமைப் படுத்தி பிரகாசிக்கச் செய்தது.

அரசர்களில் பெருமைபெற்றோர் செய்யவேண்டியது அசுவமேத மென்னும் யாகமேயாம். அவ்யாகங்கள் தொண் ணூற்றொன்பது திலீபராஜன் செய்து நிறைவேற்றினன். தேசந் தோறும் திரிந்து திரும்பி வரவேண்டிய அசுவமேதக் குதி ரையைக் காத்து வருவதற்காக ரகுவே அனுப்பப்பட்டான். யாதொருதடையும் நேராதபடி குதிரையைக் காத்தும் யுத்தம் நேர்ந்தால் சண்டைசெய்து ஜயித்து மீட்டும் தொண்ணூற றொன்பது யாகமும் விக்கினமின்றி நிறைவேறும்படி செய்த வன் ரகுவே.

நூறாவது அசுவமேதம் செய்யும்படி தொடங்கி தேச ஸஞ் சாரத்துக்காக ரகுவின் காவலில் விடப்பட்ட குதிரை தடை யின்றி எல்லாத் தேசமும் திரிந்து திரும்பிவிட்டது. உடனே இந்திரன் தேஹத்தை வெளிக்காட்டாமல் மறைந்திருந்து காவ லாட்களின் எதிரேயே அக்குதிரையைத் தூக்கிக்கொண்டு போய்விட்டான். ஆச்சரியமான இச்சம்பவம் நேர்ந்ததும் இது செய்வதென்று தோன்றாமல் எல்லோரும் திகைத்து நின்றுகொண்டிருந்த ஸமயத்தில் வஸிஷ்ட மகாமுனியின் பசு வாகிய நந்தினி தற்செயலாக அங்கே வந்து நின்றது.

உடனே ராஜகுமாரனுகிய ரகு அப்பசுவை வணங்கி பிரதக்ஷிணம் செய்து பக்தியோடு அதன் கோமயத்தைக் கையி லேந்தித் தன் இரண்டு கண்களையும் துடைத்துக்கொண்டான். அதனல் அவனுக்கு இந்திரியங்களுக் கெட்டாதவை யெல் லாம்கூட ஸமீபத்தி லிருப்பவைபோல் ஸுகமாய் அறிந்து கொள்ளக் கூடியவையாய் விட்டன.

அதனல் தன் பிதாவின் குதிரையைத் தேரில்கட்டி யிழுத் துக்கொண்டு இந்திரன் கிழக்குதிக்கிலே போவதும் ஸாரதி யாகிய மாதலி இது தகாதென்று தடுத்துக்கொண்டே யிருந் தும் அவன் கேளாமலே போய்க்கொண்டிருப்பதும் ரகுவிற்கு நேரே புலப்பட்டது. அவனது உடலெல்லாம் கண்களா யிருப்பதும் குதிரைகள் பச்சையாயிருப்பதும் கொண்டு



ரகுமஹாராஜன் இந்திரனைக் கண்டது.

அவன் இந்திரனே யென்று நிச்சயித்து ஆகாயமெல்லாம் கேட்கும்படியாகவும் அவனை திரும்பி விடும்படியாகவும் உரத்துக் கூவி "ஐய! மனிதர்கள் செய்யும் யாகங்களில் பாகம் பெற்றுப் பூஜிக்கிற தேவதைகளுக் கெல்லாம் அரசனாகிய நீர் யாகம் செய்வதே முக்கியமாகக்கொண்டு நடக்கும் என் பிதாவின் யாகத்தைத் தடைசெய்யத் தொடங்கலாமோ? நீர் மூன்று உலகங்களுக்கும் ராஜாவாகையால் யாகத்திற்கு விக்கினம் செய்பவர்களைத் திவ்ய திருஷ்டியால் கண்டுபிடித்துக் கண்டிக்க வேண்டியிருக்க நீரே தர்மமான இவ்வித காரியங்களுக்கு விக்கினமாகப் புகுந்தால் என்செய்வது? எந்த நற்கருமம் எப்படி நிறைவேறும்? வேதங்களிற் சொல்லப்பட்ட நற்கருமங்களுக்கு வழிகாட்டவேண்டிய உம்போன்ற பெரியவர்கள் இவ்வாறு கீழ்மையான வேலைகளில் பிரவேசிப்பது தகுமோ? என்பிதா தொடங்கியிருக்கும் அசுவமேதயாகத்திற்கு முக்கிய அங்கமாகிய இந்தக் குதிரையை விட்டுக் கொடுக்கவேண்டும்," என்று கேட்டுக்கொண்டான்.

இவன் கம்பீரமாகப்பேசிய வார்த்தைகளைக்கேட்ட இந்திரன் ஆச்சரியமும் ஸந்தோஷமும் கொண்டு தேரைத்திருப்பி ரகுவை நோக்கி "ராஜகுமாரா! நீ சொல்வது முழுதும் உண்மையே. முக்கியமாய்ப் பேரும் பெருமையும் பெற்றவர்கள் தங்கள் கீர்த்தியைக் காப்பாற்றிக்கொள்ள வேண்டியது அவசியமானது. இவ்வுலகமெங்கும் பரவியிருக்கும் என் கீர்த்தியை யுன்பிதா மறைத்துவிடத் தொடங்கியிருக்கிறார். புருஷோத்தமனென்பது ஸ்ரீமஹாவிஷ்ணு வொருவரே, மஹேசுவரனென்பது சிவனொருவரே, அதுபோல் சதக்ரது (நூறு யாகம் செய்தவன்) என்னும் பெயர் எனக்கொருவனுக்கே யுரியது. இம்மூன்று பெயர்களும் அவரவர்களைத் தவிர வேறொருவருக்குச் சொல்லத்தகுமோ. அதனால் நானே இக்குதிரையைக் கொண்டுவந்து விட்டேன். இவ்விஷயமாக நீ பிரயாசப்படுவது வீணேயாம். மேலும் நீ ஸகரராஜனது புத்திரர்களின் கதியைத் தேடிக்கொள்ளாதே, க்ஷேமமாய்த் திரும்பிப் போவாயாக" என்று பதிலுரைத்தான்.

இதைக்கேட்டதும் ரகுவிற்குக் கோபம் அதிகரித்தது. "என்னை ஜயித்தாலல்லவோ நீர் குதிரையைக் கொண்டுபோகலாம், ஆயுதத்தை யெடுத்துக்கொள்ளும், யுத்தம் நடக்கட்

டும்" என்று ரகு சொல்லி வில்லையெடுத்து நாணேறிட்டு வீரநிலையில் நின்றான். இந்திரனுக்கும் அடங்காக்கோபம் உண்டாயிற்று. அவனும் வில்லில் பாணத்தைத் தொடுத்தான். இருவரும் பாணப்ரயோகம் செய்தார்கள். ரகுவினது பாணம் இந்திரனது மார்பில் பலமாகத்தைத்தது. இந்திரனது பாணமும் இதுவரை மனிதர்களின் இரத்தத்தைக் குடித்ததில்லை யாகையால் ஆவலோடு ரகுவினது மார்பின் இரத்தத்தைக் குடித்தது.

உடனே ரகு ஐராவதத்தின் மஸ்தகத்தைத் தட்டுவதும் இந்திராணியைக் கைப்பிடிப்பதுமாகிய இந்திரனது கையில் பொத்திக்கொள்ளும்படி ஒருபாணத்தையும் அவனது துவஜம் அறுந்து விழும்படி ஒருபாணத்தையும் லாகவமாய் ஒரே நிமிஷத்தில் பிரயோகம் செய்தார். கொடியறுந்து விழுந்தது. அதில் இந்திரனுக்குப் பெரிய அவமானமும் கோபமும் ஆய்விட்டது. பிறகு இருவரும் கை கலந்து பெரும் யுத்தம் செய்பலானார்கள். ஒருதொகுதி பாணங்கள் மேலிருந்து கீழ் நோக்கி வருகின்றன. ஒருதொகுதி பாணங்கள் கீழிருந்து மேல்நோக்கிப் போகின்றன. வெகு நாழிகை யுத்தம் நடந்தது. ரகு இளைக்கவில்லை. அதனால் இந்திரன் ஆச்சரியப்படலானான்.

ராஜகுமாரன் அர்த்த சந்திரனென்னும் பாணத்தைப் பிரயோகித்து இந்திரனது வில்நாணை யறுத்து விட்டான். இந்திரன் அவ்வில்லைக் கீழே யெறிந்துவிட்டு வஜ்ராயுதத்தை யெடுத்து ரகுவின்மேல் எறிந்தான். அது மார்பில் பலமாய்ப் பட்டது. அதனால் ரகு மூர்ச்சித்துத் தரையில் விழுந்தான். ஸேனாவீரர்களெல்லாரும் கண்ணீர் பெருகச் சோகிக்கலானார்கள். ஒரேநிமிஷத்தில் ராஜகுமாரன் மூர்ச்சை தெளிந்து அந்த காயத்தை இலக்ஷியம் செய்யாமலே யெழுந்தான். அதனால் ஸேனாவீரர்களெல்லாரும் ஆனந்தபாஷ்பம் பெருகவும் கோலாஹலம் செய்பவும் ஆனார்கள்.

இப்படி வஜ்ராயுத ப்ரயோகத்தையும் லக்ஷியம் செய்யாதபடியான வீர்யத்திற்காக மெச்சி இந்திரன் ரகுவை நோக்கி "ராஜகுமாரா! மலைகளைக்கூடத் தடையின்றிப் பிளந்து தள்ளும் வல்லமையுடைய எனது ஆயுதத்தின் பிரஹாரத்தைப்

பொறுத்துக் கொண்டவர்கள் நீ தவிர வேறு யாருமில்லை. அதனால் நான் ஸந்தோஷமடைந்தேன். இக்குதிரை நீங்கலாக வேறெந்த வரம் வேண்டுமானாலும் கேட்டுக்கொள். கொடுக்கிறேன்." என்று பிரீதியாய்ச் சொன்னான்.

இந்திரன்மேல் பிரயோகிப்பதற்குப் பாணத்தை யெடுத்து நாணில் தொடுத்துக் கொண்டிருந்த ரகு அதை விட்டு விட்டு வணக்கமாக "அய்யனே! குதிரையை விட்டுக்கொடுக்கத் திருவுள்ளமில்லையாயின், எனது பிதாவின் இந்த நூறாவது யாகம் தோஷம் யாதுமின்றி நிறைவேறும்படிக்கும் அதன் பலம் பூர்ணமாய் என் தந்தைக்குக் கிடைத்ததாகும்படிக்கும் தாம் அநுக்கிரஹம் செய்வதுடன் கொலுமண்டபத்தில் வீற்றிருக்கும் எனது தந்தைக்கு இங்கே நடந்த எல்லாவிருத்தாந் தங்களையும் தாமே தமது தூதர்முகமாக அறிவிக்கவும் வேண்டும். இதுவே யெனக்குத் தாம் கொடுக்கவேண்டிய வரம்," என்று தெரிவித்துக் கொண்டான்.

இந்திரனும் அப்படியே யென்று அங்கீகரித்துச் ஸந்தோஷமாய் வந்தபடியே திரும்பிப் போனான். ரகுவோ கொஞ்சம் அதிருப்தியோடேயே திரும்பித் தன் பிதாவினிடத்திற்கு வந்தான். இந்திரனது தூதனால் எல்லா ஸமாசாரமும் தெரிந்ததனால் திலீபராஜன் ரகுவை யாதரவோடழைத்து வஜ்ராயுத காயம்பட்ட உடம்பைத் தடவிக்கொடுத்து அணைத் துச்சிமோந் துகந்தார்.

யாகம் கிரமமாக முடிவுபெற்றது. தேஹம் முடிந்த பிறகு ஸ்வர்க்கலோக மேறுவதற்குப் படிக்கட்டுகள்போல திலீபர் தொண்ணூற்றொன்பது அசுவமேத யாகங்கள் செய்தவரென்று புகழ்பெற்றார்.

சிறிதுநாள் சென்றதும் இக்ஷ்வாகு வம்சத்து அரசர்களெல்லாரும் செய்துவந்ததுபோலவே தமது குமாரனாகிய ரகுவிற்கு ராஜ்யாபிஷேகம் செய்து ராஜ்யபாரத்தை யொப்பவைத்துவிட்டு திலீபமஹாராஜன் தன் பத்நியாகிய ஸுதக்ஷிணையோடு வானபிரஸ்தாசிரமமாய்த் தபோவனம் போய்ச் சேர்ந்து மரங்களின் நிழலில் வாஸம்செய்பலானார்.

தகப்பனாரால் பட்டாபிஷேகம் பெற்ற ரகுமஹாராஜாவினது தேஜஸ்ஸு ராத்திரிகாலத்திய அக்நியின் தேஜஸ்ஸு

போல அதிக பிரகாசம்பெற்று விளங்கியது. திலீபன் காலத்திலேயே ஸந்தாபப்பட்டுக் கொண்டிருந்த எதிரிகளுக்கு இவருக்குப் பட்டாபிஷேகமான சங்கதி தெரிந்ததும் மனதில் அந்த அக்நி கொழுந்துவிட்டு எரிய ஆரம்பித்தது. இந்திரத் துவஜ உத்ஸவத்தின்போது ஜனங்கள் ஸந்தோஷித்து ஆரவாரிப்பதுபோல இவரது ராஜ்யவிசாரணை யாரம்பத்தைக் கொண்டாடலானார்கள்.

ரகு ஸிம்மாஸனத்தில் வீற்றிருந்த அந்த தினமே சத்ரு ராஜ்யமெல்லாம் இவருக்கு அடங்கியதாய் விட்டது. குற்றங்களுக் கேற்றவாறு தண்டிப்பதென்னும் முக்கியக் கொள்கையினால் எல்லா ஜனங்களும் இவரை மெச்சலானார்கள். பிதாவைவிட குணங்களில் இவர் மேற்பட்டுவிட்டதனால் மாமரம் பழுத்த பின்பு அதன்பூவை மறந்துவிடுவதுபோல ஜனங்கள் திலீபனை மறந்துவிட்டார்கள்.

மந்திரிகள் நீதிசாஸ்திர முறைப்படி நல் வழிகள் தீ வழிகள் இரண்டையும் எடுத்துக்காட்டினாலும் இப்புது அரசன் நல்வழியை யேற்றுக்கொள்வதே யல்லது தீ வழியை யங்கீகரிப்பதில்லை. ஜனங்களை ஆனந்திப்பிப்பதால் சந்திரனென்னும் பெயரும், தபிப்பதால் தபநனென்னும் பெயரும் போலே ஜனங்களை ஆசையுறச் செய்வதால் "ராஜா" என்னும் பெயர் இவருக்கு ஸார்த்தகமாயிருந்தது. இவருக்கு இரண்டு கண்களும் காதுவரை நீண்டு அகன்று இருந்தது. ஆனாலும் ஸூக்ஷ்மமான காரியங்களைப் பார்ப்பதற்குச் சாஸ்திரமே இவருக்குக் கண்ணாயிருந்தது.

இவ்வாறு மஹாராஜாவாக அபிஷேகம் பெற்ற ரகு மஹாராஜாவைப் பரிசரணை செய்வதற்காக முதலில் சரத்காலம் வந்து சேர்ந்தது. மேகங்கள் விலகிவிட்டதனால் ஸூர்யனது கிரணங்களோடு இவரது பிரதாபமும் கூடவே திக்கெல்லாம் வியாபிக்கலாயிற்று. ஜனங்களின் க்ஷேமத்திற்கு வேண்டிய காரியங்களைச் செய்ய ஏற்பட்டவர்களாகையால் இந்திரன் வில்லைக் கீழே யெறிந்ததும் ரகு வில்லை யெடுத்துக் கொண்டார்.

சரத்காலமானது வெண்டாமரையைக் குடையாகவும் நாணற்பூவைச் சாமரமாகவும் கொண்டு இவரை அநுகரிக்க வாரம்பித்த தென்றாலும் அந்த லக்ஷ்மியைப்பெற முடியவில்லை.

இராக்காலங்களில் நிலாவும் இவரது யசஸ்ஸூம் லோகமெங்கும் பரவி ஜனங்களை ஸந்தோஷிக்கச் செய்தது. திணைப்புலம் காக்கும் வேளாளப் பெண்மணிகள் கருப்பஞ் சோலையின் அடர்ந்த நிழலில் இருந்து இவரது பாலிய சரிதம் தொடங்கி யசஸ்ஸூக்களைப் பாடிக்கொண்டிருந்தார்கள்.

அகஸ்திய நக்ஷத்ரம் உதயமானதும் ஜலமெல்லாம் தெளிந்துவிட்டது. சத்துருக்களின் மனமோ ரகுவினால் எப்போது என்ன பரிபவம் நேருமோ வென்று கலங்கியது.

சரத்காலம் வந்ததும் திக்விஜயத்திற்காகப் புறப்பட வேண்டுமென்னும் எண்ணம் அரசன் மனதில் உண்டாயிற்று. உடனே பிரயாணம் நிச்சயிக்கப்பட்டது. சாஸ்திரமுறைப்படி யானை குதிரைகளுக்கு ஆராத்தி யெடுக்கப்பட்டது. அந்த அக்நி பிரதக்ஷிணமாக ஜ்வலித்தது. ஜயம் கையிலிருக்கிறதென்று அது காட்டிக்கொடுத்ததாயிற்று. ராஜதானிக்கும் கோட்டைக்கும் தகுந்தபடி காவலேற்படுத்தி வைத்து நாற்புறமும் தனக்குக் காவலாகச் சேனையைச் சேர்த்துக்கொண்டு அறுவகைச் சேனையையும் திரட்டிக் கூட்டிக்கொண்டு திலீபராஜன் திக்விஜயத்துக்காகப் புறப்பட்டவன் முதலில் கிழக்குதிக்கு நோக்கிப் பிரயாணப்பட்டான். தேர்களினால் கிளம்பும் தூள்கள் திக்கெல்லாம் மறைத்துவிடுவதாலும் யானைகள் மேகங்கள்போல் வளர்ந்து கறுத்துப் பெருத்திருப்பதாலும் ஆகாயம் பூமிபோலவும் பூமி ஆகாயம் போலவு மாயிற்று.

முதலில் செல்வது தேஜஸ்ஸூம் அதையடுத்துத் தூள்களும் அதன் பிறகு சப்தமும் அதன்பின்னே ரதம் முதலியவையுமென்று இப்படி நாலு பிரிவாக அச்சேனை சென்றதென்று சொல்லும்படி யிருந்தது.

தனது சக்தி விசேஷத்தாலே இவ்வரசன் மருகாந்தார (பாலைவன)ங்களில்கூட நல்லஜலம் கிடைக்கும்படியும் பெரிய ஆறுகள்கூட ஓடங்களால் ஸூகமாகத் தாண்டக்கூடிய தாகும்படியும் அடர்ந்த காடுகள்கூட ஒரு மரமுமின்றி வெட்ட வெளிச்சமாய் விடும்படியும் செய்துகொண்டு நடந்தான்.

கிழக்கு திக்கிலுள்ள அரசர்களோடு யுத்தம் செய்ததில் சிலர் ஓடியும் சிலர் வணங்கியும் சிலர் இறந்தும் போய்

விட்டதால் அந்தப் பக்கம் முழுதும் இவ்விரகுமஹாராஜா வின் வசமாய்விட்டது. பிறகு பனங்காடடர்ந்த ஸமுத்திரக் கரைக்குச் சென்றான். இவனுக் கெதிர்நின்று யுத்தம் செய்யத் திறனில்லாமையால் ஸூக்னதேசத்தார் பணிந்துவிட்டார்கள். கப்பற்படை பெருத்த வங்கதேசத்தாரை இவ்விரகு மஹாராஜன் ஜயித்துக் கங்கையின் பிரவாஹத்தி னடுவில் வெற்றிக்கொடியை நாட்டினான். மறுபடி அவர்கள் வணங்கவே அவ்விராஜ்யத்தை அவர்களுக்கே கொடுத்தான். அவர்கள் இவனுக்கு அநேகம் விலையுயர்ந்த வஸ்துக்களைக் காணிக்கையாகக் கொடுத்தார்கள்.

பிறகு இவ்விரகு ராஜன் யானைகளையே அணையாகவைத்துக் கபிசா நதியைக் கடந்து உத்கலதேசத்தார் ஸ்நேஹபாவம்பெற்று வழிகாட்ட அவ்வழியாகக் கலிங்க ராஜனைக் குறித்துப் பிரயாணப்பட்டான். அதனால் அவனுடைய பராக்ரமமானது மஹேந்த்ரமலையின் உச்சியிலே பிரகாசமாக ஜ்வலிக்கலாயிற்று. யானைப்படை பெருகிய அந்தக் கலிங்க ராஜன் பலமாக இவனை யெதிர்த்தானென்றாலும் ரகுவின் ஸேனாவீரர்கள் நாராசமென்னும் பாணங்களால் அவன் ஸேனையை யெல்லாம் முறியவடித்தோட்டி ஜயம்பெற்று அச்சந்தோஷத்தாலே வெற்றிலையை மடக்கித் தொன்னையாக வைத்துக்கொண்டு தென்னங்கள்ளை வேண்டிய அளவு குடித்து வெறித்துத் திரியலானார்கள்.

ஜீவனோடு சிறையாகப் பிடிபட்ட கலிங்கராஜனைச் சிறைவிடுத்து அவனது தனங்களை வாங்கிக்கொண்டு அவன் பூமியை அவனுக்கே கொடுத்துவிட்டு இரகு மஹாராஜன் பாக்குக்குலை பழுத்துத் தொங்கும் கடற்கரைவழியே நடந்து காவிரியாயும் தெற்கு திக்குக்குப் போனான். மிளகுக்கொடிகள் படர்ந்தடர்ந்த மலயமலைச்சாரலில் அவனது சேனை யிறங்கி யிளைப்பாறியதும் பாண்டிய அரசரோடு யுத்தம் துடங்கிற்று. தேஜஸ்ஸை யுடையவர்க ளெல்லாரிலும் முதல்வனாகிய ஸூர்யன்கூட இத்திக்குக்கு வந்தால் ஒளிமழுங்கிவிடுகிறான், இவ்விரகு மஹாராஜாவின் பிரதாபமோ இங்கும் பாண்டியர்களுக்குப் பொறுக்கமுடியாததாக விருந்தது. அங்கே தாம்ரபர்ணி யாற்றிலுண்டாகிய விலையுயர்ந்த முத்

துக்களைக் காணிக்கையாகக் கொடுத்து பாண்டிய ராஜன் வணங்கிவிட்டான்.

அந்தத் திக்கில் சந்தனக்காடு படர்ந்த மலயம் தர்த்துர மென்னும் இரண்டு மலைகளையும் ஸமுத்திரத்தைவிட்டு வெகு தூரம் விலகியிருக்கும் ஸஹ்யமலையையும் கடந்து இவரது ஜனங்கள் மலையாள தேசத்தை நோக்கிச்சென்றார்கள். இச் சேனை பெரிய ஸமுத்ரம் போலிருந்ததால் பரசுராமருக்காக வெகுதூரம் விலகிய ஸமுத்திரமே யிப்போது ஸஹ்யமலையை நெருங்கியதோ வென்று தோன்றும்படி யிருந்தது.

மலையாளத்துப் பெண்மணிகள் பயந்து நகைகளைக் கழற்றி விடவும் சேனையின் தூள்கள் முன்னெற்றிமயிர்க் குரிய வாஸனைப்பொடியாயின. முரளா நதியின் காற்று வீசுவதால் சொரியும் தாழம்பூத்தூள்கள் ஸேனாவீரர்களின் சொக்காய் களுக்குக் கந்தப்பொடி யாயிருந்தன. குதிரைக்குப் போடப் பட்டிருக்கும் கவசங்களின் சப்தம் சீதாளமரங்களின் சல சலப்பை யடக்கிக்கொண்டு படர்ந்தது. பேரீச்சம் மரங் களில் யானைகள் கட்டப்பட்டிருந்தபோது வண்டுகள் புன் னைப் பூக்களைவிட்டு மதஜல வாஸனைக்காக யானைகளின் மஸ்த கத்தில் வந்து மொய்க்கலாயின. பரசுராமன் வேண்டிக் கொண்டதன்மேல் தெற்கு ஸமுத்திரம் அவருக்குக் கொஞ் சம் இடம் கொடுத்தது, இப்போது ரகுவிற்கோ அவ்வர சன் முகமாய் கப்பம் கட்ட இசைந்துவிட்டது.

இப்படி கடல்நடுநாடுகளும் இவரால் ஜயிக்கப்பட்டுப் போனதால் திரிகூடமலையே அத்திக்குக்கு இவரது ஜய ஸ்தம்ப மாக விளங்கிற்று. பிறகு கடல்வழியே செல்லாமல் கரை வழியாகப் பாரஸீகத்தை நோக்கி இரகு மஹாராஜன் சென் றான். அங்கு யவனஜாதியார் குதிரைப்படையோடு எதிர்த்துப் பெரும்போர் புரிந்தார்கள். பல்லமென்னும் ஆயுதத்தைப் பிரயோகித்து ஒவ்வொரு யவனர் தலையும் அறுத்துக் கீழே வீழ்த்தப்பட்டது. தாடியும் மீசையுமாகிய அத்தலைகள் கீழே விழுந்திருந்தபோது தேனீக்களோடு தேனடைகள் விழுந் திருப்பதுபோலே காணப்பட்டது. அடிபடாத சிலர் தலைத் தொப்பியைக் கழற்றிக்கொண்டு இவ்விரகு மஹாராஜனைச் சரணடைந்துவிட்டார்கள்.

அதன்பிறகு வடதிசையை நோக்கிப் புறப்பட்டு காஸ்மீர தேசம் சேர்ந்தான். அவன் குதிரைகள் அங்கே ஸிந்து நதிக்கரையில் புரண்டு குங்குமப்பூப் பொடிகள் படிந்த உடலை உதறி நடந்துவந்ததினு லுண்டாகிய ஆயாஸத்தைத் தீர்த்துக்கொண்டன. ஹூணதேசத் தரசர்களை வென்றபிறகு காம்போஜ தேசத்தாரோடு சண்டை தொடங்கியபோது இவனது பராக்கிரமத்தை ஸஹித்தெதிர்த்து யுத்தம்செய்ய முடியாமல் அவர்கள் வணங்கிவிட்டதுடன் விலையுயர்ந்த ஜாதிக்குதிரைகளையும் அநேக தனங்களையும் இரகுவிற்குக் காணிக்கையாகக் கொடுத்தார்கள்.

இவ்விதமாகப் போனவிடமெங்கும் பூரணமான ஜயமே கிடைத்திருந்தும் இராஜன் மனதில் கர்வமென்பது அற்பமும் உண்டாகவில்லை. காம்போஜம் ஜயிக்கப்பட்ட பிறகு இமய மலையேறி கங்கைக் கரைவழியே செல்லலானுன். அங்கிருந்த வேடக் கூட்டத்தாருக்கும் அரசன் ஸேனையாருக்கும் பெரிய யுத்தம் ஆரம்பித்தது. உத்ஸவஸங்கேதர்களென்றும் கிந்நரர்களென்றும் மற்றும் பல பெயர்பெற்ற கூட்டத்தா ரெல்லாரும் ஒன்று சேர்ந்து ரகுவோடு சண்டையிட்டார்கள் என்றுலும் கடைசியில் தோல்வியுற்றுப்போய்க் கப்பம்கட்டிப் பணிந்துவிட்டபடியால் அரசன் இமயமலையினின்றும் இறங்கிவிட்டான்.

லௌஹித்ய மென்னும் நதியை இரகுவின் ஸேனை கடந்துவிட்டதென்று கேள்வியுற்றதும் ப்ராக்ஜ்யோதிஷ நகரத்தின் அரசன் நடுங்கிப்போனுன். ரகுவின் ஸேனையோ டெதிர்த்துப் போர்செய்ய முடியாதவனுகிப் பெரிய பெரிய யானைகளைக் காணிக்கையாகக் கொடுத்து வணங்கிவிட்டான்.

இவ்வாறு எல்லா தேசங்களையும் ஜயித்து வீரஸ்ரீயோடும் பெரும் ஸம்பத்தோடும் தன்னூருக்குத் திரும்பிய இரகு மஹாராஜன் சாஸ்திரமுறைப்படி "விசுவஜித்" என்னும் யாகத்தைச்செய்து முடித்துப் பெரும் புகழடைந்தான். தன்னுல் ஜயிக்கப்பட்டுக் கூடவந்திருந்த அரசர்கள் தங்கள் தோல்வியை மறந்துபோகும்படி அவர்களுக்குத் தக்க மரியாதைகள் செய்து அவரவர் ஊர்களுக்குப் போகும்படி விடைகொடுத்து அனுப்பினுன்.

விசுவஜித்து என்னும் அந்த யாகத்தில் தானம்செய்த தனால் பொக்கிஷத்தில் தனம் கொஞ்சமு மில்லாமல் வெறி தாய்ப்போன ஸமயத்தில் வரதந்துமுனிவ ரிடத்தில் வித்தி யாப்பியாஸம் செய்த கௌத்ஸரென்னும் முனிவர் குருதக்ஷி ணைக்குத் தனம் பெறவேண்டி இவ்விரகு மஹாராஜனிடம் வந்தார். பொன் வெள்ளி பாத்திரங்களொன்றும் இல்லாமை யால் அரசன் மண்பாண்டத்தில் அர்க்கிய ஜலமெடுத்துக் கொண்டு எதிர்சென்று வணங்கி மரியாதைசெய்து அழைத்து வந்து ஆஸனத்தில் உட்காருவித்து—"ஸ்வாமீ? தமக்கு எல் லா சாஸ்திரங்களையும் உபதேசம் செய்த குரு ஸ்வாமிகள் க்ஷேமமா? மனம் வாக்கு சரீரம் மூன்றினாலும் அம்மஹா புருஷன் இந்திரன் பயந்து நடுங்கும்படி அநுஷ்டித்துவரும் மூவகைப்பட்ட தபஸ்ஸும் விக்கினத்தால் செலவாய் விடாம லிருக்கிறதா? இளைப்பாறுவதற்காக வென்று பாத்திகட்டித் தண்ணீர் பாய்ச்சிப் பிள்ளைகளைப்போலே அன்போடு நீங்கள் வளர்த்துவரும் ஆச்சிரம வ்ருக்ஷங்கள் பெருங்காற்று முதலிய ஆபத்துக்களுக் கிரையாகாமல் வளர்ந்து வருகின்றனவா? தர்ப்பங்கள் அநுஷ்டானத்திற்கு முக்கியமாய் வேண்டியதா யிருந்தும் அதுகளை மேய்வதைத் தடுக்காமல் ஆதரவோடு பாது காத்துக் குட்டிபோட்டதும் உடனே மடியிலெடுத்து வைத்துக் கொண்டு அவற்றின் தொப்புள்கொடிகூட தங்கள் மடியிலே விழும்படியாகக் காப்பாற்றிவரும் மான்கள் ஸுகமே யிருக் கின்றனவா? நீங்கள் ஸ்நானமும் பிதுரு தர்ப்பணமும் செய் யும் தீர்த்தங்களும் நிலங்களில் பொறுக்கி யெடுக்கும் செந் நெல் தானியங்களில் அரசர்க்காக ஆறிலொன்று எடுத்து வைக்கும் மணற்றரைகளும் அழிவுறாம லிருக்கின்றனவா? அதிதிபூஜைக்கும் சொந்த உபயோகத்திற்கும் வேண்டிய காய் கனி கிழங்கு முதலிய காட்டுவஸ்துக்கள் பாழாம்படி நாட்டு மாடு முதலியவை பட்டிமேயாமலிருக்கிறதா? பிரம்மசாரி யாசிர மத்திலிருந்தே வித்தைகளெல்லாம் கிரஹித்த தாம் இனி கிருஹஸ்தாசிரமத்தை யடையத்தக்க காலம் இதுவாகை யால் தமது குருவினால் விவாஹம் செய்துகொள்ள அநுமதி பெற்றதா? மஹானாகிய தாம் இவ்வளவுதூரம் எழுந்தருளி தர்சனம் கொடுத்த இவ்வநுக்கிரஹத்திற்கு மேலே தாம் எதா வது ஆஜ்ஞைசெய்யவும் நான் அந்தப்படி நடக்கவும் வேண்டு

மென்று ஆசையுண்டாயிருக்கிறது. தாம் காட்டிலிருந்து அடியேனிடத்திற்கு விஜயம்செய்தது குருவின் ஆஜ்ஞாபனத்தினாலோ, அல்லது தாமாகவோ?" என்று வணக்கமாகக் கேட்டுக்கொண்டான்.

அரசன் மதுரமாகவும் கம்பீரமாகவும் வார்த்தை சொன்னானென்றாலும் கையில் வைத்திருக்கும் பாத்திரத்தைப் பார்க்கும்போதே இருப்பு தெரிந்துபோனதினால் தமது இஷ்டம் கைகூடாதென்று மனதில் நிராசையோடு கௌத்ஸ முனிவர் அரசனை நோக்கி, "அரசே! நீ அரசாட்சி புரியும்போது யாருக்கு என்ன குறை நேரும்? நீ கேட்டபடியெல்லாம் க்ஷேமமே. ஸூர்யன் காய்ந்துகொண்டிருக்கும்போது இருள் தென்படுமோ? மேலும் பெரியோர்களிடத்தில் பக்திசெய்வது உன் குலத்தாரெல்லாருக்கும்ஸ்வபாவமானதேயென்றாலும் அவர்களெல்லோரையும்விட நீ மேற்பட்டவனாயிருக்கிறாய். நான் யாசகனாக உன்னிடம் வந்தேன், ஆனால் காலந்தப்பி வந்தேனேயென்று வருத்தப்படுகிறேன். உன் ஸம்பத்துக்களையெல்லாம் ஸத்பாத்திரங்களுக்குத் தானம் செய்துவிட்டு வெறும் தேஹத்தோடு நிற்கிறது உனக்குப் பெரிய சோபையாகவேயிருக்கிறது. ருஷிகள் உருகிக்கொண்ட பிறகு வெறித்து நிற்கும் செந்நெல் தாள்போல நீ பிரகாசிக்கிறாய். அதனால் குருதக்ஷிணைக்காக வேண்டிய திரவியத்தை வேறு யாரிடத்திலாவது பெறவேண்டி நான் பிரயத்நம் செய்கிறேன்." என்று பதில் சொல்லிவிட்டுப் புறப்பட்டுப் போகத் தொடங்கினார்.

ரகு மஹாராஜா அவரைத் தடுத்து குரு தக்ஷிணையாக எது எவ்வளவு கொடுக்கப்பட வேண்டியதென்று கௌத்ஸரைக் கேட்டார். "அரசே! வித்தையெல்லாம் வாசித்து முடிந்ததும் தக்ஷிணையைப்பற்றி உத்திரவு செய்யும்படி குருவைக் கேட்டுக்கொண்டேன். நீ இதுவரையில் செய்த சிச்ரூஷையே போதுமானது. நீ ஏழையாகையால் பணம் வேண்டியதில்லையென்று குரு உத்தரவுசெய்தார். அதிகமாக நான் நிர்ப்பந்தம் செய்யவே அவருக்குக் கோபம் பொங்கிவிட்டது. அதனால் அவர் எதுவும் யோசியாமல் 'நான் உனக்குப் பதினான்கு வித்தைகள் கற்றுக் கொடுத்தபடியால் ஒவ்வொரு வித்தைக்கு ஒரு கோடியாகப் பதினான்கு கோடி திரவியம் கொடுக்கக்கடவாய்' என்று உத்தரவு செய்துவிட்டார். உன்

கையிலுள்ள பூஜாபாத்திரத்தைப் பார்த்தபின்பு இப்பெரிய தொகைக்காக உன்னை யெதிர்பார்க்க எனக்கு மனம் துணிய வில்லை." என்று கௌத்ஸர் பதில் கூறினார்.

அரசன் அதற்கு—"அய்யோ ஸ்வாமீ! எல்லா வித்தைகளி லும் கரைதேர்ந்த ஒரு முனிவர் குரு தக்ஷிணைக்காகப் பணம் வேண்டுமென்று ரகுவினிடம் வந்து பணம் கிடையாமல் வேறொரு தாதாவிடம் போனார் என்னும் பெரிய அபக்கியாதி இன்று புதிதாக எனக்கு உண்டாகும்படி செய்யவேண்டாம் ஸ்வாமீ! தாம் இரண்டு மூன்று நாள் எனது அக்நிசாலையில் த்ரேதாக்நிகளுக்கு நாலாவது அக்நிபோல வாஸம்செய்ய ஒப் பினால் அதற்குள் தமக்கு குருதக்ஷிணைக்காக வேண்டிய தனத்தைச் சேகரம்செய்யப் பிரயத்னம் செய்கிறேன்." என்று கேட்டுக்கொண்டான். கௌத்ஸர் அப்படியே ஒப்பினார். தேச மெல்லாம் ஏற்கெனவே பணம் கொடுத்தாய்விட்டபடியால் இம்முறை குபேரனோடு யுத்தம் செய்து தனம்பெற்று வருவ தாக ரகுமஹாராஜா தீர்மானித்தார். வஸிஷ்ட மகா முனிவ ரது மந்த்ர தீர்த்தத்தால் ப்ரோக்ஷிக்கப்பட்ட தாகையால் அவ் விரகுவினது ரதம் பூமியில் போலவே ஆகாசம் மலை ஸமுத் ரம் முழுதும் தடையின்றிச் செல்லும் சக்தி பெற்றிருந்தது.

சாதாரணமான சிற்றரசர்களைப் போலவே குபேரனையும் ஸுலகமாகவே வெல்வோமென்னும் உத்ஸாஹத்தோடு அன்று ஸாயங்காலம் ஆயுதங்கள் நிரப்பிய யுத்தத் தேரில் ப்ரஸ்தான மாகப் படுத்துக்கொண்டார். உதயத்திற்குப் ப்ரயாணம் நிச்ச யிக்கப்பட்டிருந்தது. அதற்குள் பொக்கிஷக் காவற்காரர்கள் ஓடிவந்து நடு இராத்திரியில் ஆகாசத்திலிருந்து பொக்கிஷ அறையில் பொன்மழை பெய்ததென்று ஆச்சரியமாய்த் தெரி வித்தார்கள்.

இரகு மஹாராஜன் அதை யெல்லாமெடுத்து கௌத்ஸ ருக்கு ஒப்பவைத்து எடுத்துப்போம்படி வேண்டினான். குரு தக்ஷிணைக்கு வேண்டியதற்கு மேல் அவர் எடுத்துக்கொள்ள ஒப்பவில்லை. அரசன் என்ன பலவந்தம் செய்தும் ருஷி ஒப்ப வில்லை. ருஷி யென்னசொல்லியும் அரசன் விடவில்லை. அத னால் தானத்திற்காக அரசனையும் வைராக்கியத்திற்காக ருஷி யையும் ஜனங்கள் ஆச்சரியப்பட்டுக் கொண்டாடினார்கள்.

"அரசே! பெரியோர்கள் நடந்த வழியே நியாயமாய் நீ நடந்து வருவதுபற்றி பூமிபோலே ஸ்வர்க்கமும் உனக்கு தனம் கொடுக்கிறது. எல்லா ஸம்பத்தும் உனக்கு நிறைந்திருப்பதால் நான் புதிதாக அநுக்கிரஹம் செய்யவேண்டிய தொன்றும் தென்படவில்லை. ஆனால் இதுவரையில் உனக்கு புத்திரபாக்கியம் இல்லாதிருப்பதால் உன் பிதாவுக்கு நீ பிறந்ததுபோல உனக்கும் மஹா குணசாலியாக ஒரு புத்திரன் பிறப்பான்." என்று ஆசீர்வதித்து அவனது சரீரத்தைத் தடவிக்கொடுத்து விடைபெற்று அப்பணத்தை அநேகம் ஒட்டகங்கள் மேலும் கோவேறுகழுதைகள் மேலும் ஏற்றிக்கொண்டு முனிவர் தபோவனத்திற்குச் சென்றார்.

சிறிது காலத்திற்குப்பிறகு அரசனுக்குப் புத்திரப்பேறு உண்டாயிற்று. பட்டமஹிஷி ப்ராஹ்ம முஹூர்த்தத்தில் ஒரு பிள்ளையைப் பெற்றாள். அக்குழந்தை ஸுப்ரஹ்மண்யன்போல பிரகாசித்தது. ப்ராஹ்ம முஹூர்த்தத்தில் ஜனித்தபடியால் ப்ருஹ்மாவின் பெயராகிய அஜன் என்பதையே அக்குழந்தைக்குப் பெயராக வைத்தார்கள். அழகு பலம் வீர்யம் தேஜஸ்ஸு பெருமை முதலிய எல்லா விஷயங்களிலும் அஜன் தகப்பனாரைப் போலவே யிருந்தான்.

கிரமப்படி ஜாதகர்மம் முதலியவை நடந்தது. உபாத்தியாயர்களிடத்தில் பணிந்து கேட்டறியவேண்டிய வித்தைகளை யெல்லாம் தெரிந்துகொண்டான். பாலியம் கழிந்து யௌவனம் வந்தது. இந்தத் தருணத்திற்கேற்க விதர்ப்ப தேசத் தரசனாகிய போஜனென்பவன் தன் ஸஹோதரிக்குச் சுயம்வரம் நடத்துவதாக நிச்சயித்து இவ்வஜ மஹாராஜாவை யழைத்து வரும்படி தூதனை அனுப்பினான். இது நல்ல சம்பந்தமென்று இரகுமஹாராஜா அங்கீகாரம் செய்துகொண்டு வேண்டிய ஸேனைகளைக்கூட்டி அஜனை விதர்ப்ப தேசத்திற்குப் பிரயாணப்படுத்தி யனுப்பிவைத்தார்.

போகும்வழிகளில் தக்க ஏற்பாடுகள் செய்யப்பட் டிருந்தமையால் பிரயாஸ மென்பதே தெரியாமல் ஸேனைகளும் ராஜகுமாரனும் பிரயாணம் செய்தார்கள். நர்மதை நதிக்கரை குளிர்ந்தகாற்றும் புன்கமரங்களின் அடர்ந்தநிழலுமா யிருந்தபடியாலும் நடக்கவேண்டிய வழியில் பெரும்பாகம் தாண்டி

யாய்விட்ட படியாலும் ஒருநாள் அங்கே ஸேனையோடு தங்கினார்கள்.

அப்போது பெரிய மலைபோலே கறுத்தும் உயர்ந்தும் மதங் கொண்டுமிருந்த காட்டானையொன்று மலைகளில் முட்டி முறிந்துபோன தந்த நுனிகளினாலும் துதிக்கையாலும் நர்மதையாற்றி லிறங்கிக் கலக்கிக்கொண்டிருந்தது. நாட்டு யானைகளைப் பார்த்ததும் கோபமும் மதப்பெருக்கும் பொங்க இச்சேனை யிறங்கி யிருக்கு மிடத்திற்கு நேராக ஓடிவர ஆரம்பித்தது. அதைக் கண்டதும் குதிரைகள் கட்டுக்கயிற்றை யறுத்துக்கொண்டு சிலதும் கட்டுமுளைப் பிடுங்கிக்கொண்டு சிலதும் ஓடலாயின. தேர்க்குதிரைகள் தேரோடே யிழுத்துக்கொண்டோடியதால் அநேகம் தேர்கள் அச்சும் ஆணியும் முறிந்தும் புரண்டும் விழுந்தும் போயின. காலாட்கள் இதொன்றையுங் கவனிக்கமுடியாமல் தங்கள் தங்கள் பாரியைகளைக் காப்பாற்ற வழிதேடிக்கொண்டிருந்தார்கள்.

இப்படி ஸேனையெங்கும் பெருங்குழப்பமாய் விட்டதினாலே ராஜகுமாரனாகிய அஜன் சண்டைக்கென்று சத்துருக்களால் ஏவப்படும் நாட்டுயானைகள் தவிர காட்டுயானைகளை ராஜாக்கள் கொல்லக்கூடாது என்று சாஸ்திரங்கள் கூறுவதால் அதை யடிக்க நினையாமல் அது திரும்பி யோடிப்போகும்படியாக ஒரு பாணத்தை யெடுத்து வில்லிலேற்றிட்டு நாணை மிருதுவாக இழுத்து அதன் மஸ்தகத்தில் பொத்திக்கொள்ளும்படி பிரயோகித்தான். அப்பாணம் மேலேபட்ட உடனே அந்த காட்டுயானை யுருவம்போய் தேஜோமண்டலத்தி னடுவில் அழகிய உருவத்தோடு ஒரு கந்தர்வன் காணப்பட்டான். இதைப் பார்த்து ஸேனையார்க ளெல்லாரும் பேராச்சர்யம் கொண்டார்கள்.

உடனே அவன் அங்கிருந்தபடியே மனதில் நினைத்த மாத்திரத்தில் கையில் வந்து சேர்ந்த கற்பகவிருக்ஷ புஷ்பங்களை இவ்வஜன்மேல் விறைத்து வணக்கமாய்—"ராஜகுமாரா! நான் ஒரு கந்தர்வன், என் பெயர் பிரியம்வதன். என் பிதா கந்தர்வராஜன். அவர் பெயர் பிரியதரிசனர். எனது கர்வத்தால் மதங்கமுனியை யவமதித்து அவரால் யானையாய்ப் போய் விடும்படி சபிக்கப்பட்டேன். அவரைப் பலமுறை வணங்கி

வேண்டிக்கொண்டபிறகு அவரிரங்கினர். ஜலமானது நெருப்போ வெயிலோ பட்டால் உஷ்ணமாகிறது. ஆனாலும் அதன் ஸ்வபாவமான குணம் குளிர்த்தியே யல்லவா? 'இக்ஷ்வாகுவம் சத்திய ராஜகுமாரனொருவன் உன் மஸ்தகத்தில் பாணத்தால் அடிக்கப் போகிறான். அப்போது நீ இவ்யானை யுருவத்தை விட்டுச் சொந்த ரூபத்தைப் பெறுவா' யென்று அவர் அநுக்கிரஹம் செய்திருந்தார். இதுவரையி லநேககாலமாக உன் வரவை யெதிர்பார்த்திருந்தேன். இன்று என் பொல்லாத காலம் கழிந்தது. உனது அநுக்கிரஹத்தால் சாபம் நீங்கி விட்டது. இவ்வளவு உபகாரத்தை உன்னால் அடைந்த நான் உனக்கு எதாவது ஒரு பிரதியுபகாரம் செய்யாமல் போவேனானால் நான் நிஜரூபம் பெற்றது வீணையாய்ப் போய்விடுமன்றோ? பிரயோகிக்கவும் திருப்பிக்கொள்ளவும் வேண்டிய முறையோடு காந்தர்வா ஸ்திரத்தை யான் உனக்குக் கொடுக்கிறேன். அது யார்பேரில் விடப்படுகிறதோ அவர்கள் மோஹித்து (மூர்ச்சித்து) விழுந்து விடுவார்கள். ஆதலால் சத்துருக்களை வதைசெய்யாமலே ஜயம் கைக்கு வருவதாகிறது. அடித்தேனே யென்று நீ லஜ்ஜைப்படக் காரணமில்லை. அடித்தாயானாலும் இரங்கினையே. அதனால் என் வேண்டுகோளை நீ மறுக்காது ஏற்றுக்கொள்ளவேண்டும்." என்று கேட்டுக்கொண்டான்.

அஜன் அப்படியே யென்றொப்பி நர்மதையில் ஆசமனம் செய்து கிழக்குமுகமாயிருந்து பிரியம்வதன் உபதேசிக்க வடக்கு முகமாயிருந்து அவ்வஸ்திர மந்தரத்தை கிரஹித்துக் கொண்டான். இப்படி ஸ்நேஹிதர்களாகவான அவ்விரண்டு ராஜகுமாரர்களில் ஒருவன் சைத்ரரத சமீபத்திற்கும் ஒருவன் விதர்ப்பதேசத்திற்கும் போய்ச் சேர்ந்தார்கள். நகரத்திற்கருகே போம்போதே இவ்விருத்தாந்தத்தைக் கேள்வியுற்ற போஜராஜன் அஜனை விசேஷ மரியாதையோடு எதிர்கொண்டு வந்து அழைத்துப்போய்த் தன் அரண்மனையில் இறக்கிப் பற்பல உபசாரங்கள் செய்தான். அவ்வுபசாரங்கள் நடந்தமாதிரியில் போஜனை அதிதியென்றும் அஜனை வீட்டுக் காரனென்றும் எல்லோரும் நினைக்கும்படி யிருந்தது:

கிழக்குமுகமாக வாசற்படியும் அதில் மங்கள கும்பங்களும் வைக்கப்பட்டு வெகு விசித்திரமாக அலங்கரிக்கப்

பட்டிருந்த அறையில் அஜன் படுத்துக்கொள்ள ஏற்படுத்தப்பட்டது. ஸ்வயம்வரத்தைப்பற்றி யோசனை செய்துகொண்டிருந்தபடியால் வெகுநாழிகை வரையில் அவனுக்குத் தூக்கம் வரவில்லை. உதயமானதும் ஸூதகுமாரர்கள்:—

“ராஜகுமாரா! இராத்திரிப்பொழுது கழிந்துவிட்டது. நீர் படுக்கையைவிட் டெழுந்திருப்பீராக, பூமியை இரக்ஷிக்கும் பாரத்தை ப்ருஹ்மதேவன் இரண்டாகப் பங்கிட்டிருக்கிறான். ஒரு பாகத்தை உமது பிதா நடத்துகிறார், மற்றொரு பாகத்தை நடத்தவேண்டியவர் நீரே யன்றோ, இரவுப்பொழுதில் தமது முகத்திற்கு ஸமமாக நினைக்கப்பட்ட சந்திரனுக்கு இப்போது அந்த காந்தியில்லாமல் போய்விட்டிருக்கிறது. தாமரைப்பூக்கள் இப்போதுதான் மலர ஆரம்பிக்கிறபடியால் உள்ளே வண்டு அலையும் அதுவும் இப்போதுதான் விழிக்க ஆரம்பிக்கிறபடியால் இங்குமங்கும் கருவிழியலையும் உமது கண்களும் ஒன்றுக்கொன்று உவமானமாகட்டும். உமது மூச்சுக் காற்றிற்கு ஸ்வபாவமாயுள்ள வாசனைக்குச் சமமாய் வாஸனையடைய வேண்டியதற்காக இந்தக் காலைக்காற்று மரங்களிலிருந்து புஷ்பங்களைக் கீழேதள்ளுவதும் ஸூர்ய கிரணங்களால் மலரும் தாமரைப்பூக்களோ டிழைவதுமாய்ச் சிரமப்படுகிறது. சிவந்த இளந்துளிர்களில் முத்து முத்தாய்ப் பனிநீர்த் திவலைக ளிருப்பது உமது அதரத்தில் புன்சிரிப்பு படர்வதுபோல விளங்குகிறது. ஸூர்யன் நன்றாய்வெளிவருவதற்கு முன்னமே அருணன் அந்தகாரத்தை யெல்லாம் தொலைத்து விடுகிறானன்றோ’ தாம் யுவராஜாவாகிச் சேனையின் முகப்பிலே நிற்கத் தொடங்கியபிறகு தமது பிதாவுக்கு யுத்தம் செய்ய வேண்டிய அவசியமில்லை யல்லவா? தமது ஸேனையானைகள் படுக்கையைவிட் டெழுந்துவிட்டன. இளம்வெயில் தந்தங்களில் படுவதினால் காவியலையை பிடித்ததுபோல விளங்குகின்றன. பெரிய கூடாரங்களில் கட்டப்பட்டிருந்த தமது பாரஸீகதேசத்துக் குதிரைகள் தூக்கம் தெளிந்தெழுந்து பெருமூச்சு விடுவதால் அவைகளுக்கு ஆஹாரமாக எதிரே வைக்கப்பட்ட இந்துப்பு எல்லாம் அழுக்கடைந்து விடுகின்றது. நேற்று ஸாயங்காலம் வைக்கப்பட்ட பலிபுஷ்பங்கள் வாடிப்போய்விட்டதால் தரை இடம்விட்டுத் தெரிகிறது. தீபங்கள் ஒளி மழுங்கிவிட்டன. தம்மைப் பள்ளியெழுப்ப நாங்கள்

சொல்லும் வார்த்தைகளைத் தமது கிளி அநுவாதம் செய்கிறது." என்று மங்களவாத்திய கானங்களோடு துயிலெழுப்பினார்கள்.

ராஜகுமார னெழுந்திருந்து காலைக்கடன்களை முடித்துக்கொண்டு அரசர்களெல்லாரும் வந்து நிறைந்திருக்கும் ஸ்வயம்வர மண்டபம் போய்ச் சேர்ந்தான். அங்கே அவரவர்களுக்குத் தக்கபடி உபசாரம் செய்யப்பட்டு ஆஸனங்களில் உட்கார்ந்திருக்கும் ராஜகுமாரர்களைக் கண்டான். ரதிதேவி வேண்டிக்கொள்ளப் பரமசிவன் தயைசெய்து மறுபடி நிஜரூபத்தைக் கொடுத்தனுப்ப சுயம்வரம் பார்க்கவந்த மன்மதனே என்று நினைக்கும்படியிருக்கிற இவ்வஜனைக் கண்டதும் இந்துமதியைப்பற்றி அவர்களெல்லாரும் நிராசையாய் விட்டார்கள்.

விதர்ப்பராஜன் உயர்ந்த ஸிம்ஹாசனத்தில் அஜனை வீற்றிருக்கச்செய்தான். அந்த ஸ்வயம்வர மண்டபத்தில் அநேக ராஜாக்கள் வந்து வீற்றிருந்தும் இவ்வஜனே எல்லோரிலும் மேலாக விளங்கினான். அதனால் அங்கு வந்திருந்த எல்லாரும் எல்லா ராஜாக்களையும் விட்டு இவனையே யிமையாமல் பார்க்க ஆரம்பித்தார்கள். பிறகு ஸூர்ய வம்சத்திலும் சந்திர வம்சத்திலும் உதித்த ராஜாக்களின் வம்சாவளியும் பிருதும் கூறப்பட்டது. அகரு தூபம்போட்டு அந்தப்புகை உப்பரிகை மேலெல்லாம் சூழ்ந்தது. மங்கள வாத்தியங்களும் சங்கங்களும் முழங்கின. மணமகளாகிய இந்துமதி விவாஹவேஷத்தோடு தாதிமார்கள் புடைசூழப் பல்லக்கிலேறிக்கொண்டு ராஜாக்கள் வீற்றிருக்கும் ஸிம்ஹாஸனங்களுக் கெதிரேயுள்ள வழியே வரலானாள். அவளைப்பார்ப்பதற்கு ஆயிரம் கண்கள் வேண்டுமென்று சொல்லும்படி அவள் ப்ருஹ்மதேவனால் ஆச்சரியமாய் ஸ்ருஷ்டிக்கப்பட்டிருப்பதால் ராஜாக்களெல்லாருடையவும் மனமும் அவளிடத்திலேயே போய்ச் சேர்ந்தது. தேஹங்கள் மாத்திரமே யாஸனத்தில் நின்றது.

இந்துமதியைக் கண்டதும் அவரவர்கள் எதெதுவோ மனோரதங் கொண்டபடியால் அவ்வாசைப் போக்கின்படியே வேறுவேறு விதமான ச்ருங்கார சேஷ்டைகளைச் செய்யலானார்கள்.

I. ஒரு அரசன் இருகையாலும் காம்பைப் பிடித்துக்கொண்டு தாதுகள் பரிவேஷம்போல் வளைவாய் [குண்டாய்]ச் சிந்தும்படி தாமரைப் புஷ்பத்தைச் சுழற்றிக்கொண்டிருந்தான்.

II. மற்றோரரசன் தனது தோளிலிருந்து நழுவித் தோள்வளை ரத்னத்தில் மாட்டிக்கொண்ட உத்தரீயத்தை யிழுத்துப் பழையபடி தோளில் போட்டுக்கொண்டான்.

III. மற்றோரரசன் கடைக்கண்ணால் ஸ்வயம்வரப் பெண்ணைப் பார்த்துக்கொண்டே கட்டைவிரல் நுனியை வளைத்துக் கொண்டு காலால் பாதபீடத்தில் கீறிக்கொண்டிருந்தான்.

IV. மற்றோரரசன் இடதுகையை ஆஸனத்தில் ஊன்றிக் கொண்டு ஒருபுறமாய்க் கொஞ்சம் திரும்பிப் பக்கத்திலிருந்த ஸ்நேஹிதனோடு வார்த்தையாடலானான்.

V. மற்றோரரசன் பெண்கள் காதில் தரிக்கும் பெருமை பெற்ற தாழம்பூவிதழ் ஒன்றையெடுத்து நகத்தால் கிள்ளி யெறிந்துகொண்டிருந்தான்.

I. இத்தாமரை மலரைப்போலே நானுன்னைச் சுழற்றி யாள்வேனென்பது அரசன் கருத்தாம். பூவைச்சுழற்றுவது லக்ஷண விரோதமென்று இந்துமதியின் கருத்து.

II. இவ்வாறுன்னை நானணைத்துக்கொள்வேனென்று அரசனுக்குக் கருத்து. இவனது தோளில் ஏதோ குற்றம் இருக்கவேண்டும், அதனால் வேகமாயிழுத்து மறைத்துக்கொள்ளுகிறானென்று இந்துமதி கருத்து.

III. நீ என்னருகில் வாவென்றழைப்பதாக விரல் மடக்கத்திற்கு அரசன் கருத்து. புருஷர் கீழேகாலால் கீறுவது அவலக்ஷணமென்று இந்துமதி கருத்து. கூத்துமுடிந்ததும் கூத்தாடியவர்கள் கீறுவதுண்டு.

IV. இது போலுன்னை என்னிடதுபக்கத்தி லுட்காரவைத்துக் கொண்டெப்போதும் வார்த்தையாடிக் கொண்டிருப்பேனென்பது அரசன் கருத்து. பார்த்ததும் முகத்தைத் திருப்பிக்கொள்ளு மிவன் உபயோகப்படாத மனுஷனென்பது இந்துமதியின் கருத்து.

V. இவ்விதமாக நான் உனது சரீரத்தில் நகக்குறி செய்வேனென்பது அரசன்கருத்து. துரும்பையும் இலையையும் கிள்ளுகிறவன் புத்திசாலி யல்லவென்பது இந்துமதியின் கருத்து.

VI. மற்றோரரசன் தன்கையிலுள்ள சக்கிரவர்த்தி லக்ஷணங்கள் தெரியும்படியாகப் பாச்சிகையெடுத் தாடிக்கொண்டிருந்தான்.

VII. மற்றோரரசன் தன்கிரீடம் நிலைப்படி யிருக்கையிலேயே யசைந்துபோனதாக வெண்ணி ஒருகையை அதன் மேல் வைக்கலானான்.

இது இப்படியிருக்க அரசர்களின் பெயரும் குலமும் பெருமையும் அறிந்த ஸுநந்தையென்னும் வாயிற்காப்பாள் இந்துமதியைப் பல்லக்கோடு மகதராஜனுக்கெதிரே நிறுத்தி— "ராஜகுமாரீ! இவர் மகததேசத்தரசர், பரந்தபனென்று பேர். அநாதர்களைப் பரிபாலிப்பதிலும் தன் குடிகளை நயப்பிப்பதிலும் மிக்க ஊக்கமுடையவர். பூமியில் அநேக அரசர்கள் இருக்கிறார்கள் என்றாலும் இவரைப்போன்ற நல்ல ராஜாக்கள் இல்லை. இவர் அநேக யாகஞ்செய்து அடிக்கடி இந்திரனைத் தன்னிடம் வரவழைத்திருக்கிறார். இவரை நீ விவாஹம் செய்துகொள்ள ஸம்மதித்தால் புஷ்பபுரத்தில் பெண்மணிகளின் கண்கள் பாக்கியம் பெற்றதாகும்." என்று அறிவிக்க இந்துமதி அவனை ஒரு தடவை பார்த்துவிட்டுக் கையிலுள்ள ஸ்வயம்வர மாலையோடு ஒரு கும்பிடுபோட்டு வார்த்தை யொன்றும் சொல்லாமலே மறுதளித்துவிட்டாள்.

பிறகு ஸுநந்தை இவளை மற்றோரரசனெதிரே நிறுத்தி "ராஜபுத்ரி! இவர் அங்கதேசத்தரசர். இவரைப் பார்த்து அப்ஸரஸ்ஸுக்கள் ஆசைப்பட்டார்கள். சாஸ்திரக்காரர்களால் யானைகளையடக்கும் முறை தெரிந்துகொண்டவர். இவர் பூலோகத்திலிருந்துகொண்டே ஸ்வர்க்க ஸுகத்தை யநுபவிப்பவர். இவரிடத்தில் லக்ஷ்மியும் ஸரஸ்வதியும் நிலைபெற்று வாஸம் செய்கிறார்கள். அவர்களுக்கேற்ற சோபையும் கியானமும் இருப்பது உனக்கே யாகையால் நீ மூன்றாவ

VI. நீயும் நானுமாய் இப்படி சொக்கட்டாடுவோமென்பது அரசன் அபிப்பிராயம். சொக்கட்டாடுவது பெரியோர்களுக்குத் தகாதே யென்று இந்துமதியின் கருத்து.

VII. கிரீடத்தைப்போலே யானுன்னைத் தலையில் வைத்துக்கொண்டாடுவேனென்பது அரசனது அபிப்பிராயம். தலையில் கைவைத்துக் கொள்வது அவலக்ஷணமென்பது இந்துமதியின் அபிப்பிராயம்.

ளாக இவரிடம் இருக்கக்கூடும்." என்று தெரிவிக்க இந்துமதி அவனையும் பார்த்துவிட்டு "போ" என்று தாதிக்கு உத்தரவு செய்தாள். அங்கராஜன் அழகில்லாதவனன்று. இவளும் குணமறியும் சக்தியில்லாதவளன்று. ஆனாலும் ஒவ்வொருவரிஷ்டம் ஒவ்வொருவித மல்லவோ?

மற்றோரரசனைக் காட்டி ஸுநந்தை—"ராஜகுமாரி! இவரைப்பார். இவர் அவந்திதேசராஜா. இவரது ஸௌந்தர்யமும் காந்தியும் வேறொருவருக்கும் இல்லை. இவர் உல்லாஸமாய்ப் புறப்படும்போது பல குதிரைப் படைகள் கூடச்செல்லும். இவர் மஹாகாளமென்னும் ஸ்தலத்தருகே வாஸம் செய்பவராகையால் அங்கெழுந்தருளியிருக்கும் பரமேசுவரனது சிரஸில் இருக்கும் சந்திரன் எப்போதும் பிரகாசித்துக்கொண்டே யிருப்பதில் இவர்வரையில் கிருஷ்ணபக்ஷமே கிடையாது. இவரோடுகூடி சிப்ரா நதியில் ஜலக்கிரீடை செய்யவும் அதன் கரைத்தோட்டத்தில் உலாவவும் உனக்கு ஆசையுண்டாகிறதா?" என்று தெரிவித்தாள். எல்லா குணமும் நிறைந்திருந்தும் அவனை விவாஹம் செய்துகொள்ள இந்துமதி அபிப்பிராயப்படவில்லை. ஆம்பலோடை ஸூர்யனை நேசிக்குமோ?

பிறகு ஸுநந்தை மற்றோரரசனைச் சுட்டி—"அம்மணி! முன்னே பெரியப் பிரசித்தியோடு கார்த்தவீர்யார்ஜுனனென்றொரு மஹாத்மா இருந்தாரென்று நீ கேட்டிருப்பாயே. ஸாதாரணமான காலங்களில் இரண்டு கையாயும் யுத்த காலங்களில் ஆயிரங் கையாயும் இருப்பவர். தத்தாத்ரேயரது அநுக்கிரஹம் பெற்றவர். எல்லா யாகங்களும் செய்தவர். அவரது ராஜ்யத்தில் அக்கிரமம் செய்வதாக மனதில் யாராவது நினைத்தாலும் உடனே அவனெதிரே வில்லுங் கையுமாய்த் தோன்றி அந்த கெட்ட எண்ணத்தை மாற்றி வைப்பவர். தன் ராஜ்யத்தில் யாரும் மனதில்கூட பாபம் நினைக்காதபடி ராஜ்ய பரிபாலனம் செய்தவர். எல்லா லோகங்களையும் ஜயித்து தேவேந்திரனையும் சிறையிலடைத்த ராவணனைப் பிடித்து நாணினால் இருபதுகைகளையும் இறுகக்கட்டிச் சிறைச்சாலையிலடைத்து வைத்தவர். அவர் வம்சத்தில் பிறந்தவர் இவ்விராஜா. இவர் அக்நியை உதவியாகப் பெற்றவராகையால் க்ஷத்திரிய குலாந்தகரான பரசுராமரது கோடாரி

யையும் புஷ்பம்போல நினைக்கிறவர். ரேவா நதியில் விளையாட ஆசையுண்டானால் இவருக்கு மாலையிடுவாயாக." என்று கூறினாள். இந்துமதிக்கு அவனிடத்தில் மனம் செல்லவில்லை. தாமரை சந்திரனுக்கு மலருமோ?

பிறகு ஸுநந்தை சூரஸேனதேசாதிபதியாகிய ஸுஷேணனைச் சுட்டிக்காட்டி—"ராஜபுத்ரி! இவர் நீபவம்சத்தில் உதித்தவர். அனேக யாகம் செய்தவர். இவரது குணங்கள் அளவிட முடியாதவை. ஆச்சரியமானவைகள். இவரது ராஜ்யத்தில் ஒன்றுக்கொன்று விரோதமென்பதே கிடையாது. புலியும் பசுவும் ஒரு துறையில் இறங்கிக் கலந்து தண்ணீர் குடிக்கிறது. தனது சத்துருராஜாக்களின் உப்பரிக்கை மேலெல்லாம் புல் மூடியிருக்கும்படி செய்ய வல்ல பராக்கிரமமுடையவர். யமுனையாற்றில் ஜலக்கிரீடை செய்யும் பெருமை பெற்றவர். கருடனுக்குப் பயந்து வந்த காளியனுக்கபயம் கொடுத்து ரக்ஷித்தவர். அக்காளியன் வெகுமானமாகக் கொடுத்த ரத்னத்தை மார்பில் தரித்துக்கொண்டிருப்பதால் கௌஸ்துபரத்னத்தைத் தரித்துக்கொண்டிருக்கும் மஹாவிஷ்ணுவைவிட அதிகமாகப் பிரகாசிக்கிறார்: இவரை நீ மணம் புரிவதானால் கோவர்த்தன மலையின் தாழ்வரைகளில் சிலாஸத்துக்கள் பெருகி வாஸிக்கும் கற்பாறைகளின்மேலிருந்து மயில்கள் கூத்தாடுவதைப் பார்த்துக்கொண்டே பிருந்தாவனமென்னும் உபவனத்தில் இஷ்டப்படி விளையாடலாம்." என்று தெரிவித்தாள். இந்துமதியோ வேறொரு அரசனுக்கு மாலை சூட்டப் போகிறவளாகையால் அவனை விட்டு முன்னே சென்றுவிட்டாள். ஸமுத்திரம் போய்ச் சேரும் மஹாநதியானது வழியில் மலையைக்கண்டால் அதில் தங்குமோ?

இந்துமதி போய் நின்ற இடம் கலிங்கநாட்டரசனாகிய ஹேமாங்கதனுக் கெதிராயிருந்தது. ஸுநந்தை அவனைக் குறிப்பிட்டு—"அம்மணி! ஸமுத்திரத்திற்கும் மஹேந்த்ர பர்வதத்திற்கும் அரசன் இவர். இவர் இருகையாலும் பாணப்ரயோகம் செய்யும் சக்திபெற்றவர். இவர் உறங்கியெழுந்திருக்கும்போது ஸமுத்திரமே பள்ளியெழுச்சி கூறி யுபசரிக்கிறது. இவருக்கு மாலையிட்டால் த்வீபாந்தரங்களிலுள்ள லவங்கச்செடிகளி னூராய்ந்து அந்த பரிமளத்தோடு வீசும் கடற்காற்றை ஸுகமாக அநுபவிக்கலாம்." என்று கூறினாள்.

இந்துமதி அவனையு மேற்றுக்கொள்ளாமல் முன்னே நடந்தாள். பாக்கிய மில்லாதவனுக்கு ஸம்பத்து கிடைக்குமோ?

பிறகு ஸுநந்தை கான்ய குப்ஜமென்னும் நதியின் கரையிலுள்ள நாகபுரத்தின் அரசனெதிரே நிறுத்தி—"ராஜபுத்ரி! இவ்வரசனைப்பார். இவர் பெயர் பாண்டியன். இவரது ஆபரணம் சந்தனம் மாலை இவைகள் இது வரையில் பார்த்த அரசர்களெல்லாரையும்விட உத்தமமாயிருக்கிறது. விந்திய மலையைத் தாழ்த்திவிட்டவரும் ஸமுத்ரத்தைப் பானம் செய்தவருமாகிய அகஸ்த்யமஹாமுனிவர் இவ்வரசன் அசுவமேதயாகம் செய்து அவபிருதஸ்நாநம் செய்யும்போது வந்திருந்து ஸுகம் விசாரித்து ஆசி கூறுவது வழக்கம். இவர் தபஸுசெய்து பரமசிவனை ஸாக்ஷாத்கரித்து பிரம்மசிரமென்னும் அஸ்திரத்தைப் பெற்றிருப்பதால் இவர் தன் ஸ்வாதீனமாயிருக்கும் ஜநஸ்தானத்தை முற்றுகைபோடுவரென்று பயந்து ராவணன் இவரோடு ஸமாதானம் செய்துகொண்டு போனான். இவருக்கு நீ மாலை யிட்டால் வெற்றிலைக்கொடி சுற்றிய பாக்குமரங்களும் ஏலக்கொடிகள் சுற்றிய சந்தனமரங்களும் அடர்ந்த மலயமலைச் சாரலில் ஸுகமாய் கிரீடிக்கலாம். இவர் கருநெய்தல்பூ நிறமாயும் நீ கோரோசனை வர்ணமாயும் இருப்பதால் நீங்களிருவரும் தம்பதிகளானால் மேகமும் மின்னலும் போல அதிக அழகாயிருக்கும்" என்று தெரிவித்தாள். இப்படி ஸுநந்தை செய்த உபதேசமானது இந்துமதியின் இருதயத்தில் பிரவேசிக்கவே யில்லை. அஸ்தமித்தபிறகு தாமரைப்பூ மூடியிருக்கும்போது சந்திரனது காந்தி அதற்குள்ளே பிரவேசிக்குமோ?

இப்படி இந்துமதி ஒவ்வொரு அரசனையும் விட்டுப் போய்க்கொண்டிருந்தபோது விளக்கை யெடுத்துக்கொண்டொவ்வொரு கட்டிடமாய்ப் போய்க்கொண்டே யிருந்தால் அந்த கட்டிடங்கள் உடனுக்குடனே இருள் மூடிவிடுவது போல அவ்வரசர்க ளொவ்வொருவரும் முகம் வாடிவிட்டார்கள். வரிசையில் இந்துமதி அஜனுக்கெதிரில் வந்து நின்றாள். இவள் தனக்கு மாலை யிடுவளோ இடமாட்டாளோ வென்று அஜன் சம்ஸயப்பட்டானென்றாலும் வலதுதோள் துடித்ததால் அந்தஸம்சயம் நீங்கித் தைரியம் கொண்டான். இவனைப் பார்த்தபிறகு இந்துமதிக்கு வேறே அரசனைப் பார்க்கவேண்டு

மென்று எண்ணமே யுண்டாகவில்லை. மலர்ந்த பூங்கொத்துக் களோடு ஒட்டுமொமரம் தென்பட்டபிறகு வண்டுக்கூட்டம் வேறே மரத்தை யபேக்ஷிக்குமோ?

ராஜகுமாரியின் அபிப்பிராயத்தைப் பார்வையால் அறிந்து கொண்ட ஸுநந்தை கொஞ்சம் விரிவாக இவரைப்பற்றிக் கூறத்தொடங்கி—"ராஜநந்தினீ! இக்ஷ்வாகு வம்சத்தில் புரஞ்ஜய னென்னும் ஓர் அரசன் உதித்தார். அவர் மஹாவிஷ்ணுவின் அம்சம். தேவதைகளுக்கும் அஸுரருக்கும் யுத்தம் நடந்த போது அவர் தேவர்களுக்கு உதவியாகச் சென்றார். அப் போது தேவேந்திரன் விருஷபரூபமாயவரை யேற்றிக்கொண் டான். அவர் அவ்விருஷபத்தின் முசுப்பிலேறிப் பரமசிவ னைப்போலே பெரிய பராக்கிரமத்தைக் காட்டி யுத்தம் செய்து அஸுரர்களை ஜயித்தார். அதனால் அவருக்குக் காகுத்ஸ்தர் என்னும் பெயரும் அவர் வம்சத்தாருக்கு காகுத்ஸ்தர்களென் னும் பெயரும் வந்தது. அவர் இந்திரனோடுகூட தேவஸபை யில் அர்த்தாஸனத்தில் வீற்றிருந்து அநேகதடவை மரியாதை செய்யப் பெற்றிருக்கிறார். அந்த மஹா வம்சத்தில் திலீப னென்னும் மஹாராஜா ஒருவர் இருந்தார். அவர் தொண் ணூற்றொன்பது அசுவமேதயாகம் செய்தார். தன்னைப்போலே இவரும் நூறு அசுவமேதயாகம் செய்துவிடுவதாவென்று இந்தி ரன் அஸூயையைப் பட்டதற்காக நூறாவதை நிறுத்தினவர். அவர் குமாரர் ரகுமஹாராஜா. விசுவஜித்து யாகம் செய்தவர். நாலுதிக்கும் சென்று ஜயித்து ஸம்பாதித்த ஸம்பத்தை யெல் லாம் யாகத்தில் தானம் செய்துவிட்டு மண்பாத்திரத்தைத் தன் உபயோகத்திற்கு வைத்துக்கொண்டவர். அவர் இப் போது அரசாட்சி புரிந்து வருகிறார். அவரது யசஸ்ஸு எல்லா லோகங்களிலும் வியாபித்திருக்கிறது.

"இவர் அவரது குமாரர். அஜனென்று பெயர் பெற்றவர். எல்லாக் குணங்களிலும் பிதாவுக்குச் சமமானவர். குலம் குணம் அழகு வயது எல்லாம் உங்கள் இருவருக்கு மொத் திருப்பதால் நீ இவருக்கு மாலையிட்டால் ரத்நம் ஸுவர்ணத் திற் சேர்ந்ததுபோல் பிரகாசிக்கும்" என்று கூறினாள்.

இந்துமதி வெட்கத்தைக் கொஞ்சம் குறைத்துக்கொண்டு அஜனை யுற்றுப்பார்த்தாள். அவனை வரிப்பதாக உண்டான

எண்ணத்தை வெட்கம் வாய் விட்டுச் சொல்லவொட்டாமல் செய்ததென்றாலும் உடம்பெங்கும் அடர்ந்த மயிர் கிளிர்ப்பு தெரிவித்துவிட்டது. ஸுநந்தை பரிஹாஸமாய் "அம்மணி! மற்றொருபுறம் நடப்போமா" என்று கேட்க இந்துமதி அஸூயையோடு புருவத்தை நெறித்து அவளைப் பார்த்தாள்.

பிறகு இந்துமதி ஸுநந்தையின் கையிலிருந்து ஸ்வயம்வர மாலையை வாங்கி அஜனது கண்டத்தில் இட்டாள். அஜன் இந்துமதியின் கைகளே தன்னை யணைத்துக்கொண்டதென்று பாவித்தான். இப்படி இவ்விருவரும் தம்பதிகளாக நேர்ந்ததைப்பற்றி அங்கு வந்திருந்த ஜனங்களெல்லாரும் ஸந்தோஷித்தாரவாரித்து "சந்திரனோடு நிலா சேர்ந்தது. கங்கை ஸமுத்ரத்தைச் சேர்ந்தது" என்று சொல்லிக் கொண்டார்கள். இவ்வாக்கியங்கள் அங்கேயிருந்த மற்ற அரசர்களுக்கு கர்ணகடோரமாயிருந்தது.

இப்படி மாலை சூடப்பட்டதினால் அஜன் பக்ஷத்தார் சந்தோஷித்துக்கொண்டும் மற்ற அரசர்கள் துயரத்தால் ஒளி மழுங்கிக்கொண்டும் இருந்த அந்த ஸந்நிவேசமானது ஸூர்யனுதயமாகி அதனால் தாமரைப் புஷ்பங்கள் மலர்ந்தும் ஆம்பல்கள் மூடிக்கொண்டுமிருக்கும் பெரிய தடாகம்போல் தோன்றியது.

தேவயானை ஸுப்ரஹ்மண்யனுக்கு பத்நியானது போல இந்துமதி தனக்கேற்ற அஜனுக்கு மாலையிட்டதும் போஜராஜன் அவ்வதூவரர்களை யழைத்துக்கொண்டு நகரப்பிரவேசம் செய்ய வாரம்பித்தான். தங்களுக்கு இந்துமதி மாலையிடாது போனதைப்பற்றித் தங்கள் அழகையும் தாங்கள் செய்துகொண்ட அலங்காரங்களையும் நிந்தித்துக்கொண்டே அரசர்களெல்லாரும் தங்கள் தங்கள் வாஸஸ்தானம் போய்ச் சேர்ந்தார்கள். அஜன்மீது அவர்களுக்குப் பொறாமையதிகமேயென்றாலும் விவாகம் விக்கினமில்லாது நடக்கவேண்டியதற்காக சாஸ்திரமுறைப்படி இந்திராணி பிரதிஷ்டை செய்யப்பட்டிருப்பதால் அவர்கள் கலஹம் யாதும் செய்ய புத்தி கொள்ளவில்லை.

நகரம் முழுதும் பனிநீர் தெளித்துக் கொடிகள் கட்டித் தோரணம் நிறைத்துப் புஷ்பங்கள் பரப்பித் தெருவெங்குஞ்சிங்

காரிக்கப்பட்டிருந்தது. அவ்வீதிகள் வழியே இக்கல்யாணப் பெண்ணும் பிள்ளையும் ஊர்கோலமாய்ப் போகும்போது அவ்வூர்ப் பெண்மணிகள் பார்க்கவந்த அவஸரமானது மிகவும் வியப்பாயிருந்தது.

ஒருத்தி வேகமாய் நடந்து வந்ததினால் தலைமயிரில் முடி அவிழ்ந்துபோய் புஷ்பங்கள் சிந்திக்கொண்டே யிருந்தும் அதைக் கையால் பிடித்துக்கொண்டே நடந்தாளே யல்லது முடிய வேண்டுமே யென்கிற எண்ணம் அவளுக்குண்டாகவே யில்லை.

மற்றொருத்தி காலில் தாதி செம்பஞ்சுச்சாறு பூசிக் கொண்டே யிருக்கையில் அந்தக் காலைத் திமிறி யிழுத்துக் கொண்டு சென்றதால் சாளரம் வரையில் காலடிவைத்த இட மெல்லாம் செம்பஞ்சுச் சாயமாய்ப் போய்விட்டது.

கண்ணுக்கு மையிட்டுக் கொண்டிருந்த மற்றொருத்தி வலது கண்ணுக்கு மையிட்டு இடது கண்ணுக்கு இடாமலே அந்த மையெழுதும் கோலைக் கையில் வைத்துக் கொண்டபடியே சாலகத்தண்டை போய் நின்றாள்.

வேகமாய் நடந்துவந்த மற்றொருத்தி புடவையின் முடிச்சு அவிழ்ந்து விட்டிருந்தும் அதை முடிய நினையாமல் கையால் பிடித்துக்கொண்டே சாலக வழியே வெளியில் பார்த்துக் கொண்டிருந்தாள்.

அரைநான் மாலைக்கு ரத்நங்கள் கோத்துக்கொண்டிருந்த மற்றொருத்தி அதைக் கையில் தரித்தபடியே வேகமாய் எழுந்து நடந்தபடியால் அந்த மணிகளெல்லாம் வழியில் இறைந்துபோகவே சாளரத்திடம் சேருவதற்குச் சரியாய் நூல் மாத்திரமே மிகுந்து நின்றது.

இவ்விதமாக அவ்வூர்ப் பெண்பிள்ளைகள் விவாஹப் பெண்ணையும் பிள்ளையையும் பார்க்கும் குதூஹலத்தால் மெத்தை மேலேறிச் சாலகங்களில் நின்று பார்த்துக்கொண் டிருந்ததால் அவைகளி லெல்லாம் தாமரைப் புஷ்பங்கள் கட்டப்பட்டிருப்பது போலவும் அவர்கள் கண்களின் விழிகள் அலைந்துகொண்டிருப்பது அப்புஷ்பங்களில் வண்டுகள் திரிவது போலவும் காணப்பட்டது.

அஜமஹாராஜாவைப் பார்த்தபோது அவர்களுக்கு வேறெதுவும் தெரியவில்லை. காது மூக்கு முதலியவைகள் கூட கண்ணுகவே யாய்விட்டது போலிருந்தது, "இந்து மதியை விவாஹம் செய்துகொடுக்க வேண்டுமென்று பலர் கோரினார்கள். இவர்கள் அப்படி செய்யாமல் ஸ்வயம்வரம் ஏற்பாடு செய்ததே நியாயமானது. இல்லாவிட்டால் இவ்விராஜ குமாரனுக்கு மாலையிடும்படி யெப்படி நேரும்? ஒருவர்க் கொருவர் எல்லாவிஷயத்திலு மொத்திருப்பதால் இவர்கள் தான் பதிபத்நிகளாகவேண்டும். அப்படிக்கில்லாது போயிருந் தால் ப்ருஹ்மதேவன் இவர்களுக்கு இவ்வளவு அழகை ஸ்ருஷ்டித்தது வீணாய் அல்லவோ ஆகும்? இவர்கள் முன் பிறப்பில் ரதியும் மன்மதனுமா யிருந்திருப்பார்கள். மன திற்கு ஜன்மாந்தர வாஸனை விடாது. அதனால் தான் இவர் கள் ஸதீபதிகளாக அமைந்தது." என்று இவ்விதமாக அப் பெண்பிள்ளைகள் சொல்லிக்கொண்டிருந்த வார்த்தைகளைக் காதுக்கினிப்பாகக் கேட்டுக்கொண்டே ராஜகுமாரன் விவாஹ வீட்டினருகே வந்ததும் யானையிலிருந்து இறங்கி காமரூப தேசத்தரசன் கைகொடுக்க விவாஹமண்டபம் போய்ச் சேர்ந்தான்.

அங்கே அவனை ஸிம்மாசனத்தில் உட்காரவைத்து ரத் னத்தோடே அர்க்யமும் மதுபர்க்கமும் இரட்டை வெண் பட்டாடையும் கொடுத்து போஜராஜன் உபசரித்தான். அஜன் அவ் வெண்பட்டாடைகளை யுடுத்திக்கொண்டு குலாசாரப் படி மணமகள் இருக்குமிடம் போய் நின்றான். அங்கே புரோ ஹிதர் சாஸ்திர முறைப்படி அக்நிப்பிரதிஷ்டை முதலியது செய்து அவ்வக்நியே ஸாக்ஷியாகத் தம்பதிகள் ஒருவர்க்கொரு வர் கையைப் பிடித்துக்கொள்ளச் செய்தார். அப்போது ராஜகுமாரன் கையில் மயிர்சிலிர்ப்பும் ராஜகுமாரி கையில் வேர்வையும் உண்டாயிற்று. இது மேல் நேரும் க்ஷேமங்களுக் குச் சுபமான முற்குறியாம். அத்தம்பதிகள் ஒருவர்க்கொரு வர் பார்த்துக் கொள்ளவேண்டிய தானபோது வெட்கப்பட்டுக் கொண்டு இருந்தபடியால் கடைக்கண்ணாலே பார்த்துக்கொண் டார்கள்.

சாஸ்திர முறைப்படி அவ்விருவரும் அவ்விவாஹாக்நி யைப் ப்ரதக்ஷிணம் செய்தார்கள். இந்துமதி குருவின் ஆஜ்

ணையால் அக்கினியில் லாஜஹோமம் செய்தாள், ரகுவம்சத்து ராஜாக்கள் காத்யாயன ஸூத்ரத்தாராகையால் அந்த முறைப் படி பொரியோடு ஹவிஸ்ஸும் வன்னிமரத்துத் துளிரும் சேர்த்து ஹோமம் செய்யப்பட்டது. நெய்யோடு கூடிய அவ்வஸ்துக்களினுலுண்டான புகையை மோந்ததனுல் இந்து மதியின் கபோலம் சிவந்து கண்கள் மெய்கரைந்து கர்ணுவதம் ஸம் வாடிவிட்டது. விவாஹ ஹோமச்சடங்குகள் நிறைவே றியவுடனே தம்பதிகளை ரத்நஸிம்ஹாஸனத்தில் இருத்தி ராஜாவும் ப்ராஹ்மணர்களும் பந்துக்களும் குலவ்ருத்தை களான ஸுமங்கலிகளும் அக்ஷதாசீர்வாதம் செய்தார்கள்.

இங்கு விவாஹோத்ஸவம் யாதொரு குறைவு மின்றி நிறைவேறிய பின் ஸ்வயம்வரத்திற்கென்று வந்த எல்லா அர சர்களுக்கும் தக்க மரியாதைகள் செய்யப்பட்டது. அவர்கள் மனதிலுள்ள அத்ருப்தியை வெளிக்காட்டாமலே ஸந்தோஷ பாவனையோடு மரியாதைகளை யேற்றுக்கொண்டு அதுகளை உப ஹாரமென்னும் வியாஜமாய் திருப்பிக் கொடுத்துவிட்டுத் தங் கள் ஊர் போவதாய்ப் புறப்பட்டார்கள். வெகுதூரம்போய் வழியில் அவ்வரசரெல்லோரும் ஒன்று சேர்ந்து யோசித்து ஸங்கேதம் செய்துகொண்டு அஜனேடு யுத்தம்செய்து இந்து மதியை யபஹரித்துக் கொண்டுபோக வேண்டுமென்னும் எண்ணங்கொண்டு வழியை மறித்துக்கொண்டிருந்தார்கள்.

போஜராஜன் அத்தம்பதிகளுக்குத் தன் சக்திக்குத் தக்க படி உபஹாரங்கள் வரிசைகள் சீர்களெல்லாங் கொடுத்து ஊருக்குப் ப்ரயாணப்படுத்தித் தானும் கூடவே மூன்றுநாள் போய் நாலாவது நாள் அவர்களை அனுப்பிவிட்டுத் தன் நகரம் திரும்பினுன். அஜன் தன் ஸேனையோடு முன்னே நடந் தான். ரகுமஹாராஜாவிற்குக் கப்பம் கட்டவேண்டியதான தைப்பற்றி யேற்கெனவே கோபங்கொண்டிருந்த அரசர்கள் இப்போது அஜன் இந்துமதியை விவாஹம் செய்துகொண்டு விட்டதைப்பற்றி அதிக ஆக்ரகம்பொங்கி இவனை வழியில் மறித்து யுத்தம்செய்யத் தொடங்கினுர்கள்.

ராஜகுமாரன் யாதுக்கும் அஞ்சாமல் தக்க வீரர்களோடு கூடத் தன்பிதாவின் வ்ருத்த மந்திரியை இந்துமதிக்குக் காவலாக வைத்துவிட்டு அவ்வரசர்களோடு யுத்தம்செய்ய வாரம்பித்தான். தேரோடு தேரும் யானையோடு யானையும் குதி

ரையோடு குதிரையும் காலாளோடு காலாளுமாய் த்வந்த்வ யுத்தம் நடந்தது. யுத்தபேரிகைகள் முழங்கிக்கொண்டிருந்த படியால் வீரர்கள் தங்கள் பெயரையும் பெருமையையும் வாயினுற் சொல்லாமலே பாணங்களாற் காட்டினுர்கள். குதிரைகளின் குளம்படிகளால் உண்டாகித் தேர்களின் சக்கிரங்களால் அதிகமாக்கப்பட்டு யானைகள் காதுகளை யசைப்பதால் பரப்பப்பட்ட தூள்கள் ஸூர்யனே தெரியாதபடி யெங்கும் மறைத்துவிட்டன. அதனுல் சக்கிரத் தோசையைக்கொண்டு ரதங்களையும் மணியோசைகளைக்கொண்டு யானைகளையும் கனைக்கு மோசையைக்கொண்டு குதிரைகளையும் தெரிந்து கொள்ள வேண்டியிருந்தது. படையாட்கள் தங்கள் தங்கள் ராஜாக்களின் பெயரைக் கூறுவதிலிருந்து தங்களைச் சேர்ந்தவர்கள் அல்லது எதிரியைச் சேர்ந்தவர்களென்பதை யறிந்து கொண்டார்கள். அந்தத் தூளின் பரப்பு பெரிய இருட்டின் பரப்புபோலக் காணப்பட அங்கு மடிந்த யானை குதிரை காலாட்களின் ரத்தவெள்ளம் இளவெயில்போலத் தோற்றம் கொடுத்தது. ரத்தவெள்ளம் அதிகரிக்க அதிகரிக்கக் கீழே தூள்கள் அடியற்றுப்போய் மேலிருந்தவையெல்லாம் காற்றில் அடிக்கப்பட்டு தூரப்போக்சப்பட்டன. தேரிலிருக்கும் வீரர்கள் தாங்கள் எதிரிகளால் அடிபட்டு மூர்ச்சை போனதினுல் ஸாரதிகள் தேரைத் திருப்பியோடிப் போய்விட, பிறகு மூர்ச்சை தெளிந்ததும் நீ செய்தகாரியம் அவமானகரமானதும் அக்கிரமமானதுமென்று ஸாரதிகளைக் கோபித்து மறுபடி யுத்த பூமிக்கு வந்து அவரவர் கொடிகளின் அடையாளத்தால் தங்களை யடித்து மூர்ச்சிக்கச் செய்தவர்களைத் தெரிந்துகொண்டு பெரிய ஆக்ரஹத்தோ டவர்களை யடிக்கலானுர்கள்.

ஒரு வில்லாளி பிரயோகித்த ஒவ்வொரு பாணங்களையும் எதிரி வில்லாளி தன் பாணத்தால் பாதி வழியிலேயே பாதியாகத் துண்டித்து விட்டானென்றுலும் அதன் முன்பாதி முன் வேகத்தோடேயே குறியிடப்பட்ட விடம்வரையில் போயே சேர்ந்துகொண்டிருந்தது. யானைச்சண்டையில் நுனியில் கத்திகள் அமைந்த சக்கிரமென்றும் ஆயுதங்களால் யானைக்காரர்களின் தலைகள் அறுக்கப்பட்ட பின்பும் அவர்களின் தலைமயிர்கள் கழுக்களின் கால்நகங்களில் மாட்டிக்கொள்வதால் தரையில்விழத் தாமதமாயிற்று.

குதிரை வீரர்கள் எதிரியை யடித்ததும் அவன் அதைத் தாளாமையால் பதிலுக்கடிக்கமுடியாமல் ஆயாஸமாயிருக்கும் போது மறுபடி அடியாமல் அவன் இளைப்பாறியாகும்வரை நிதானித்திருந்தார்கள். யானைகளின் தந்தங்களை கத்திகளால் வீரர்கள் வெட்டும்போது உண்டாகும் நெருப்புப் பொரிகளை அவைகள் தும்பிக்கையில் ஸ்வபாவமாக உண்டாகும் நீர்த்திவலைகளைக்கொண்டு ஆறச்செய்துகொண்டன.

யுத்தம் செய்யும்போது அறுபட்டுக் கீழே விழுந்திருந்த ஒரு வீரன் கையைப் பக்ஷிகள் குத்தித் தின்றுகொண் டிருக்கும்போது ஒரு நரி அவைகளை யோடச்செய்து ஆதை யிழுத்துத் தின்ன வாரம்பித்ததும் அதில் போடப்பட்டிருந்த தோள்வளை தாடையில் காயம் உண்டாக்கியதைப்பற்றி அந்த கையை யங்கேயே போட்டுவிட்டுப் போய்விட்டது. வீர னொருவன் எதிரியின் கத்தியால் தலையறுக்கப்பட் டிறந்ததும் உடனே தேவதையாய் விட்டபடியால் விமானத்தில் அப்ஸரஸ்திரீயோடுகூட இருந்து தனது தலையில்லாத தேஹம் கீழே துள்ளுவதை வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தான்.

ஓரிடத்தில் இரண்டுவீரர்கள் யுத்தம் செய்தபோது முதலில் இருவர் ஸாரதிகளும் கொல்லப்படவே சிறிதுபோது அவர்களே தேர்வீரர்களும் ஸாரதிகளுமாகப் போர்புரிந்தார்கள். மறுபடி இருவர் குதிரைகளும் மடிந்து போகவே கதாயுத்தம் செய்தார்கள். இருவர் கதைகளும் முறிந்து போகவே கைச்சண்டைக்குத் தொடங்கினார்கள். மற்றோரிடத்தில் இரண்டுவீரர்கள் ஒருவர்க்கொருவர் ஒரேகாலத்தில் அடித்துக்கொண்டு ஒரேகாலத்தில் பிராணனைவிட்டு ஒரேகாலத்தில் வீரஸ்வர்க்கம் போய்ச் சேர்ந்ததே ஒரே அப்ஸரஸ்ஸ்திரீயை யிச்சிக்கவே அங்கும் அவர்கள் கலகப்படலானார்கள். யுத்தம் நடந்ததில் வெகுநாழிகை வரையில் இவ்வாறு அவ்விரு ஸேனைகளிலும் தோல்வியும் ஜயமும் மாறிமாறி யுண்டாய்க்கொண்டிருந்தது. கிழக்கிலிருந்தும் மேற்கிலிருந்தும் காற்று வீசிக்கொண்டே யிருக்கும்போது ஸமுத்திரத்தின் அலைகள் ஒரேவிதமா யிருக்குமோ?

ஒருமுறை தனது ஸேனை முறியடிக்கப்பட்டபோது அஜனுக்கு அடங்காக் கோபம் மூண்டது. அதனால் அவன்

ஸேனைகளை யெதிர்பாராமலே சத்துருக்களின்மேல் பாய்ந்தான். எவ்வளவு காற்று வீசினாலும் புகை யப்புறப்படுத்தப் படுமே யல்லது பற்றியநெருப்பை அப்புறப்படுத்த முடியுமோ? அவன் மஹாவீரனுகையால் ஒருவனாகவே அவ்வரசர்கள் அனைவரையும் தாக்கினான். அம்பறுத்தூணியில் வைக்கப்படும் அவனது கை எப்போதும் வெகு அழகாகக் காணப்பட்டுக் கொண்டிருந்தது. நாணிலிருந்து நேராகவே பாணங்கள் புறப்பட்டு வருவதாகத் தோன்றிற்றே யல்லது அவன் எடுத்துப் பிரயோகிப்பதாகத் தென்படவேயில்லை. கோபத்தால் உதடுகளைக் கடித்துக்கொண்டும் புருவங்களை நெறித்துக்கொண்டும் ஹுங்காரம் செய்துகொண்டு மிருக்கும் போதே அவர் சத்துரு அரசர்களின் தலைகளைப் பல்லாயுதத்தா லறுத்துக் கீழேதள்ளி விட்டபடியால் அவை கீழே விழுந்த பிறகும் அப்படியே செய்துகொண்டிருக்கக் காணப்பட்டன.

எதிரிகளுக்குக் கோபம்பொங்கி அவர்களெல்லோரும் சேர்ந்து ஒருமித்து அஜனை யெதிர்த்து அடிக்கலானார்கள். அவர்களின் பாணங்கள் விழுந்து அஜனது தேர்முழுதும் மறைந்துபோய் த்வஜத்தின் நுனிமாத்திரம் தெரியும்படியிருந்தது. அப்போது அஜன் ப்ரியம்வதனிடத்தி லுபதேசம்பெற்ற காந்தர்வாஸ்த்ரத்தை அவ்வெதிரி யரசர்கள் ஸேனைகள் எல்லார்மீதும் பிரயோகம் செய்துவிட்டான். அதனால் வில்லில் வைத்த கை வைத்தபடியே தலைகளைத் தோள்களில் சாய்த்துக்கொண்டு த்வஜஸ்தம்பத்தில் சாய்ந்து எல்லாரும் தூங்க ஆரம்பித்துவிட்டார்கள்.

உடனே அஜன் சங்கத்தை யெடுத்து வாயில்வைத்து ஊதினான். அவ்வடையாளத்தால் இவனது ஸேனைகள் திரும்பிவந்து சேர்ந்து எதிரிகள் தோற்றுப்போ யிருப்பதைக் கண்டு ஸந்தோஷித்து ஆரவாரித்தன. தாமரைப் புஷ்பங்களெல்லாம் மூடியிருக்கவும் அவற்றின் நடுவில் சந்திரபிம்பம் தென்படவும் பெற்ற தடாகத்தின் தோற்றம்போல அந்தக் காட்சி யிருந்தது. தோல்வியடைந்தவர்களின் தேர்க்கொடிகளில் பாணங்களால் ரத்தம் தெறித்திருப்பது "ரகுராஜகுமாரன் உங்கள் ப்ரதிஷ்டையை மாத்திரம் எடுத்துக்கொண்டார். தயைசெய்து பிராணனை விட்டுக் கொடுத்தார்." என்று எழுதியிருப்பதுபோல் காணப்பட்டது.

இவ்வாறு ஜயம்பெற்றதும் அஜன் கிரீடத்தைக் கழற்றி விட்டு முகவேர்வையோடே தன் பார்யையிடம் வந்து வில் நுனியில் கையை யூன்றிக்கொண்டு நின்று பயந்துபோயிருந்த அவளுக்குத் தேறுதலாக — "பிரியே! இதோ பார்! சிறு பிள்ளைகள் பிடுங்கிக்கொள்ளக் கூடிய பாணங்களை வைத்துக் கொண்டு என்னோடு யுத்தம் செய்யவந்த அரசர்களைப்பார். நான் உத்தரவு கொடுத்திருக்கிறேன். அதனால் பார்ப்பதில் தோஷமில்லை. இவர்கள் என்னை ஜயித்துவிட்டு உன்னைக் கொண்டுபோக வேண்டுமென்றல்லவோ வந்தார்கள்." என்று இதம் கூறினான். முதலில் பயந்திருந்த அவளது மனது இப்போது தெளிவடைந்து முன்போலப் பிரகாசித்தது மூச்சுக் காற்று பட்டு அழுக்கடைந்த கண்ணாடி மறுபடி தன்னிலை யடைந்ததுபோல விருந்தது. இந்துமதிக்கு மனதில் பெரிய ஸந்தோஷமே யென்றாலும் வெட்கத்தினால் அவள் யாதும் பதில் சொல்லவில்லை. அவள் தனது ஸகிகள் முகமாக ஸந்தோஷ முகமன் வார்த்தைகள் சொன்னாள்.

பிறகு ஜயசோபையோடு அஜன் இந்துமதியை யழைத்துக்கொண்டு ஸுகமாக நகரம்போய்ச் சேர்ந்தான். யுத்த களத்தில் சேனையின் தூள்கள் படிந்த முன்னெற்றி மயிர்களோடு இந்துமதி கூடஇருந்தது ஜயலக்ஷ்மியே கூடஇருப்பதுபோல் பிரகாசித்தது. இவர்கள் வருவதற்கு முன்பே எல்லா ஸங்கதிகளும் ரகுமஹாராஜாவுக்குத் தெரிந்திருந்த படியால் அவர் பிள்ளையையும் நாட்டுப்பெண்ணையும் ஸந்தோஷமாய் வரவேற்று ஆசீர்வதித்து அம்மணக்கோலத்திலேயே அஜனுக்குப் பட்டாபிஷேகம் செய்துவைத்தார்.

உலகத்தில் அவரவர்கள் பலபல அக்ருத்தியங்கள் செய்தாகிலும் ராஜ்யத்தைத் தம் வசம் செய்துகொள்ள வேண்டுமென்று பிரயத்நம் செய்கிறார்கள், இவ்வஜமஹாராஜனோ பிதாவின் ஆஜ்ஞையை மீறமாட்டாது ராஜ்யத்தை யேற்றுக் கொண்டானே யல்லது போகங்களை யநுபவிக்கலா மென்பதற்காகவல்ல.

அதர்வவேதத்திய மந்த்ரங்களினால் இவருக்குக் குருவான வஸிஷ்டமுனிவர் பட்டாபிஷேகம் செய்துவைத்தபடியால் அந்த மந்த்ர தேஜஸ்ஸும் ஸ்வபாவ ஸித்தமான ராஜ தேஜஸ்ஸும் சேரவே நெருப்பும் காற்றும் சேர்ந்ததுபோலாகி

யெதிரிகள் பயப்படும்படியாயிற்று. எல்லா குணங்களினுலும் இவன்பிதாவைப்போலேயே யிருந்தபடியால் ரகுமஹாராஜாவே இளவயது திரும்பிவரப்பெற்று அரசாட்சி புரிகிருரென்று எல்லோரும் நினைத்தார்கள்.

அஜமஹாராஜன் புதிய யௌவனத்தி லிருந்தும், ஜிதேந்த்ரியனுய்ப் பேராசை முதலிய துர்க்குணங்களில்லாமல் வெகு ஸாவதானமாக அரசாட்சி புரிந்துவந்தான். ஒவ்வொரு மனிதனும் தானே அரசனுக்கு மிகவும் வேண்டியவனென்று எண்ணிக்கொள்ளுமாறு அவன் குடிகளை நடத்திவந்தான். அதிக உக்ரமாகவாவது அதிக சாந்தமாகவாவது இராமல் நடுநிலைமையில் நடந்துகொண்டு அரசர்களை த்வம்ஸம்செய்து விடாமல் ஜயித்துத் தன்வசம் செய்துகொண்டான்.

இப்படி ஜனங்களின் பூர்ண விச்வாஸத்துக்கும் தன் குமாரன் பாத்திரமாகி விட்டதையும் பேரும் புகழும் பெருகி வளர்ந்தோங்கி வருவதையும் கண்ட ரகுமஹாராஜா போகங்களைப்போலே ஸ்வர்க்காதி ஸுகங்களும் நிலையற்றவையாகையால் அவை யெல்லாவற்றையும் வெறுத்து சாச்வதமான மோக்ஷத்தை விரும்பித் தபோவனம் செல்வதற்கு ஆயத்தப்பட்டார். இவ்வம்சத்தா ரெல்லாரும் பிள்ளைகளுக்கு யோக்கியதை வந்தவுடனே ராஜ்யபாரத்தை அவர்களிடம் ஒப்பவைத்துவிட்டுக் காட்டுக்குப்போய்த் தவம்புரிவது வழக்கமேயன்றோ?

பிதா தன்னைத்துறந்து காட்டுக்குப் போவதைச் ஸஹியாமல் அஜமஹாராஜன் கண்ணுங் கண்ணீருமாய்த் தகப்பனார் காலில் விழுந்து தலையால் வணங்கித் தன்னைவிட்டுப் போகக்கூடாதென்று வேண்டிக்கொண்டதனுல் புத்ரவாத்ஸல்யத்திற்காக அவர் சமீபத்திலேயே யிருப்பதாக அங்கீகாரம் செய்தார். ஆனுல் ஒரு போகத்தையும் ஏற்றுக்கொள்ளவில்லை. ஸந்யாஸம் செய்துகொண்டு நகரத்துக்கு வெளியில் ஏகாந்தமாக வாஸம் செய்துவந்தார்.

இப்படி பழைய அரசன் துறவறம்பூண்டு ஆச்ரமத்திலும் புதிய அரசன் பட்டாபிஷேகம் கொண்டு நகரத்திலும் வஸிப்பது சந்திரன் அஸ்தமிக்கப்போகும் ஸமயத்தில் ஸூர்யன் உதயமாய்ப் ப்ரகாசிப்பதுபோ லிருந்தது. ஒருவர் துற

வியின் சின்னங்களோடும் ஒருவர் ராஜசின்னங்களோடும் விளங்குவது மோக்ஷபலத்தைக் கொடுக்கும் நிவ்ருத்தி தர்மங்களுடையவும் ஸ்வர்க்காதி பலங்களைக் கொடுக்கும் ப்ரவ்ருத்தி தர்மங்களுடையவும் அம்சங்கள் காட்சிகொடுப்பது போலிருந்தது. அஜமஹாராஜா புதிய புதிய ராஜ்யங்களைப் பெறவேண்டிய ஆலோசனை செய்வதற்காக இஷ்ட மந்த்ரிகளோடு அப்போதைக்கப்போது ஸந்தித்தார். ரகுமஹாராஜா மோக்ஷத்தைப் பெறவேண்டிய வழியைத் தேடுவதற்காக பெரிய பெரிய யோகிகளோடு ஸந்தித்தார். ராஜகார்யங்களைப் பார்ப்பதற்காக சிறுவயதான அரசன் ஸிம்ஹாஸனத்தில் வீற்றிருந்தார். யோகாப்பியாஸம் செய்யவேண்டியதற்காகக் கிழவரசன் தர்ப்பாஸனத்தில் உட்கார்ந்திருந்தார். ஒருவர் தமது சக்தியின் வலுவினால் மற்ற அரசர்களை யெல்லாம் தம் வசம் செய்துகொண்டு விட்டார் மற்றொருவர் யோகாப்யாஸத்தாலே பஞ்ச பிராணன்களையும் வசப்படுத்திக் கொண்டார். புதிய அரசன் தனது ஸாமர்த்யத்தால் சத்துருக்களின் ப்ரயத்னங்களை யெல்லாம் நீறாக்கிக்கொண்டிருந்தார். பழைய அரசனோ ஞானபலத்தால் முன்வினைகளை யெல்லாம் பஸ்மமாக்கிக் கொண்டிருந்தார். புதிய அரசன் ஆரம்பித்த காரியத்தைப் பலன் கைகூடும்வரையில் நிறுத்துவதில்லை. பழைய அரசன் பரமாத்மாவைக் காணும்வரையில் யோகாப்பியாஸத்தை நிறுத்துவதில்லை. இப்படி ஸம்பத்துக்காக ஒருவரும் மோக்ஷத்திற்காக ஒருவருமாய்ப் ப்ரவர்த்தித்து சத்துருக்களும் இந்த்ரியங்களும் மாறுபட்டுக் கெட்டவழியில் போகாதபடி யடக்கி நடந்துகொண்டதால் அவர்கள் இருவரும் அவரவர்களுக்கு இஷ்டமான விஷயத்தில் மேலான சித்தியைப் பெறத் தக்கவர்களானார்கள்.

இப்படி சிலகாலம் சென்றதும் ரகுராஜா யோகமுறையால் தேஹத்தை விட்டுவிட்டு மோக்ஷம் சேர்ந்துவிட்டார். தகப்பன் இறந்துபோய் விட்டதற்காக அஜமஹாராஜன் வெகு நாழிகை கண்ணீர்விட்டுத் துக்கித்துப் பிறகு ஸந்யாஸிகள் பலரைக் கூடவைத்துக்கொண்டு அவருக்கு அக்னியில்லாமல் ஸம்ஸ்காரங்களை யெல்லாம் சாஸ்திரமுறைப்படி செய்தான். துறவியாயிருந்து இறந்துபோனவர்களுக்குப் புத்திரர்கள் பிண்டம் முதலியது போடுவதினாலாகவேண்டிய தொன்று

மில்லை யென்பது தெரிந்திருந்தும் பிதாவிடத்திலுள்ள பக்தியால் அஜமஹாராஜா வெகுவிமரிஸைபாகக் காரியங்களை யெல்லாம் நடத்தினான்.

ஜ்ஞானிகள் பலர்வந்து பலவாறு உபதேசம் செய்ததால் பித்ரு துக்கம் தணிந்த பிறகு அஜமஹாராஜன் முன்னோர்கள் நடந்தவழியே ராஜ்யபரிபாலனம் செய்துகொண்டிருந்தான். அப்போது அவனுக்கொரு பிள்ளை பிறந்தது. அதன் தேஜஸ்ஸு ஸூர்யன்போ லிருந்தது. அப்பிள்ளையின் பிரதிஷ்டை பத்து திக்குகளிலும் பரவுவதாயிருந்தது. லோககண்டகனாகிய இராவணனை வதம்செய்வதற்காக வந்து பிறக்கப்போகிற மஹாபுருஷனுக்கு இவர் பிதாவாகப் போகிறார். இவர் பெயர்தான் தசரதர். மனிதன் பிறக்கும்போது தேவர்களுக்கும் ருஷிகளுக்கும் பித்ருக்களுக்குமாக மூன்று பேருக்கும் கடன்காரனாகப் பிறக்கிறான். யாகங்கள் செய்து தேவர்கள் கடனையும் வித்யாப்யாஸம் செய்து ருஷிகள் கடனையும் புத்திரனைப்பெற்று பித்ருக்கள் கடனையும் மனிதன் தீர்க்கவேண்டும். இவ்வஜமஹாராஜா எல்லாக் கடன்களையும் தீர்த்தவராய் விட்டார். இவரது ஸம்பத்துமாத்திரம் பரோபகாரத்திற்காக வென்பதல்ல, எளியவர்களின் பயத்தைப்போக்க பலமும் பண்டிதர்களைத் தாமறிந்து ஸம்மானிக்க ஜ்ஞானமும் இப்படி யெல்லா குணங்களுமே பரோபகாரத்திற்காக வாயிருந்தது.

ஒருநாள் ராஜ்யகார்யங்களை யெல்லாம் தீரவிசாரித்த பிறகு அஜமஹாராஜன் இந்து மதியோடு உத்தியானவனம் சென்று கிரீடித்துக் கொண்டிருந்தான். அப்போது தெற்கு ஸமுத்திரக் கரையிலுள்ள கோகர்ண க்ஷேத்திரத்திற்குச் சென்று அங்கு கோயில்கொண் டெழுந்தருளியிருக்கும் பரமசிவனைத் தர்சித்து வீணைவாசித்து ஸ்துதித்து வரவேண்டுமென்கிற அபிப்ராயத்தால் நாரதமுனிவர் வீணையும் கையுமாய் ஆகாயமார்க்கமாய்ப் போய்க்கொண்டிருந்தார். அவர் வீணை நுனியில் தேவலோகத்துப் புஷ்பங்களால் கோர்க்கப்பட்ட மாலையொன்று போடப்பட்டிருந்தது. காற்று பலமாக அடிக்கவே யம்மாலை அதிலிருந்து நழுவி இந்துமதியின் மார்பில் வந்து விழுந்தது. அதைப் பார்த்தவுடனே இந்துமதி கண்களை மூடிக்கொண்டு பிராணன்போய் திடீரென்று

கீழே விழுந்துவிட்டாள். ஆச்சரியமும் சோகமுமான இச் சம்பவத்தைக் கண்டதும் அஜமஹாராஜனும் மூர்ச்சித்துக் கீழே விழுந்தான். கூடஇருந்த பரிஜனங்கள் கதறியழுது கொண்டே யிருவருக்கும் உபசாரங்கள் செய்தார்கள். அத ஞல் அஜமஹாராஜனுக்கு மாத்திரம் மூர்ச்சை தெளிந்தது. இந்துமதி யெழுந்திருக்கவில்லை. ஆயுஸ்ஸு இருக்குமாஞ லன்றோ உபசாரங்கள் பிரயோஜனப்படும்?

அஜமஹாராஜன் அத்தேஹத்தை யெடுத்து மடியில் விட் டுக்கொண்டு சோகத்தால் ஸஹஜமாயிருந்த தைரியம் எங்கே யோ போய்விட்டபடியால் கண்ணும் கண்ணீருமாய்த் துக்கம் துற்றுக்கொண்ட குரலில் கதறிக்கொண்டு பிரலாபிக்கலாஞர்.

அய்யோ! ஆச்சர்யமே! புஷ்பம் மேலேபட்டால் பிரா ணன் போய்விடுவதென்று ஏற்பட்டு விட்டதே. தெய்வம் கொல்ல நினைத்தால் எதுவும் அதற்கு ஸாதனமாய் விடும்போ லிருக்கிறதே.

ஸுகுமாரமான வஸ்துவைக்கொல்ல யமன் ஸுகுமார மான வஸ்துவையே உபயோகிக்கிருனென்று தெரிகிறது, தாம ரையை யழிப்பதற்குப் பனியல்லவோ உபயோகிக்கப்படு கிறது?

இம்மாலை யுன்பிராணனைக் கொண்டுபோய் விட்டதென் பது உண்மையா யிருக்குமாஞல் இதையே நான் எனது மார் பில் இதோ வைத்துக்கொண்டிருக்கிறேனே, என் பிராணன் ஏன் போகவில்லை? தெய்வத்தின் இஷ்டம், அமிருதமும் விஷ மாய்விடும், விஷமும் அமிருதமாய்விடும்.

மாலையென்று பேர்வைத்துத் தெய்வம் இடியை யனுப்பிற்று. அது மரத்தை யணைந்திருந்த கொடியைமாத்திரம் கொளுத்தி விட்டது. மரத்தைக் கொளுத்தவில்லை. அது என் பாக்கியக் குறைவே. நானே மரம். இவள் கொடி.

ப்ரியே! நானெப்போதாவது உன்னிஷ்டத்திற்கு விரோத மாக நடந்தாலும் நீ கோபிப்பதே யில்லையே, அப் படிப்பட்ட நீ நானொரு தப்பிதமும் செய்யாமலிருக்கையில் வாய்திறந்து ஒருவார்த்தைகூட சொல்லாமலிருக்கிறது நியா யமோ?

ப்ரியதமாய்! நீ யென்னை மோசக்கார னென்றும் மேலுக்கு மாத்திரம் ப்ரீதிசெய்பவனென்றும் எண்ணிவிட்டாய்போலும், இல்லாவிட்டால் மறுமுறை திரும்பிவராதபடி லோகாந்தரம் செல்லும்போதும் நீ யென்னோடு சொல்லாமல் போவாயோ?

அய்யோ! எனது இப்பாழும் ப்ராணன் பிரியதமையோடு முதலில் போயிற்றே, மறுபடியேன் திரும்பிவந்தது, அதனுல் தான் இந்த துக்கத்தை யநுபவிக்கிறது. யாரென்ன செய்வது? அவரவர்வினையை அவரவர் அநுபவிக்க வேண்டாமோ?

பூப்பொறித்த சிரமத்தால் உண்டாகிய வேர்வை அப்படியே நெற்றியில் காண்கிறது. நீயோ இறந்து விட்டிருக்கிறுய்! ஆச்சரியம் ஆச்சரியம்! சரீரம் நிலையாமை!

ப்ரியே! பூமிக்குப் பதியென்பது பெயருக்கு மாத்திரமே, நீ ஒருத்திதான் எனக்குப் பத்நி. உன் விஷயத்தில் நான் மனதால்கூட அபராதம் செய்ததில்லை, என்னை யிப்படி கைவிட்டு விடலாமா?

ஆகா! என்ன செய்வேன், இளந்துளிர்களைப் பரப்பிய படுக்கையிலே பட்டாலே உனது தேஹம் வாடிப்போமே, அப்படிப்பட்ட இந்த தேஹத்தைச் சிதையில் வைத்து நெருப்பு மூட்ட எப்படி துணிவேன்?

நீ சொந்தமாக எருவைத்து ஆசையோடு வளர்த்த இந்த அசோகமரம் இன்னும் சிறிதுநாளில் புஷ்பிக்குமே, அந்தப் புஷ்பங்களை உன் சிரசில் சூட்டாமல் தர்ப்பணத்துக்கா உபயோகிப்பேன்?

ஸுகதுக்கங்களிலொத்த மனமுடைய ஸகிகளையும் உண்மையான அன்புடைய வென்னையும் பாராதுபோனுலும் இளம் பிறைபோல அழகு நிறைந்த இவ்விளங் குமாரனையும் நினைக்கவில்லையே, கைவிட்டு விட்டுப்போய் விட்டாயே.

அய்யோ! தயையென்பது கொஞ்சமுமில்லாத தெய்வம் எனக்கெவ்வளவு ஹாநியைச் செய்துவிட்டது! பாரியையை போக்கிக்கொண்டேன். மந்த்ரியை யிழந்தேன். ஸகியைத் துறந்தேன். கலைகள் வாசித்த அன்புள்ள சிடனைப் பறிகொடுத்தேன். ப்ரியே! நீ ஒருத்திபோனதில் இவ்வனைத்தும் போனதாய்விட்டதே.

இப்படி அஜமஹாராஜன் நெடும்போது பரிதபித்தழுது கொண்டிருந்தான். அவ்வனத்திலுள்ள மரங்கள்கூட இந்த பரிதாபம் பொறுக்கமாட்டாமல் அழுதனபோலும். பிறகு அருகே இருந்தவர்கள் ஒருவாறு தேறுதல்சொல்லி யரசனது மடியிலிருந்து இந்துமதி தேஹத்தை யெடுத்து முறைப்படி சந்தனக்கட்டைச் சிதையில் தஹநம் செய்வித்தார்கள்.

அரசன் ஸ்திரீ சோகத்தால் மடிந்தானென்று பேர்வந்தால் அது அபயசஸ்ஸாகுமே யென்று அதற்காக அஜமஹாராஜன் அக்நிப்ரவேசம் செய்யவில்லையே யல்லது பிழைத்திருக்க வேண்டுமென்னும் ஆசையாலல்ல. இறந்துபோன ராஜமஹிஷியின் சரமச் சடங்குகளெல்லாம் பெருமைக்கும் ப்ரீதிக்கும் தக்கபடி அத்தோட்டத்திலேயே சாஸ்திரமுறைப்படி நிறைவேற்றப்பட்டன. பிறகு ஐந்துவயதாகிய குழந்தையை யெடுத்துக்கொண்டு அஜமஹாராஜன் நகரம்வந்து சேர்ந்தான். என்றாலும் அவனது மனம் சோகத்தி லாழ்ந்து மெய்யுணர்ச்சியே யில்லாதிருந்தது.

குலகுருவாகிய வஸிஷ்டமஹாருஷி ஒரு யாகம் செய்வதற்காக தீக்ஷை செய்துகொண்டு ஆச்சிரமத்திலே யிருந்தார், இங்கு வருவதற்கில்லை. ஞானதிருஷ்டியால் இவ்விருத்தாந்தங்கள் தெரியவந்தது. அஜமஹாராஜனுக்குத் தெரிவித்து வரும்படியாக ஒரு சிஷ்யர் மூலமாய்ச் சில விஷயங்களைச் சொல்லி யனுப்பினார். அவர் அரசனுக்குச் சொல்லுகிறார்:—

“அரசே? உமக்கு நேர்ந்த துயரம் குருவிற்குத் தெரிந்திருந்தும் ஆரம்பித்த யாகம் முடிவு பெறாமையால் நேரே இவ்விடம் எழுந்தருள இப்போது சாத்தியப்படவில்லை. தமக்குத் தெரிவித்து வரும்படி என்னிடம் சில முக்கிய விஷயங்கள் அருளிச் செய்திருக்கிறார்கள். இம்மூன்று லோகங்களிலும் நிகழ்கிற முக்கால விருத்தாந்தங்களையும் நேரே காண்பதுபோலே யோகக் கண்ணினால் பார்க்கக்கூடிய தபோபலம் பெற்றவர்கள் அல்லவா குருஸ்வாமிகள்? அரசனே! குரு மஹாராஜாவின் வார்த்தைகளை ஸாவதானமாகக்கேள், திடமாக மனதில் நிறுத்திக்கொள்.

“திருணபிந்து என்னும் மஹாமுனியொருவர் கடுந்தவம் புரிந்துகொண் டிருந்தபோது அவர் பாருடைய பதத்தை

யபேக்ஷிக்கிறாரோவென்று சங்கித்து அவரது நிஷ்டையைக் குலைப்பதற்காக தேவேந்திரன் ஹரிணியென்னும் ஒரு அப்ஸர ஸ்திரீயை அவர் ஸமீபம் அனுப்பினான். அவளது ரூபலாவண்ய விலாஸங்கள் எவரையும் மயக்கத்தக்கவையா யிருந்தன. என்றாலும் அவர் மயக்கமுற்றாரில்லை. தவத்தைக் குலைக்க வந்தாளல்லவோவென்று கடுங்கோபங் கொண்டார். நீ மானிட ஸ்திரீயாய்ப் போய்விடக் கடவாயென்று சபித்துவிட்டார். பிறகு அவள் அவர் திருவடிகளைப் பிடித்துக்கொண்டு "நான் பராதீனையாகையால் எனது அபராதத்தை க்ஷமித்தருள வேண்டும்" என்று பலவாறு வேண்டிக்கொண்டாள். பிறகு தயை வரவே தேவலோகத்துப் பூமாலையைக்கண்டதும் இந்த சாபம் நீங்கிவிடுமென்று அநுக்ரஹம் செய்தார். அவளே போஜவம்சத்தில் ராஜகுமாரியாய்ப் பிறந்தாள். உனக்கு மணமாலை சூட்டினாள். உன்னுடைய பட்டமஹிஷியாய் உன்னுடன்கூட விருந்து ஸுகங்களை யனுபவித்தாள். தேவலோகத்துப் பூமாலை தற்செயலாய் மேலேவிழுந்தது. அதைப் பார்க்கவே சாபம் நீங்கிவிட்டது. தன் தேஹத்தில் தேவஸ்திரீயாய்ப் போய்ச் சேர்ந்துவிட்டாள். ஆகையால் அவளிறந்துவிட்டாளென்று நீ துக்கிக்கக் காரணமில்லை. மேலும் ஜனித்தவர்களெல்லாரும் மரித்தே தீரவேண்டும். அரசர்களை பூபதிகளென்று கூறுவார்கள். அந்த பூமியே உனக்குப் பத்னியாகப் பாவிக்கப் படத்தக்கவள். பூமியை நீ நன்றாகப் பாதுகாக்க வேண்டியவன்.

"ஸம்பத்து வந்தபோது கர்வப்படுவது ஸாதாரணமாக எல்லோர்க்கு முரியது, நீயோ அப்படியின்றி ஜ்ஞானியைப்போல் நடந்துகொண்டாய், அது அறிவின் பெருமையாலே யன்றோ? இப்போது மனதிற்குத் துயரம் நேர்ந்திருக்கிறது, இந்த ஸமயத்தில் அவ்வறிவின் பெருமையால் நீ தைரியமா யிருக்கவேண்டாவோ?

"இந்துமதியை நீ யனுமரணம் செய்திருந்தாலும் அவளுனக்குக் கிடைத்திருக்க மாட்டாளே. அழுவதினால் கிடைக்கப் போகிறாளா? ஒவ்வொரு ஆத்மாக்களும் பரலோகம் செல்லும்போது அவரவர்கள் வினைப்பயனுக் கேற்றவாறு போகுமிடம் வெவ்வேறாகவே யல்லவோ அமையும். பந்துக்கள் கண்ணீர்விட்டு அழுவதினால் இறந்தவர்களுக் கனிஷ்டமுண்

டாவதாக சாஸ்திரங்கள் கூறுகின்றன. ஆதலால் நீ சோகத்தை விட்டு விட்டு சிராத்தம் தர்ப்பணம் முதலியவைகளால்; உன் ப்ரியதமைக்குத் திருப்தி யுண்டாகச்செய்.

"அரசே! மேலும் பார், தேஹம் எடுத்தால்! அதன் ஸ்வபாவம் மரணமே. உயிருடனிருப்பதுதான் தற்செயலாய் நேர்ந்தது. ஆதலால் பிராணனுடனிருந்தவரையில் லாபமென்றல்லவோ எண்ணவேண்டும்.

"மூடர்கள் தமக்குநேரும் பந்துவியோகத்தை மார்பில் முளையடித்ததுபோலப் பெருந்துக்கமாக நினைக்கிறார்கள். புத்திமான்களோ மார்பிலிருந்த ஆணியை யெடுத்ததுபோலப் பெரிய ஸுகமாகப் பாவிப்பார்கள். மோக்ஷத்திற்கு மார்க்கந்தேட அநுகூலப்படுவதினால் இது நன்மையேயாம்.

"தேஹமும் தேஹத்திலுள்ள ஆத்மாவுமே ஒன்றை யொன்றுவிட்டுப் போய்விடுகிறதென்றால் வெளியேயிருந்து வந்து சேர்ந்தவை பிரிந்துபோவதில் ஆச்சரியம் என்ன? துயரமென்ன?

"கற்றறிவில்லா மனிதர்களைப்போல நீ இவ்விஷயத்தில் இப்படி பெருந்துக்கங் கொண்டிருத்தல் யுக்தமல்ல, மரங்கள் போலே மலைகளும் காற்றுக்கு அசைவதானால் அவற்றிற்குப் பேதமென்னவாயிற்று.

"அரசே! நீ யெல்லாவற்றையும் தீரயோசித்துப் பார்ப்பாயாக. அரசர்களுக்கு ரக்ஷிப்பதைவிட முக்கியமான தொழில் வேறொன்றும் சாஸ்திரத்தில் சொல்லப்படவில்லை."

இவ்விதமாகத் தமது குருவின் சிஷ்யர்சொன்ன தத்துவங்களை அஜமஹாராஜா ஆதரவாய்க்கேட்டு 'அப்படியே'யென்று பதில்சொல்லி மரியாதையாய் அவரை யனுப்பிவிட்டான். இவன் மனதில் சோகமே பூர்த்தியாயிருந்தபடியால் குருவின் உபதேசங்களுக்கு அங்கேநிற்க இடம் கிடைக்கவில்லை. அதனாலவை யவர் பின்னேயே போய்விட்டன போலும்.

குழந்தைக்குத் தக்கவயது வரவில்லையே யென்பதற்காகவே அஜமஹாராஜன் வெகு கஷ்டத்தோடு எட்டுவருஷகாலம் ஜீவித்திருந்து ராஜ்யபரிபாலனம் செய்து வந்தான். பாரியையது பார்வை நடை முதலியவைகளுக்குச் சமமான

மான் அன்னம் முதலியவைகளைக் காண்பதும் ஸ்வப்நத்தில் அவளைக்கண்டு பேசுவதும் இவனது துயரத்துக்குக் கொஞ்சம் ஆறுதலைக் கொடுத்தன.

ஆனாலும் நாளுக்கு நாள் அந்த சோகம் அரசன் மனதில் முற்றிவளர்ந்து ஒரு பெரிய நோயாய் முடிந்துவிட்டது. இது சாத்தியமல்ல வென்று வைத்திய ரெல்லோரும் கைவிட்டு விட்டார்கள். சிறுசெடி பெரிய கட்டிடங்களைப் பிளந்து தள்ளச் சக்திபெற்று விடுகிறதல்லவா? பாரியையைத் துடர்ந்து செல்ல வேண்டுமென்று ஆசை கொண்டிருப்பதால் அரசனுக்கு அது லாபமாகவே தோன்றியது.

முறைப்படி தமது குமாரனாகிய தசரதனுக்குப் பட்டாபிஷேகம் செய்துவைத்து அஜமஹாராஜன் கங்கையும் ஸரயுவும் சேரும் புண்ணியதீர்த்தத்தில் தேஹத்தை விட்டுவிட்டான். அதனால் தேவனாய் தேவலோகம் சேர்ந்து முன்னைவிட அழகு அதிகரிக்கப்பெற்ற பாரியையோடு தனக்கிஷ்டமானபடி நந்தன வனத்தில் ஸுகாநுபவம் செய்யலானான்.

பிதாவினால் உத்தரகோஸல தேசத்திற்கு மஹாராஜாவாகப் பட்டாபிஷேகம் செய்யப்பெற்ற தசரதர் இந்திரிய சாபலமற்றவராய் மனுநீதி முறைப்படி அரசுசெலுத்தி வந்தார். இவர் அரசாட்சி புரியும்போது ஜனங்களுக்கு ஒரு பீடையும் உண்டாகவில்லை. தனது பாட்டனாராகிய ரகுமஹாராஜாபோலே யிவரும் எல்லாதிக்கிலும் தடையின்றி ரதத்தைச் செலுத்திக் கொண்டுபோகும் ஸாமர்த்யம் பெற்றவராயிருந்தார். தன் குடிகளெல்லாரிடத்தும் ஸமதிருஷ்டியா யிருந்ததோடு பாத்திரமறிந்து வேண்டிய தானம் செய்வதும் துஷ்டர்களைத் தக்கபடி தண்டிப்பதும் தவறாது நடத்திவந்தார். வேட்டையாடல் சூதாடல் கள்ளுண்ணல் பெண்மோகம் என்னும் இத்தீக்குணங்கள் இவரை நெருங்கவே யில்லை. அவர் இந்திரனிடத்தும் கூடத் தீனமாகப் பேசுவதில்லை. வேடிக்கை வார்த்தைகளிலும் பொய் சொல்வதில்லை. சத்துருவைக்கூடக் கடிந்து வார்த்தை யாடுவதில்லை ஆஜ்ஞைக்கு அடங்கி நடக்கும் அரசர்களை யாதரித்தும் எதிர்ப்பவர்களை ஜயித்து அடக்கியும் வந்தார்.

முன்னோர் வழக்கப்படி யிவர் திக்விஜயமும் செய்தார். இந்திரன் தனது நூறு நுனியுடைய வஜ்ராயுதத்தால் பர்வதங்

களின் பக்ஷங் (இறகு) களையறுத்துத் தள்ளினன். தசரதர் பாணங்களைப் பிரயோகிக்கும் தமது வில்லினல் சத்துரு ராஜாக்களின் பக்ஷங் (துணைவர்) களை யழித்துவிட்டார். அனேக அரசர்கள் தங்கள் கிரீடங்கள் இவர் கால்நகங்களில் படும்படி தரையில் விழுந்து வணங்கி விட்டார்கள். அப்படி வணங்காதவர்களை யுத்தஞ்செய்து கொன்றுவிட்டதனல் அவ்வரசர்களது இளம் பிள்ளைகளை யெடுத்துவந்து அந்தந்த ராஜமந்திரிகள் கைகூப்பச் செய்வதால் கைம்பெண்களாய்விட்ட ராஜபத்நிகளுக் கிரங்கி அக்குழந்தைகளுக்கே அவ்வவ்வரசாக்ஷியைக் கொடுத்துதவினர். இப்படி தசரதர் எல்லா அரசர்களையும் ஜயித்து சக்கரவர்த்தியாயிருந்தும் ராஜபோகங்களில் விசேஷப் பற்றில்லாமலே நீதிமுறை பிறழாது அரசுசெய்து வந்தார்.

தக்ஷிண கோஸலதேசத்து ராஜகுமாரியாகிய கௌஸல்யையையும் மகததேசத்து ராஜகுமாரியாகிய ஸுமித்ரையையும் கேகயதேசத்து ராஜகுமாரியாகிய கைகேயியையும் அவர் விவாஹம் செய்துகொண்டார். அரசர்களொவ்வொருவருக்கும் பிரபு சக்தியென்றும் மந்த்ர சக்தியென்றும் உத்ஸாஹ சக்தியென்றும் மூன்றுசக்திகள் வேண்டும். இவருக்கு இம்மூன்று பாரியைகள் நேர்ந்திருப்பது அம்மூன்று சக்திகளும் உருவெடுத்து வந்திருப்பதுபோல் காணப்பட்டது.

தேவதைகளுக்கும் அஸுரர்களுக்கும் யுத்தம் நேரும் ஸமயங்களில் இவர் தேவர்களுக்கு ஸஹாயமாயிருந்து அஸுரர்களைஜயித்து இந்த்ரனேடு அர்த்தாஸநத்திலிருந்து பலமுறை மரியாதை பெற்றிருக்கிறர். இவரது கீர்த்தியைத் தேவலோகத்து ஸ்திரீகள் அப்போதப்போது பாடுவார்கள்.

விதிமுறைப்படி இவர் பல யாகங்கள்செய்து ஸரயூநதிக்கரை முழுதும் யூபஸ்தம்பமாகவே யாகச் செய்துவிட்டார். யாகத்தில் தீக்ஷிதரா யிருக்கும்போதும் யாகம்முடிந்து அவப்ருதஸ்நாநம் செய்யும்போதும் இவரதுதேஹம் விசேஷமான வைதிக சோபையோடு சாந்தமாய் விளங்கும். யுத்தத்திற்குப் புறப்படும்போதும் யுத்தம் செய்யும்போதும் பெரிய பிரதாபத்தோடு க்ரூரமாய்க் காணப்படும்.

இவ்வாறு தசரதர் அரசாக்ஷி செய்துவரும் காலத்தில் ஒரு வஸந்த ருது ஸந்தித்தது. முதலில் புஷ்பங்களும் அதற்கடுத்து புதிய தளிர்களும் அதையடுத்து குயில்களும் வண்டுகளும் கூவுவதும் இம்முறையே வஸந்தகாலம் உபவனமெங்கும் பரவியது. குளமெங்கும் தாமரைமலர்கள் நிரம்பி யலர்ந்தன. அவற்றின்மேலே வண்டுகள் மொய்த்திருந்ததால் அவை கருநெய்தல்போலே காணப்பட்டன. தோட்டமெங்கும் அசோகமரங்கள் புஷ்பித்துப் பிரகாசித்தன. அதன் கொத்துக்களைப் பெண்மணிகள் காதில் அணிந்துகொள்ள லானார்கள். மருதோன்றிச் செடிகள் நிறையப் புஷ்பித்தன வாதலால் வண்டுகளின் ரீங்காரம் வெகு அதிகமாயிற்று.

பெண்மணிகள் வாயினு லுமிழ்ந்த மத்தியமே யெருவாக மலரரும்பி விகஸித்த மகிழ மரங்களில் வண்டுகள் கொஞ்சம் கூட இடமில்லாமல் மொய்த்துக் கொண்டிருந்தன. பலாசஞ் செடிகள் எல்லாம் செக்கச் செவேலென்று மொக்கு விட்டிருந்தன. அப்போதும் பனி கொஞ்சம் கொஞ்சம் இருந்துகொண்டிருந்தது. அதனுல் ஸ்திரீகளின் அதரங்களில் வெடிப்பு இருந்துகொண்டிருந்தது. அரைநூல் மாலைகள் கட்டிக்கொள்ளவும் ஸாத்தியப் படவில்லை.

ஒட்டுமாமரங்கள் எல்லாம் அரும்பு நிரம்பித் தென்றலால் துளிர்கள் அசைந்துகொண்டிருந்தது இளம்பெண்கள் ஆபரணங்கள் அணிந்து அபிநயம் செய்வதுபோலிருந்தது. வண்டுகளின் ரீங்காரங்கள் அதற்குப் பாட்டாகவும் புஷ்பங்கள் புன்சிரிப்பு சிரிக்கும் பற்களாகவும் தளிர்கள் காற்றிலசைவது லயத்துக்கேற்பக் கை யசைவதாகவும் தோட்டத்துக் கொடிகள் சிறுபெண்களாகவும் தோற்றம் தந்தன.

அவ்வஸந்தகாலத்தில் பகற் பொழுதைவிட இராப்பொழுது வெகு இன்பமாயிருந்தது. நிலவும் தென்றலும் சேரவே அவரவர்கள் இஷ்டப்படி வேண்டிய ஸுகங்களை யநுபவித்து திருப்தியடைந்தார்கள். சண்பகம் திலகம் நவமாலிகை மாதவி முதலிய மரங்களும் கொடிகளும் வெகு அழகாகப் புஷ்பித்திருந்தன. தென்றல்காற்று புஷ்பங்களின் தூள்களை யெங்கும் பரப்பவே வண்டுகள் வாசனைக்காக அதைப் பின்தொடர்ந்து சென்றுகொண்டிருந்தன. தம்பதிகளாக இருந்து ஊசலாடிக்

கொண்டிருக்கும் பெண்மணிகள் ஏதோ ஒரு எண்ணத்தால் ஊசற் கயிற்றைப் பிடித்துக்கொள்ளாமலே யிருந்தார்கள்.

தசரதமஹாராஜா தமது பத்நிகளோடு அந்த வஸந்த ருது வில் இஷ்டப்படி ஸுகாநுபவம் செய்துவிட்டுப் பிறகு வேட் டையாட வேண்டுமென்று ஆரம்பித்தார் வேட்டையென்பது ஆபத்துக் கிடமானதும் அடிக்கடி அதிலேயே புத்தி செல் லும்படி யிழுக்கக்கூடியது மாகையாலே சூதாட்டங்கள் குடித் தல் முதலிய தீய வழக்கங்களோடு சேர்த்து அரசர்களுக்கு இது வ்யஸநமென்று சாதாரணமாகச் சொல்லப்பட்டாலும் தேஹப்பயிற்சி முறையில் முக்கியமாய் உடம்பை யிளைக்கச் செய்து இலகுவாக்குவதாலும் குறியாகவைக்கப்பட்டவை பசைந்துகொண் டிருக்கும்போதே குறிதப்பாமல் அடிக்கப் பழக்க முண்டாவதாலும் பயம் கோபங்களில் பிராணிகளின் குறிப்பறியப் படுவதாலும் மந்த்ரிமார்கள் யோசித்து அநுமதி செய்தபடியால் இவர் வேட்டைக்குப் புறப்பட்டார்.

காட்டுக்கொடியால் தலைமயிரை யிறுகக் கட்டிக்கொண்டு கையில் வில்லும் பாணமுமாய் வேட்டை நாய்களும் வேட்டை யாள்களும் சூழ்ந்துவரக் குதிரைமேலேறிக்கொண்டு காட்டுக் குள் பிரவேசித்தார். காமந்தகம் முதலிய நீதிநூல்களில் கூறி யுள்ளபடி முன்னதாகவே தக்க சாரர்களால் காட்டில் திருடர் களாவது சத்துருபக்ஷத்தாராவது காட்டுத்தீயாவது இல்லை யென்று தெரிந்துகொண்டு பிறகு வேட்டைக்குத் தொடங்கி னார். மான்கள் சாமரமான்கள் காட்டுப்பன்றிகள் காடிகள் புலிகள் சிங்கங்கள் முதலிய பற்பலப் பிராணிகளை வேட்டை யில் அடித்துக் கொன்றார்.

ஒருமானை யடிக்கவேண்டி வில்லை யிழுத்தபோது அதன் பேடைவந்து அதை மறைத்துக்கொண்டு நின்றது. அதைப் பார்த்து இரக்கம்கொண்டு அதை அடியாமல் விட்டு விட்டார். அனேகமான்கள் கண்ணழகுக்காக இரங்கி அடிக்காமல் விடப்பட்டன. காட்டுப்பன்றிகள் எதிர்த்து மேலே பாய ஆரம் பிக்கும்போதே அவற்றையடித்து அவற்றின் பின்பாகங்கள் மரங்களில் பாணங்களால் பிணைக்கப்பட்டுப் போம்படி பாண பிரயோகம் செய்தார். காட்டுக்கடாக்களை கண்களில் குறிவைத் தடித்து வீழ்த்தினார். காட்டுமிருகங்களின் கொம்புகளை யறுத் துத் தள்ளினார். அவைகள் வெகுவாகக் கொல்லப்படவில்லை.

புலிகள் வாயைத் திறந்துகொண்டு பாயவரும்போதே அவற்றின் வாய்நிறைய பாணங்களைப் பொத்திநிரப்பினார். புதறுகளில் பதுங்கியிருக்கும் சிங்கங்களை வெருட்டி வெளிவரச் செய்து அவற்றை யடித்தார். சில அரசர்களின் சாமரத்தைப் பிடுங்கிக்கொண்டு விட்டுவிடுவதுபோல் சமரமான்களின் வால் மயிர்களை மாத்திரமே அறுத்துக்கொண்டு துரத்திவிட்டார். மயில்களின் தோகையழகுக்காக அவற்றை யநேகமாய் அடிக்கவில்லை.

இப்படி ஸந்தோஷமாக வேட்டையாடும் ஸமயத்தில் சரீரத்தி லுண்டான வேர்வைகள் போம்படி காட்டுக்காற்று மெதுவாய் வீசிற்று. அதனால் தசரதமஹாராஜா சிரமபரிஹாரம் செய்துகொண்டு அந்த வேட்டையில் உண்டான மனப்பற்றாலே அன்றிரவு அந்த வனத்திலேயே துளிர்களைப் பரப்பி யதில் படுத்து நித்திரைசெய்தார். அதிகாலையில் யானைகள்செய்த சப்தத்தால் தூக்கம்போய் எழுந்து யாருக்குந்தெரியாமல் குதிரைமேலேறிக்கொண்டு வில்லும் பாணமுமாய் தமஸா நதிக்கரை போய்ச்சேர்ந்தார். அந்நதியில் மற்றோர் துறையில் குடத்தில் ஜலம்மொள்ளுகிற சப்தம் காதில் கேட்டது. யானையின் குரலென்று நினைத்தார். நேரே பாராதுபோனாலும் சப்தத்தைக்கேட்டே குறிவைத்தடிக்கும் சாமர்த்திய முடையவ ராகையாலே அங்கிருந்தே பாணத்தைப்ப்ரயோகம் செய்துவிட்டார். யானையை வேட்டையாடக் கூடாதென்று சாஸ்திரமிருப்பது தெரிந்திருந்தே மதிமயங்கி அவர் அந்த அகிருத்தியம் செய்தார்.

"அய்யோ அப்பா!" என்னும் குரல் அவ்விடத்தி லிருந்து கேட்டது. உடனே பயந்து அங்கே ஓடித்தேடிப் பார்த்ததில் குடமுங் கையுமாய் ஒரு ருஷிகுமாரன் மார்பில் அம்பு தைத்து விழுந்திருக்கக் கண்டார். பயமும் துக்கமுமாய் அவனை விசாரிக்க, தான் பிராஹ்மண ரல்லாத தபஸ்வியின் மகனென்று சொன்னான். அவன் கேட்டுக்கொண்டபடி அந்தபாணத்தைப் பிடுங்காமலே அவனை யெடுத்துக்கொண்டு அவன் தாய் தந்தைகளிருந்த இடத்தில் கொண்டுபோய்விட்டுத் தெரியாமல் தான்பெரும் அநியாயம் செய்துவிட்டதாய் அரசனே தெரிவித்தான். அவ்விருவரும் கொஞ்சமும் கண்தெரியாத குருடர்கள். பெரிய கிழவர்கள். இவனொரேபிள்ளை. வெகு நாழிகை யழு


தார்கள். அரசனைக்கொண்டே அவன் மார்பில் தைத்த பாணத்தைப் பிடுங்கவைத்தார்கள். உடனே அவன் பிராணன் போய்விட்டது. கிழவர்களுக்குத் துக்கம் பொங்கிற்று. எங்களைப்போலே நீயும் கிழவயதில் புத்ரசோகத்தாலேயே மரணமடையக் கடவாயென்று அரசனைச் சபித்துவிட்டார்கள்

புத்ரபாக்கியம் பெற்றிராத என்னைத் தாங்கள் சபித்த இந்த சாபம் எனக்கு அநுக்கிரஹமேயாகிறது. முதலில் தரை கொளுத்தப்பட்டாலும் பிறகு அது பயிர்விளையச் செய்வதாகிறதல்லவோ? பெரும்பாவியாகி அதனால் உங்களால் கொல்லப்படத்தக்க யான் தங்களுக்கு எந்தவிதம் செய்யவேண்டுமோ உத்தரவு செய்யவேண்டுமென்று தசரதன் அவர்களை வேண்டிக் கொண்டார். பிள்ளையுடன்கூடத் தாங்களும் அக்னிக் கிரையாய்விட வேண்டுமென்றும் அதற்காகச் சிதைபேற்பாடு செய்துகொடுக்க வேண்டுமென்றும் அவர்கள் கேட்டுக் கொண்டார்கள்.

அரசன் தனது வேலைக்காரர்களைக்கொண்டு பெரிதாகச் சிதை யேற்பாடு செய்தான். அவர்கள் அதில் பிரவேசித்து அக்னிக் கிரையாகி புத்ரசோக துக்கத்துக்குத் தப்பினார்கள். அரசனோ மூன்று தபஸ்விகளின் பிராணனையும் போக்கினவன் நானே யென்னும் மனவேதனையோடு அயோத்தியா நகரம் போய்ச் சேர்ந்தான். சாபஸமாசாரம் மனதிலே யிருந்து கொண்டே யிருந்தது. இவ்விதம் மனக்குறையோடும் ராஜ போகங்களோடும் மனுமுறைப்படி தசரதமஹாராஜா சாபம் பெற்ற பிறகு ஏறக்குறைய பதினாயிரம் வருஷம் அரசாக்ஷி செய்துவந்தார்.

வெகுகாலம் வரையில் அவருக்குப் புத்திரப்பேறு இல்லாமலே யிருந்தது. ருச்யச் ருங்கர் முதலிய மஹாமுனிகள் அவருக்குப் புத்ரகாமேஷ்டி நடத்தி வைத்தார்கள்.

ராவணனால் பலவாறு பாதைகளை யநுபவிக்கும் தேவர்களெல்லாரும் ஒன்றுகூடி விஷ்ணுவிடம் முறையிட்டுக்கொள்வதற்காக க்ஷீரஸமுத்திரம் போய்ச்சேர்ந்தார்கள். அப்போது பகவான் நித்திரை தெளிந்தெழுந்தார். நினைத்தகாரியம் கைக்கூடுவதற்கு அது ஒரு அறிகுறிபோலிருந்தது.



தேவர்கள் பகவானைப் பிரார்த்தித்தல்.

நாராயணன் ஆதிசேஷனைப் பாயாகக்கொண்டு அதன் மேல் சயனித்துக்கொண்டிருக்கிறார். சேஷனது தலைகள் இவர் முடிமேல் குடைபோல் கவிந்திருக்கிறது. அவைகளிலுள்ள ரத்ந காந்திகள் பகவான் தேஹத்தில் படிந்து அதிக பிரகாசத்தைக் கொடுத்துக்கொண் டிருக்கின்றன. லக்ஷ்மி தேவி மடிமேல் பட்டாடைவிரித்து அதில் இருகரங்களையும் வைத்துக்கொண்டிருக்கிறாள், அக்கைகளின்மேல் பகவானது பாதங்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. இளம்வெயில்போன்ற ஆடையும் செந்தாமரை மலர்போன்ற கைகளுமாய் பகவான் காணப்படுவது சரத்காலத்திய பகல்காலம் போலிருக்கிறது. அகன்ற மார்பும் அதில் ஸ்ரீவத்ஸமென்னும் மருவும் கௌஸ்துவமென்னும் ரத்னமும் ஜ்வலித்துக்கொண் டிருக்கின்றன. அனேகாபரணங்கள் அணிந்த நான்கு புஜங்களோடு பகவான் ஸேவை தருவது நான்கு கிளைகளோடு மற்றொரு பாரிஜாத மரம் க்ஷீரஸமுத்திரத்தில் தோன்றி யிருப்பதுபோல் இருக்கிறது. அவரது ஐந்து ஆயுதங்களும் ஸமீபத்தில் புருஷரூபமாய் ஜயஜயவென்று சொல்லிக்கொண்டு நிற்கின்றன. இந்த்ரனோடு யுத்தம் செய்தபோது உண்டாகிய வஜ்ராயுதத்தின் அடிக்குறிகளோடு கருடன் ஆதிசேஷனோடே விரோதம் பாராட்டாமல் வணக்கமாய்க் காத்துக்கொண்டிருக்கிறார். பிருகு முதலிய மஹர்ஷிகள் நல்லுறக்கம் கேட்பதற்காக வந்து நின்று கொண்டிருக்கிறார்கள். அவர்களை பகவான் ஆதரவோடு கடைக்கண்களால் தூங்கியெழுந்த அவஸரத்திலேயே பார்த்து அநுக்ரஹித்துக் கொண்டிருக்கிறார்.

அந்த அவஸரத்தில் தேவர்கள் அவருக்கு ஸாஷ்டாங்கமாக நமஸ்காரம் செய்து பக்தி ச்ரத்தைகளோடு ஸ்துதி செய்யலானார்கள்:—

"ஸ்வாமீ! த்ரிமூர்த்தி ரூபராய் இப்ப்ரபஞ்சத்தைப் படைப்பது காப்பது அழிப்பது இம்மூன்று க்ருத்தியத்தையும் தாமேயல்லவோ நடத்துகிறீர்? நீர் அளவிட முடியாதவர், லோகங்களை யளந்திருக்கிறீர். வேண்ட வேண்டியதொன்று மில்லாதவர், எல்லாராலும் வேண்டப்படுகிறீர். ஒருவராலும் ஜயிக்கப்படாதவர், எல்லாவற்றையும் ஜயித்திருக்கிறீர். ஸூக்ஷ்மரூபியாயிருப்பவர், எல்லா லோகத்திற்கும் காரணமாயிருக்கிறீர். எவராலும் அறியப்படாதவர், எல்லாவற்றையும் அறிந்தவர்.

ஸ்வயம்பூவானவர். எல்லாவற்றிற்கும் உத்பாதகர். தமக்கு மேல் ஈச்வரன் இல்லை. நீரே எல்லாவற்றிற்கும் ஈச்வரன். நீர் ஒருவராயிருக்கிறீர், ப்ரபஞ்ச வடிவாயிருக்கிறீர்.

"உம்மை ஏழுவகை ஸாமங்களும் ஸ்துதிசெய்கின்றன, ஏழு ஸமுத்திரமும்சேர்ந்தஜலத்தில் சயனிப்பவர், ஏழு லோகங்களுக்கும் நாதன், ஏழு ஜ்வாலையையுடைய அக்நி முகமாக நீர் யாகத்தில் பூஜிக்கப்படுபவர். நாலுவகை புருஷார்த்தங்களையும் கொடுக்கும் ஜ்ஞானமும் நாலு யுகமென்னும் காலபேதமும் நாலு வர்ணமாக வகுப்பட்ட பிரபஞ்சமு மெல்லாம் நாலு முகமுடைய உம்மால் உண்டாகின்றன. வெகுகாலப் பழக்கத்தால் மனதை நிலைநிறுத்திக்கொண்ட யோகிகள் தங்கள் தங்கள் ஹ்ருதயகமலத்தில் ஜ்யோதிர்மயமாகிய தம்மைத் தியானம்செய்து முத்தி பெறுகிறார்கள்.

"பிறப்பில்லாத நீர் ஒரு அபேக்ஷையு மில்லாதிருந்தும் பிறப்பதும் சத்ருக்களை அழிப்பதும் எப்போதும் விழித்துக் கொண்டே யிருப்பவர் நித்திரை செய்வதுமா யிருப்பதால் தமது உண்மையை யார் அறிய வல்லவர்? தாம் ஸுகாநுபவம் செய்யவும் வல்லவர், கடுந்தவம் செய்யவும் வல்லவர் ஜனங்களைக் காப்பாற்றவும் வல்லவர், உதாஸீனமாயிருக்கவும் வல்லவர்.

"ஸித்திக்காகப் பலபல விதமாக வேதங்களில் மார்க்கங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன, என்றாலும் கங்கையின் ப்ரவாஹங்கள் பலமுகமாகப் ப்ரவஹித்தாலும் எல்லாம் ஸமுத்திரத்திலேயே போய்ச்சேர்வதுபோல அவையெல்லாம் தம்மையே சேருகின்றன.

"கர்மங்களைத் தமக்கே அர்ப்பணம் செய்துவிட்டு வேறு பற்றில்லாது தம்மையே த்யானம்செய்யும் மஹாபுருஷர்களுக்குத்தாம் முத்தி தருகிறீர்கள் தம்மை நினைப்பது மாத்திரத்தாலேயே எல்லாரையும் தாம் பரிபாலிப்பதால் தம்மை ஸ்துதிப்பது அர்ச்சிப்பது செய்பவர் விஷயத்தில் வேறு சொல்ல வேண்டுமோ? தமக்கு இல்லாது வேறொருவரை வேண்டிப் பெற வேண்டியது யாதொன்றும் இல்லை, லோகாநுக்ரஹத்துக்காகவே தாம் அவதரிப்பதும் சத்ருவதம் முதலியவை செய்வது

மாகும் தம்மை ஸ்துதி செய்கிறவர்கள் ஸ்தோத்திரத்தை முடிப்பது அவரவர் அசக்தியாலே யல்லது தமது குணங்களின் குறைவாலல்ல. (எல்லாம் சொல்லி யாய்விட்ட தென்பதால் அல்ல)"

இப்படி தேவர்கள் கூறியது முழுவதும் இருப்பதைச் சொன்னதே யல்லது ஸ்தோத்திரம் அல்ல. இதனால் பகவான் ஸந்தோஷித்து அவர்களை ஆதரித்து க்ஷேமமா வென்று வினவினர். தேவர்கள் இராவணனால் தாங்கள் படும்பாடுகளை யெல்லாம் விவரமாய் எடுத்துச் சொன்னார்கள். அதற்குப் பகவான் தமது குரல் கடலோசையை யடக்கிக் கரையோரத்து மலைகளில் பிரதித்வநி செய்யும்படி தேவர்களைப் பார்த்து:—

"தேவர்களே! மனிதர்களின் ஸத்வகுணம் ரஜோகுணமிரண்டும் தமோகுணத்தால் அடக்கப்படுவதுபோல உங்கள் பெருமையும் பலமும் இராவணனால் அடக்கப்பட்டிருப்பது தெரியும். தற்செயலாய்ப் பாவச் செய்கை நேர்ந்துவிட்டால் அதனால் மஹாத்மாவான ஸாதுவின் மனம் துன்பப்படுவது போல அந்த ராவணனது செய்கையால் மூவுலகமும் துன்பப்படுவதும் தெரியும். நானும் இந்த்ரனும் ஒரே காரியத்திற்காக இருப்பவர்களாகையால் இவ்விஷயமாய் அவன் பிரார்த்திக்க வேண்டிய தொன்றுமில்லை. காற்று நெருப்புக்கு உதவி புரிவது தானாகவேயன்றோ? இராவணன் தனது ஒன்பது தலைகளையும கத்தியால் அறுத்துப் பரமசிவனுருக்காக அர்ப்பித்தானன்றோ, அப்போது அறுக்காமல் நிறுத்தின பத்தாவது தலை என் சக்கிரத்தின் பாகமாகும். பாம்பு செய்யும் எல்லா சேஷ்டைகளையும் சந்தனமரம் பொறுத்துக்கொண்டிருப்பது போல அவன் செய்யும் அக்ரமங்களை நான் இதுவரையில் பொறுத்திருந்தது ப்ருஹ்மா அவனுக்குக் கொடுத்த வரத்திற்காகவேயாம். அவன் வெகுகாலம் கடுந்தவம்செய்து ப்ருஹ்மாவை ஸந்தோஷிக்கச் செய்து எந்த தேவதையாலும் தான் கொல்லப்படாம லிருக்கும்படி வரம் பெற்றான். மனிதர்களை அவன் இலக்ஷியம் வைக்கவில்லை. நான் தசரதராஜனது புத்திரனாகி மனிதனாகப் பிறந்து எனது பாணங்களால் ராவணன் தலைகளை யறுத்து யுத்தபூமிக்குப் பலிபோடுகிறேன். யாகம் செய்யும் பெரியோர்கள் யாகத்தில் உங்களுக்குக் கொடுக்கும்

பாகம் ராக்ஷஸர்களின் மாயையால் பறிக்கப்படாமல் கிரமமாக உங்களுக்குச் சேரும்படி கூடியசீக்கிரத்தில் ஆகும். அவரவர்கள் செய்த புண்யபலத்தால் தேவலோகத்தை யடைந்து விமானத்திலேறி யுலாவும் பாக்கியசாலிகள் ராவணனைக் கண்டதும் பயந்து நடுங்கி மேகங்களில் மறைந்துகொள்ளும் வழக்கத்தை யினி விட்டுவிடலாம். நளகூபரன் சாபத்திற்குப் பயந்திருப்பதால் ராவணன் கையால் மயிரைப் பிடித்திழாமலே கொண்டுபோய் சிறைப் படுத்தியிருக்கும் தேவலோகத்து ஸ்திரீகளைத் துரையில் சிறைமீட்டுக் கொண்டுபோவீர்கள்.''

என்று இவ்வாறு தேறுதல்செய்து அந்தர்த்தான மாய்விட்டார். (இவ்வாக்காகிற அமிருதத்தை தேவர்களாகிற பயிர் மீது பொழிந்துவிட்டு அந்த கிருஷ்ணமேகம் மறைந்துவிட்டது) தங்கள் காரியம் செய்வதற்காகப் பகவான் பூமியில் அவதரிக்கப் போகிறபடியால் தேவர்களும் தங்கள் தங்கள் அம்சங்களைப் பூமியில் பிறப்பித்தார்கள். அவர்களே வாநர ஸேனாவீரர்கள்.

தசரத மஹாராஜாவிற்காகச் செய்யப்பட்ட புத்திர காமேஷ்டியின் முடிவில் ருத்விக்குக்கள் முதலிய எல்லோரும் ஆச்சரியப்படும்படி அக்நிகுண்டத்திலிருந்து தேஜோரூபமாய் ஒரு மனிதன் தோன்றினன். அவன் கையில் சருவோடு கூடிய ஸ்வர்ணபாத்திர மொன்றிருந்தது. அந்தச் சருவில் பரமாத்மாவான ஸ்ரீமந் நாராயணமூர்த்தி அநுப்ரவேசம் செய்திருந்தபடியால் அதைத் தாங்குவது அவனுக்குக் கஷ்டமாகவே யிருந்தது. ஸமுத்திரம் கொடுத்த அமிருதத்தை இந்த்ரன் பெற்றுக்கொண்டதுபோல பிருஹ்மாவினுல் அனுப்பப்பட்ட அப்புருஷன் கொண்டுவந்து கொடுத்த அந்த ஹவிஸ்ஸை தசரதர் பெற்றுக்கொண்டார்.

ஜகத்துக்கெல்லாம் காரண பூதனுகிய பகவானே இவருக்குப் புத்திரனுக வந்துபிறக்க ஆசைப்பட்டார் என்றுல் இந்த தசரதரது பெருமையைப்பற்றி வேறுகூறவேண்டுமோ? விஷ்ணுவின் தேஜோமயமாகிய அந்தச் சருவை அவர் கௌஸல்யை கைகேயி இவ்விரு பத்நிகளுக்கும் பங்கிட்டுக்கொடுத்தார். கௌஸல்யை பெரிய மஹிஷியும் கைகேயி மனதிற்குகந்த மனைவியுமாகையால் அவர்களே ஸுமித்ரா விஷயத்தில் தகுந்தபடி

நடந்து கொள்ளட்டுமென்பது அவரது எண்ணம். அவர்களும் அரசனது கருத்தை யறிந்துகொண்டு தங்கள் பாகத்தில் ஒவ்வொருபங்கு ஸுமித்ரைக்குக் கொடுத்தார்கள். ஸுமித்திரை அவ்விருவர்களுக்கும் இஷ்டமாயிருந்தவள்.

அந்த ஹவிஸ்ஸை யுட்கொண்ட தினமே அம்மூவரும் கர்ப்பவதிகளாய் விட்டார்கள். கர்ப்பத்தினால் அவர்கள் உடம்பு வெளுத்திருந்தது கதிர்பிடித்த பயிர்கள் வெளுப்பதுபோலிருந்தது. அவர்கள் தூங்கும்போது சக்ரம் சங்கம் சார்ங்கம் கதை கத்தி யிவைகளைத்தரித்த குள்ளர்கள் தங்களைச் சுற்றிக் காவலிருப்பதாகவும், கருடன் மேலேறிக்கொண்டு தாங்கள் ஆகாயமார்க்கமாய்ப் போவதாகவும், கௌஸ்துப ரத்நத்தை மார்பில் தரித்துக்கொண்டிருக்கும் லக்ஷ்மிதேவி தாமரைப் பூவினால் தங்களுக்கு வீசுவதாகவும், ஸப்தரிஷிகள் கங்கையில் ஸ்நாநம் செய்துவந்து வேதரஹஸ்யங்களால் ஸ்துதி செய்வதாகவும், கனாக்கண்டார்கள். அவர்களால் இக்கனாமுறைகளைக் கேட்ட தசரத சக்கிரவர்த்திக்குத் தாம் ஜகத்பதிக்கே பிதாவாகப் போகிறோமே யென்னும் ஸந்தோஷம் அளவிடமுடியாது வளர்ந்தது. ஒரே சந்திரன் ஜலத்தின் அலைகளில் பல சந்திரனாய்ப் பிரகாசிப்பதுபோல ஜகத்காரணமூர்த்தியான நாராயணனொருவனே நாலு ரூபமாக அவர்களினுதரத்தில் வாஸம் செய்தான்.

இரவில் ஜ்வலிக்குங் கொடி அஸ்தமயமானதும் இருளைப் போக்க வல்லப் ப்ரகாசத்தைப் பெறுவதுபோல கௌஸல்யையானவள் பிரஸவகாலம் வந்ததும் பேரிருளையெல்லாம் போக்கும் ஸ்வயம் ப்ரகாசமான பிள்ளையைப் பெற்றாள். அப்பிள்ளையின் மேனியி னொளிக்கேற்றவாறு குருவானவர் அவனுக்கு ராமனென்று பெயரிட்டார். ரகுமஹாராஜாவினது வம்சம் தழைக்கும்படி யுதித்த அக்குழந்தையின் தேஜஸ்ஸிற் கெதிரே அவ்வறையின் விளக்குகள் ஒளிவிளங்கவே யில்லை.

மறுநாள் கைகேயிக்குப் பரதனென்னும் புத்திரன் பிறந்தான். வணக்கமென்னும் குணம் ஸம்பத்திற்குப் பெருமையை யுண்டாக்குவதுபோல் பரதனால் கைகேயிக்குப் பெருமை யுண்டாயிற்று. நன்றாக அப்யாஸம் செய்யப்பட்ட வித்தையால் ப்ருஹ்ம ஜ்ஞானமும் இந்திரிய ஜயமும் உண்டாக்கப்

படுவதுபோல ஸுமித்ரையால் லக்ஷ்மண சத்துருக்நர்கள் என்னு மிரட்டைப் பிள்ளைகள் பெறப்பட்டார்கள்

அப்போது லோகத்திலெங்கும் தோஷமென்பதே யில்லாமல் குணமே குடிகொண்டது. பகவானைப் பின்துடர்ந்து ஸ்வர்க்கமே பூலோகம் வந்துவிட்ட தென்னலாம் போலிருந்தது தூளில்லாமல் சாந்தமான குளிர்ந்த காற்று வீசியது இதுவரையில் இராவணனுக்குப் பயந்திருந்த எட்டுதிக்கு பாலகர்களும் தைரியமாய் ஸந்தோஷத்தோடு மூச்சுவிட்டது போலிருந்தது. அக்நி புகையில்லாமலும் ஸூர்யன் மழுங்காமலும் பிரகாசித்தார்கள். அது இனி பயமில்லையென்று அவர்கள் தைரியம் கொண்டதுபோலிருந்தது. அப்போது இராவணனது கிரீடத்திலிருந்து ரத்நங்கள் உதிர்ந்தது ராக்ஷஸ ஸம்பத்து கண்ணீர் விடுவதுபோலிருந்தது.

பிள்ளை பிறந்த ஸந்தோஷத்திற்காக ராஜகிருஹத்தில் பேரிகள் அடிக்கப்படுவதற்கு முன்பே தேவதுந்துபிகள் முழங்கின. ஸந்தான புஷ்பங்கள் ராஜகிருஹத்தி னடுவில் தேவலோகத்திலிருந்து மழைபோல் பொழியப்பட்டன.

ஜாதகர்மம் முதலியவைகள் முறைப்படி நடந்தன. அப்பிள்ளைகள் நால்வரும் நாளொருமேனியும் பொழுதொரு வண்ண முமாக வளர்ந்தார்கள். பிதாவி னனந்தமோ அவர்களைவிட அதிகமாக வளர்ந்தது. ஸ்வபாவமாகவே யக்நிக்கிருக்கும் தேஜஸ்ஸு நெய்முதலிய ஹவிஸ்ஸினால் அதிகரிப்பதுபோல அவர்களுக்கு ஸ்வபாவமாயுள்ள விநயமென்னும் குணம் சிக்ஷையால் (ஆசிரியர்களின் உபதேசத்தால்) மிகவும் பிரகாசப்பட்டது. ஆறு ருதுக்களும் ஒன்றாய்ச்சேர்ந்து தேவலோக வனத்தை பிரகாசிக்கச் செய்வதுபோல இந்நான்கு குமாரர்களும் ஒருவர்க்கொருவர் விரோதமில்லாது ஸ்நேஹமாயிருந்து ரகுவின் வம்சத்தைப் பெருமைப்படுத்தி வைத்தார்கள். ஒருவர்க்கொருவர் ப்ராத்ரு ஸ்நேஹத்தில் நால்வரும் ஒத்தவர்களாயிருந்தும் இராமனும் லக்ஷ்மணனும் ஒரு இணையாயும் பரதரும் சத்ருக்நனும் ஒரு இணையாயும் வளர்ந்தார்கள். அக்நிக்கும் வாயுவுக்கும் உள்ள சேர்க்கைபோலவும் சந்திரனுக்கும் சமுத்திரத்திற்குமுள்ள சேர்க்கைபோலவும் அவ்விரு இணைகளு

டைய சேர்க்கையும் எவ்வகையிலும் பேதப்படுத்தக் கூடியதாயிருக்கவில்லை.

அவர்களது தேஹகாந்தியும் விநயமும் க்ரீஷ்மகாலத்தின் முடிவில் மேகத்தோடுகூடிய பகல் பொழுதுபோல எல்லா ஜனங்களின் மனதையும் சந்தோஷிக்கச் செய்தது. இவ்வரசனது வம்சத்தில் நான்கு குமாரர்கள் உதித்தது அறம் பொருள் இன்பம் வீடு என்னும் நான்கு புருஷார்த்தங்களும் உருவெடுத்து வந்ததுபோலிருந்தது. சக்கிரவர்த்தியாகிய தசரதரை நாலு ஸமுத்திரங்களும் ரத்நங்களால் திருப்தி செய்விப்பதுபோல இந்நான்கு குமாரர்களும் அவரைத் தங்கள் குணங்களால் ஸந்தோஷிப்பித்தார்கள். அசுரர்களின் ஆயுதங்களை முறிந்துபோகச் செய்யும் நான்கு தந்தங்களினால் ஐராவதம்போலவும் பலம் கைகூடப்பெற்ற ஸாமம் தானம் பேதம் தண்டம் என்னும் நான்கு உபாயங்களால் ராஜநீதி போலவும் முழங்காலளவு நீண்ட நான்கு கைகளால் மஹாவிஷ்ணுபோலவும் அவ்விஷ்ணுவின் அம்சமாகிய நான்கு குமாரர்களால் தசரத மஹாராஜா மிகவும் பிரகாசித்தார்.

1—வது பாகம் முற்றிற்று.

Printed at the S.P.C.K. Press, Vepery, Madras—B. 9078.